27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com







நதி 27 பாலம் 15 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் AUGUST 01, 2017

# கனேடிய ஆளுநராக விண்வெளி வீராங்கனை

கனடாவின் அடுத்த ஆளுநர் நாயகமாக முன்னாள் விண்வெளி வீராங்கனை யூலி பெயட் (Julie Payette) தெரிவு செய்யப் பட்டுள்ளார் எனக் கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 2017 யூலை 13 இல் அறிவித்தார்.



கனடாவின் 29 ஆவது ஆளுநர் நாயகமாக பதவி ஏற்கப்போகும் யூலி, நான்காவது பெண் ஆளுநராவார். 1963 ஒக்ரோபர் 20 இல் மொன்றியலில் பிறந்த இவர் 1999 ஆம் ஆண்டிலும், 2009 ஆம் ஆண்டிலும் ஆக இரண்டு முறை விண்வெளிப் பயணங்களை மேற் கொண்டவர். 25 நாட்களுக்கு மேல் விண்வெளியில் பிரயாணம் செய்துள்ளார்.

53 வயது யூலி பெயட்ஜ கனடாவிற்கான தனது பிரதிநிதியாக எலிசபெத் மகாராணியார் ஏற்றுக் கொண்டுள்ளார் எனக் கனேடியப் பிரதமர் யூலை 13 இல் அறிவித்த போது, இது தனக்கும் தனது குடும்பத்திற்கும் கிடைத்துள்ள மிகப் பெரும் மரியாதையாகத் தான் கருதுவதாக யூலி பெயட் கூறினார். அவர் தாம் மட்டுமன்றி தனது நண்பர்கள், தன்னுடன் கனடாவிலும் கனடாவிற்கு வெளியேயும் பணிபுரிந்தவர்கள், பூமியில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் பூமிக்கு வெளியே விண்வெளியில் உள்ள ஒரு சிலர் என அனைவரையும் பெருமைப்படுத்தும் செயலாக இதைத் தான் கருதுவதாகக் கூறினார்.

பத்து வயதில் ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் போதே தான் ஒரு விண்வெளி வீராங்கனையாக வர வேண்டும் எனக் கூறி வந்த யூலி, தான் விண்வெளிக்குப் போவதாகக் கனவுகள் கண்டாலும் பிரெஞ் மொழி மட்டும் தெரிந்த ஒரு பெண் ஆகிய தனக்கு, இவ்வாறு ஒரு சந்தர்ப்பம் வருமோ எனச் சந்தேகப்பட்டதாகவும் கூறினார். தான் ஒரு பெண்ணாக இருந்ததால் தன்னாலும் ஆண் களுக்குச் சரி சமமாக விண்வெளிப்பிரயாணம் செய்ய முடியும் என நிரூபிக்க மிகவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருந்ததாக யூலி 2014 இல் “விண்வெளிப் பிரயாணத்தில் பெண்கள்” என்ற கருத்தரங்கில் பேசும்போது கூறினார்.

தற்பொழுது ஆங்கிலம், பிரெஞ் மொழிகளைச் சரளமாகப் பேசும் யூலி, ஸ்பானிஸ், இத்தாலியன், ரஷ்சியன் மற்றும் ஜேர்மன் என ஆறு மொழிகளில் இலகுவாக உரையாடல்களை நடத்தக் கூடியவராக இருக்கிறார்.

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)





























$499,000
Oshawa- Detached
Ritson & Taunton, BR:3, WR:3
$549,000
Ajax- Detached
Finished basement, BR:3, WR:4
$779,000
FINANCING AVAILABLE
Brampton-Detached
Fin. Basement BR: 3+1, WR: 3
$1,089,000
Markham-Detached, BR:4+2,
WR: 4 Fin,basement, Sep. Entrance
$1,199,000
Meadowvale & Ellesmere, BR:4+4
WR: 5, Fin. Basement. Sep. Entrance
$889,000
Pickering-Detached
Fin. Basement BR: 4+3, WR: 4
$1,399,000
Meadowvale & Ellesmere. BR:5+4
WR:6, Fin. Basement , Sep Ent.
COMMERCIAL, RETAILS & INVESTMENT PROPERTIES ARE ALSO AVAILABLE
15 YEARS OF BUSINESS EXPERIENCE
NOT ENOUGH DOWN PAYMENT ?
CALL ME FIRST
NO MORTGAGE BROKER FEE
FREE HOME STAGING...
Upto $3000 Value, Including Furniture Rental
PROVIDED BY:
EMOH HOME & DESIGN
Sangeetha Kanesathas USC ™
Certified Ultimate Stager ™
416-388-4333
Certified UltimateStager & ReDesigner
USC Certified
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
#1
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract
All properties advertised herein may not be listed by Thas.




Cottages, Homes,Farms, Lands...
$688,800
Whitby
$615,000
Oshawa
$529,000
Kawartha Lakes
WATER FRONT COTTAGE
WEEKDAYS & WEEKEND RENTALS
From $150 per day
2350 sq. ft. Living Space
6Bed Rooms Free BBQ, Canoe,
padel boat, life jackets and more..
$499,900
Kawartha Lakes
$459,000
Pickering
$394,900
Brock Ontario - 50 Acres
$139,000
Kawartha Lakes
$349,999
Clarington
$77,000
Brock Ontario
BUILDING PERMITS !!!
For addition and new homes get an advice and cosultancy services and Building Permit Applications
Century 21
BROKERAGE*
AFFILIATE REALTY INC.
OFFICE : 416-290-1200
17 YEARS REAL ESTATE EXPERIENCE
PAT PUSHPAKANTHAN
Call :416-894-1187
REAL ESTATE BROKER - HALL OF FAMER
PAT WILL BEAT ANY DEAL*!!
1% Listing Commission *
Also Available

# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விண்வெளி வீராங்கனையான யூலி running, skiing, racquet sports மற்றும் scuba diving போன்றவற்றிலும் மிகவும் பயிற்சி பெற்றவர். Piano வாசிப்பதில் வல்லவரான யூலி Montreal Symphonic Orchastra Chember Choir மற்றும் பல Choirகளிலும் பாடியும் உள்ளார்.

கனேடியர் ஒருவருக்கான உண்மையான பண்புகளைக் கொண்டுள்ள யூலி பெயட் இனுடைய பொதுச் சேவைகள் அவரைச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கனடாவின் ஆளுநர் நாயகம் பதவிக்கு தகுதியுடைய வராக்கியுள்ளது. அவரின் வாழ்க்கைப் பயணமானது ஆராய்ச்சிகளுக்கும், கண்டு பிடிப்புக்களுக்காகவும் அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. எந்த முக்கியமான விடயத்திற்கும் தனது முழுமையான கவனத்தினை எப்போதும் செலுத்தும் பண்பினை யூலி கொண்டிருந்தார். இவ்வாறு கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கனடாவின் புதிய ஆளுநர் நாயகம் பற்றி ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் கூறினார்.

யூலி பெயட் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை மொன்றியலில் படித்தார். பின்னர் IB Program இல் தனது உயர் கல்வியைப் பயின்றார்.

அதன் பின்னர் McGill பல்கலைக் கழகத்திலும், ரொறன்ரோ பல்கலைக்



கழகத்திலும் மின்னியலில் பொறியியலாளர் பட்டமும், கணனித்துறையில் முதுமானிப் பட்டமும் பெற்றார்.

பின்னர் பொறியியலாளராகப் பணியாற்றிய இவர் Queens பல்கலைக்கழகத்திலும் ஆய்வாளராகப் பணியாற்றினார்.

உலகம் முழுவதும் உள்ள பல ஆய்வு நிறுவனங்களின் ஆய்வுகளில் பங்கு பற்றிய யூலி 27 பல்கலைக்கழகங்களில் இருந்து கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார். இவற்றுள் சில பல்கலைக்கழகங்களும் அவர்கள் யூலிக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிய ஆண்டுகளும்.

| | |
|---|---|
| Queens பல்கலைக்கழகம் | -1999 |
| Ottawa பல்கலைக்கழகம் | -1999 |
| Simon பல்கலைக்கழகம் | -2000 |
| Laval பல்கலைக்கழகம் | -2000 |
| Regina பல்கலைக்கழகம் | -2001 |
| Royal Roads பல்கலைக்கழகம் | -2001 |
| Toronto பல்கலைக்கழகம் | -2001 |
| Victoria பல்கலைக்கழகம் | -2002 |
| Nipissing பல்கலைக்கழகம் | -2002 |
| McGill பல்கலைக்கழகம் | -2003 |
| Mount Saint Vincent பல்கலைக்கழகம் | -2004 |
| McMaster பல்கலைக்கழகம் | -2004 |
| Lethbridge பல்கலைக்கழகம் | -2005 |
| Mount Allison பல்கலைக்கழகம் | -2005 |
| Alberta பல்கலைக்கழகம் | -2006 |
| York பல்கலைக்கழகம் | -2010 |
| Waterloo பல்கலைக்கழகம் | -2010 |
| Concordia பல்கலைக்கழகம் | -2010 |

கனடாவின் விண்வெளி நிறுவனமான Canadian Space Agency இற்குக் கிடைக்கப் பெற்ற 5330 விண்ணப்பங்களில் இருந்து நான்கு விண்வெளிப்பயணிகளில் ஒருவராக யூலி பெயட் 1992 யூன் மாதம் தெரிவு செய்யப்பட்டார். அதுவரை பல இடங்களில் மின்னியல் பொறியியலாளராகவும், Zurich (சுவிற்சலாந்து) இல் விஞ்ஞானியாகவும் பணியாற்றியிருந்தார்.

இரண்டு முறை திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றுள்ள யூலி பெயட் இற்கு 14 வயதில் ஒரு மகன் இருக்கிறார்.

தற்போதைய ஆளுநர் நாயகமான David Johnston இனுடைய பதவிக்காலம் கடந்த 2015 ஆம் ஆண்டுடன் முடிவடைய இருந்த போது அப்போதைய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் அவரது பதவிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளால் நீடித்தார். இதனால் அவரது பதவிக்காலம் 2017 செப்ரெம்பரில் நிறைவுபெறுகின்றது, அப்போது கனடாவின் புதிய ஆளுநர் நாயகமாக யூலி பெயட் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்.



யூலி பெயட் ஐ ஆளுநர் நாயகமாக தெரிவு செய்யப்பட்டது பற்றி கருத்து தெரிவித்த புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Tom Mulcair இது ஒரு மிகவும் திறமையான தெரிவு (Superb Choice) எனக் கூறினார்.

யூலி பெயட் இன் வாழ்வில் இரு முறை ஏற்பட்ட துயர நிகழ்வுகளை எடுத்துக் காட்டிய Toronto Star ஊடகம் அமெரிக்காவில் நடைபெற்ற இவ்வழக்குகள் இரண்டிலும் இருந்து யூலி குற்றமற்றவர் என முடிவானதையும் சுட்டிக்காட்டியுள்ளது.



# நூலாசிரியர் அகணி வெளியிட்ட இரண்டு நூல்கள்

யூலை மாதம் 22ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்ரரில் ஆரம்பமாகிய நூல் வெளியீடு வாழ்த்துரைகள், நூல்கள் பற்றிய ஆய்வு ரைகள், வெளியீட்டுரைகள், பரதநாட்டியம், கௌரவ விருந்தினர் உரை, சிறப்பு விருந்தினர் உரை, இசைப்பாடல் அறிமுகம் போன்ற நிகழ்ச்சிகளுடன் நடைபெற்று மாலை 6 மணிக்கு இனிதே நிறைவேறியது. ந்ததைக் காணமுடிந்தது. அகணி சுரேஸ் அவர்களின் மகள் சட்டத்தரணி செல்வி சயனிகா சுரேஸ் அவர்கள் நிகழ்விற்குத் தலைமை தாங்கி நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். செல்வி சரண்யா மோகன்ராஜ் வரவேற்புரை வழங்கினார். செல்வி சின்மய் சிவகுமார் தமிழ்த்தாய் வாழ்த்து, கனடாப் பண் ஆகியவற்றைப் பாடினார். பேராசிரியர். பாலசுந்தரம், கவிநாயகர் வி.கந்தவனம், கணேசன் வாழ்த்துக் கவிதையை வழங் கினார். கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட பொறியியலாளர் என். மதுசூதனன் அவர்களும் நூலாசிரியரைப் பாராட்டி வாழ்த்துக் கூறினார். ரொறன்ரோ கல்விச்சபை உறுப்பினர் திரு பார்த்தி கந்த வேள் சிறப்பு விருந்தினராகக் கலந்து நூலாசிரியரைப் பாராட்டிச் சிறப்பித்தார். நிகழ்வில் ஸ்ரீமதி தேனுஜா திருமாறன் விளம்பரம் பத்திரிகையில் தொடர்கட்டுரை யாக வந்த "அன்புடைமை" நூலுருவம் பெற்று நிகழ்வில் துறையூரான் திரு சின்னையா சிவநேசன் அவர்களின் வெளியீ ட்டுரையுடன் வெளியீடு பெற்றது. இந் நூலுக்கான ஆய்வுரையை வைத்திய கலா நிதி போல் யோசேப் அவர்களும், நய வுரையை திருமதி மீரா இராசையா அவர்க ளும் நிகழ்த்தினார்கள்.



அன்றைய தினம் ஆடி அமாவாசை விரத தினமாக இருந்த பொழுதும் இந்த நிகழ் வைச் சிறப்பிக்க அகணி சுரேஸ் அவர் களின் நண்பர்கள், உறவினர்கள், எழுத்தா ளர்கள், கவிஞர்கள், பேராசிரியர்கள், கலை ஞர்கள், ஊடகங்கள் எனப் பலரும் வந்திரு திரு.த.சிவபாலு, திரு.சார்ள்ஸ் தேவசகாயம், திருமதி. கார்த்திகா பார்த்திபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி னார்கள். முனைவர் நா.சுப்பிரமணியன் அவர்களின் வாழ்த்துச் செய்தியை திரு.க.குமரகுரு அவர்கள் அவையில் வாசித்தார். அருட்கவி த. ஞான அவர்களின் மாணவிகள் இரண்டு பரத நாட்டிய உருப்படிகளை வழங்கினார்கள். இவற்றுள் ஒரு உருப்படி யானது அகணி யின் வரிகளில் அமைந்த கீர்த்தனைப் பாடலுக்கு ஸ்ரீமதி தேனுஜா திருமாறன் அவர்கள் உருவாக்கிய பரதமாக அமைந் திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அகணியின் வரிகளில் உருவான இரண்டு இசைப்பாடல்களுக்கான அறிமுகமும் இடம் பெற்றிருந்தது.

ஒரு பாடலை ஸ்ரீவ் கிளிவ் இசையமைக்க கோபி கிருஸ்ணா பாடியி ருந்தார். இரண்டாவது பாடலுக்கு செல்வன் கிரிசன் சுரேஸ் இசையமைக்க செல்வன் பிரித்வி பாடியிருந்தார். இரண்டு பாடல் களுக்கான தயாரிப்பும் ஸ்ரீவ் கிளிவ் வழிநடத்தலில் Studio Fourteen இல் நடைபெற்று வருவதாக நிகழ்வில் அறிவிக்கப் பட்டது.

அடுத்ததாக அகணி எழுதிய "இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள்" என்ற நூலை திரு. அருள் சுப்பிரமணியம் அவர்கள் வெளியீட்டுரை செய்து வெளி யிட்டு வைக்க திரு பொன்னையா விவேகா னந்தன் அவர்கள் ஆய்வுரையையும், பெரும்புலவர் மொஹமட் ஹன்சீர் அவர்கள் நயவுரையும் நிகழ்த்தினார்கள். அடுத்ததாக திரு ராஜ் குணரட்னம் அவர்கள் அகணி யின் "காலத்தோடு வளரும் கணினிகள்" என்ற நூலிற்கு அறிமுகவுரையை நிகழ்த் தினார். நேரப் பற்றாக்குறையால் மிகச் சுருக்கமாக பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் சிறப்புரை வழங்க, நூலாசிரியர் மிகவும் சுருக்கமான தனது ஏற்புரையில் வருகை தந்த அனைவர்க்கும் நன்றி கூறிக் கொண்டார். வருகை நந்த அனைவர்க்கும் நூலாசிரியர் சிறப்புரை வழங்கியதோடு நூல் வெளியீடு இனிதே நிறைவுற்றது.

## பாப்பா கவி



பாப்பா பாப்பா கவிகேழு
பாட்டன் பாட்டி சொற்கேழு
பாதை பார்த்து நடைபோடு
பாவம் பழி செய்யாதிரு

பெற்றோரை மதித்து நடந்திடு
பேணி அவர்களைக் காத்திடு
போட்டி பொறாண்மை கொள்ளாதிரு
பெருமை பெற்று வாழ்ந்திடு

ஆத்தி சூடி படித்திடு
ஆலையம் சென்று வழிபடு
ஆறாத் துயர் வந்தால்
ஆண்டவனிடம் முறையிடு

பள்ளி சென்று பாடம் படி
படித்தபடி வாழ்ந்து முடி
பந்து போன்று உருண்டோடி
பணம் தேட உழைத்திடு

தெய்வப்புலவர் திருவள்ளுவர்
தெரியத்தந்த திருக்குறளை
தெழிவாக படித்து அறிந்து
தென்புடன் வாழ்ந்திடு

ஓடி ஆடி விளையாடு
ஒருவரோடு பகைகக்காதிரு
கள்ளம் கபடம்தனை ஒருபோதும்
கற்றுக்கொள்ளாதிரு

வீட்டு வேலைகளை செய்து முடி
வீணே நேரம் போக்காதிரு
வீதியோம் போகும் போது
வீணரோடு சேராதிரு

புகைப்பழக்கம் பழகி உள்தன்
புனித உடம்பை கெடாதிரு
மது அருந்தி மயங்கிட
மனதால் கூட நினையாதிரு

மனிதநேயம் கொண்டவராய்
மன்உயிர்களுக்கு உதவிடு
மண்ணில் மனிதனாய் வாழ்ந்து
மதிப்புடன் மடிந்திடு.



கவிநாதம் பரந்தாமன்

## எழுத்தறிவித்தவன்

மரபணுக்களில்
மனிதத்தையும்

ஐம்பூதங்களில்
இயற்கையமுதையும்

அன்பில்
அமைதியில்
அழகையும்
தாய்மையில்
தியாகத்தையும்

தமிழில்
கவிதையையும்
வாழ்க்கையையும்

எழுதியவன்
எழுத்தறிவித்தவன்!



- இரா சத்திக்கண்ணன் -

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# நாட்டைக் குழப்பும் போராட்டங்கள்

-விகிர்தன்

மைத்திரி, ரணில் தலைமையிலான 'நல்லாட்சி' அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு போராட்டங்களும், பணிப்பகிஷ்கரிப்புகளும் இடம்பெற்று வருகின்றன. நாடளாவிய ரீதியில் அவை நடத்தப்படுகின்றன. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நடத்தப்படும் போராட்டங்களுக்கும் சிங்களப் பிரதேசங்களில் நடைபெறும் போராட்டங்களுக்கும் வித்தியாசமுள்ளன. தென் பகுதிகளில் முழுக்க முழுக்க அரசியல் பின்னணியுடனேயே இவ்வாறான போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்திலும் சில போராட்டங்கள் நடைபெற்றன எனினும், தற்போது போன்று தொடர்ச்சியாகவோ, மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்பும் விதமாகவோ அவை நடைபெறவில்லை. மஹிந்தவின் காலத்தில் நடைபெற்ற பல போராட்டங்கள் ஜே.வி.பியின் தூண்டுதலின் பேரிலேலேயே நடைபெற்றதாக அப்போது மஹிந்த அரசால் குற்றம் சாட்டப்பட்டது. குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டம் மற்றும், தொழிற் சங்கப் போராட்டம் என்பன ஜே.வி.பியினரின் பின்னணியிலேயே நடைபெற்றதாக கூறப்பட்டது. இன்று தென்னிலங்கையில் நடைபெறுகின்ற போராட்டங்கள் மஹிந்த தரப்பினாலேயே தூண்டிவிடப்பட்டு நடத்தப்படுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது. மக்களின் இயல்பு வாழ்க்கையை நேரடியாகவே பாதிப்படைய செய்யும் விதங்களில் இந்தப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தின் நிர்வாகத்தை ஆட்டம் காணச் செய்யும் விதமாக இவை திட்டமிடப்பட்டு நடைபெறுகின்றன. பொதுமக்களை இந்த அரசாங்கம் மீது வெறுப்படையச் செய்யும் வகையில் இவை அமைந்துள்ளன.

மருத்துவர்கள் மேற்கொள்ளும் போராட்டம், போக்குவரத்துடன் தொடர்புபட்டவர்களின் போராட்டம் என்பன மக்களை நேரடியாகவே பாதிப்படையச் செய்கின்றன. அண்மைய நாட்களில் பெற்றோலிய தொழிற் சங்கங்கள் மேற்கொண்டு வந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் பொது மக்கள் அதிகம் பாதிப்படைய நேர்ந்தது. இரண்டு நாட்கள் இடம்பெற்ற இப் போராட்டம் காரணமாக போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டதால் நாடு முழுவதும் மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டனர்.

கனிய எண்ணெயக் குதங்கள் இந்தியா உட்பட்ட நாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படுவதை கண்டித்தே பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர். இதன்போது சில பகுதிகளில் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கொலன்னாவையில் வைத்து 10 பணியாளர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து எரிபொருள் கொண்டுசெல்லப்படுவதை தடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் சுமார் 10 பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். எரிபொருள் தாங்கிகளை மறித்தும், விமான நிலையத்திற்கு எரிபொருள் கொண்டு சென்ற ரயிலை மறித்தும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த போராட்டம் பொது மக்களின் இயல்பு நிலையை அதிகம் பாதித்தது. ஜனாதிபதியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பின்னர், எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை தமது போராட்டத்தை விலக்கிக் கொள்வதாகபெற்றோலிய தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. எனவே மீண்டும் இப்பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெறவும் சாத்தியமுள்ளது.

பெற்றோலிய தொழிற்சங்கங்களால் நடத்தப்பட்ட போராட்டத்தினால் ஏற்பட்ட நிலைமைகள் தொடர்பில் நாடாளுமன்றிலும் சூடு கிளம்பியது. நாட்டை முடக்கும் செயல்களில் ஈடுபடும் சக்திகளுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என பிரதமர் ரணில் விக்ரம சிங்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் தவறாகப் பயன்படுத்த இடமளிக்க மாட்டோம் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் கடந்த 27ம் திகதி சிறப்புரை ஆற்றினார். இதன்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்த விடயங்கள் அவதானத்திற்குரியவை. "எரிபொருள் விநியோகம், அத்தியாவசிய சேவையாக 26ம் திகதி வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது.



இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு, கொள்கை, நோக்கங்களை இந்தச் சபைக்கு தெளிவுபடுத்துவதற்கு நாம் தீர்மானித்தோம். நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. எந்தவொரு தொழிற்சங்கமாயினும் அவர்களுடைய உரிமைகளுக்காக, நலனுக்காக வேண்டுகோள்கள், ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாயின், அதனால் எமக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆயினும், ஒரு சில பிரிவினர் அடிப்படையற்ற, ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும் இல்லாமல் நாட்டில் சாதாரண மக்களின் வாழ்க்கையை சிதைக்கும் வண்ணம் முடக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பார்களாயின் அரசாங்கம் என்ற வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

எமது அரசாங்கம் எந்தவொரு தொழிற்சங்கத்துடனான பேச்சுவார்த்தைகளையும் தவிர்த்தது இல்லை. பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களுடன் எமது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள். நான் ஏப்ரல் 24ஆம், ஜுலை 13ஆம் திகதிகளில் கலந்துரையாடல் நடத்தியிருந்தேன். இந்தக் கலந்துரையாடலில் பிரதான மூன்று விடயங்கள் தொடர்பாகப் பேசப்பட்டன. ஹம்பாந்தோட்டை எரிபொருள் களஞ்சியத் தொகுதி, திருகோணமலை எரிபொருள் களஞ்சியம், சப்புகஸ்கந்த களஞ்சியத் தொகுதியை துரிதமாக புனர்நிர்மாணம் செய்தல் தொடர்பில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. எந்த வகையிலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பிரச்சினைகள் ஏற்படும் வண்ணம் அரசாங்கம் நடந்துகொள்ளாது என நான் அந்த சந்தர்ப்பத்தில் உறுதியளித்திருந்தேன். தற்போது நாட்டில் டெங்கு நோய் பிரச்சினை உள்ளது. இந்த பிரச்சினையிலிருந்து மீள்வதற்காக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எரிபொருள் விநியோகம் தடைப்படுமாயின் முழு நாட்டிலும் அன்றாட நடவடிக்கைகள் முடங்கிப் போகும். வைத்திய ஊழியர்களின் போக்குவரத்து, பொதுப் போக்குவரத்து தடைப்படுவதுடன் சுகாதாரச் சேவைக்கு பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்களையும் இயக்க முடியாத நிலை ஏற்படும். அத்துடன் விமான சேவைகள் பாதிப்படைதல், துறைமுக சேவைகள் பாதிப்படைதல் என்பவற்றால் பொருளாதாரமும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடுகிறது.

அதுமாத்திரமல்லாது சாதாரண பொது மக்களின் வாழ்க்கையும் பாதிப்படைகிறது. குறிப்பாக, மாணவர்களின் பரீட்சை நெருங்குவதால் அதிலும் பிரச்சினை ஏற்படுகிறது. இவை அத்தனை விடயங்களையும் மிக அவதானமாக கருத்திற்கொண்டு எரிபொருள் விநியோகத்தினை அத்தியாவசிய சேவையாக பிரகடனப் படுத்தினோம். அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் குறித்த வளாகம் மற்றும் விநியோக வழிகளுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எரிபொருள் விநியோக செயற்பாடுகளுக்குப் பூரண பாதுகாப்பை வழங்கும் பொறுப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாங்கள் ஜனநாயகத்தை காப்பாற்றுகிறோம். ஜனநாயகத்தின் பெறுமதியை உயர்த்தியிருக்கிறோம். நீதிமன்றத்தையும் நீதியையும் நாம் கௌரவிக்கிறோம். ஆனாலும், அவற்றை வீணடித்து, நாட்டை முடக்கும் செயல்களில் ஈடுபடும் சக்திகளுக்கு நாம் அடிபணிய மாட்டோம். அந்தச் சக்திகளுக்கு சிரம் தாழ்த்த மாட்டோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நாட்டு மக்களின் நலன் கருதி எப்போதும் செயலாற்றுகிறோம்.நாம் வழங்கியுள்ள ஜனநாயக சுதந்திரத்தை தவறாக பயன்படுத்த இடமளிக்க மாட்டோம். நாங்கள் நல்ல விடயங்களை செய்கிறோம். நல்ல விடயங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறோம். நல்ல விடயங்களுக்காக முன்நிற்கிறோம். கெட்ட விடயங்களுக்கு எப்போதும் இடம் கொடுக்க மாட்டோம். நாட்டு மக்களின் நலன் கருதி சரியான வழியில் கெட்ட விடயங்களை தோற்கடிப்போம்" எனத் தெரிவித்தார். பிரதமர் ரணில் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்களில்

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 6

**கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.**



குரு அரவிந்தன்

நூனவுட் (Nunavut) முதற்குடி மக்கள் ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 9 ஆம் திகதி நூனவுட் உருவான தினத்தைக் கொண்டாடுவார்கள். நூனவுட் பகுதிக்கு இத்தினம் விடுமுறை நாளாகும். ஆனாலும் இது பொது விடுமுறை அல்ல. கனடாவின் வடமேற்கு ஆட்சி நிலப்பகுதியின் ஒருபகுதியாக இருந்த நூனவுட் பகுதியை புதிய நிலப் பகுதியாக 1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 9 ஆம் திகதி கனடிய அரசால் அறிவிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டாலும் 1999 ஆம் ஆண்டுதான் தனியாக இப்பகுதி பிரிக்கப்பட்டது. கனடா நாட்டின் மிகப் பெரிய ஆட்சி நிலப்பகுதியாக நூனவுட் பகுதி இருக்கின்றது. கிழக்கே உள்ள பாஃவின் (Baffin) தீவில் உள்ள இக்காலிட் என்பதே இதன் தலைநகராகும்.



Chief Moses Bearspaw and son George, circa 1908.

நூனவுட் முழுவதிலுமே சுமார் 30,000 மக்கள் தான் வாழ்கின்றனர். தற்சமயம் இரண்டு பெரிய வேலைத்திட்டங்கள் அங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒன்று நிலத்திற்குக் கீழ் தங்கம் அகழ்வது, மற்றது இரும்பு அகழ்வது. பெரிய அளவில் இந்தத் தாதுப் பொருட்கள் இல்லாவிட்டாலும், இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கின்றது. இவ்வேலைத் திட்டங்களில் வேலை செய்பவர்கள் தற்காலிகமாக அங்கு குடியிருக்கின்றார்கள். அவர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

முதற்குடி மக்கள் வாழ்ந்த பகுதிகளில், வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் பெரிய கற்கள் இருந்தால் அந்தக் கற்களை ஏதோ ஒரு வடிவத்தில் ஒன்றின் மேல் ஒன்றாக (Inuksuk)அவர்கள் அடுக்கி வைத்திருப்பதை அவதானிக்கலாம். அலஸ்கா தொடக்கம் கிறின்லான்ட் வரை உள்ள சில பகுதிகளில் இப்படியான கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கற்கள் இருந்தால் கற்களையும், மரங்கள் இருந்தால் மரத்தையும் கொண்டு முதற்குடி மக்கள் தங்கள் இருப்பை உறுதிப் படுத்தியிருந்தனர். சில பகுதிகளில் மரங்கள் இருந்தால் வேலைப்பாடுகள் அமைந்த மரத்தாலான தூண்களைக் காணலாம். இத்தூண்களை ரோரெம் போல்ஸ் (Totem) என்று அழைக்கிறார்கள். தாங்கள் வாழ்ந்த இடங்களை இதன் மூலம் அவர்கள் உறுதிப்படுத்தியதாகத் தெரிகின்றது. இதே போலத் தான் ஈழத் தமிழர்களும் கல்வெட்டுகள் மூலமும் கோயிற் சிலைகள் மூலமும் பல இடங்களில் தமிழரின் இருப்பை உறுதிப் படுத்தியிருந்தனர். இலங்கையின் தெற்குப் பகுதியில் இருந்த, பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான தொண்டீஸ்வரம் இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும்.

நூனவுட் பகுதியில் இருந்து தெற்கு நோக்கி வந்தால் வடமேற்கு நிலப் பகுதியை அடையலாம். அங்கிருந்து மேலும் தெற்கு நோக்கி வந்தால் அல்பேட்டா மாகாணத்தை அடைய முடியும். றொக்கி மலைத்தொடர் இதற்கூடாகத் தெற்கு நோக்கிச் செல்கின்றது. அல்பேட்டா மாகாணத்தில் உள்ள றொக்கி மலைத் தொடரில் பான்வ் (Banff) என்ற பகுதி நாலு பக்கமும் மலைகளால் சூழப்பட்ட மிகவும் அழகான நகரமாகும். போ-றிவர் என்ற ஆற்றுப் பாலத்தில் இருந்து சற்றுத் தூரம் சென்றால் கனடாவின் முதலாவது தேசிய பூங்காவிற்குச் செல்ல முடியும். சுமார் 4600 அடி உயரமான அழகான மலைக் குன்றுகளை நாலாபக்கமும் காண முடியும். இலங்கையில் நுவரேலியா பகுதியில் நிற்பது போன்ற உணர்வை அங்கு நின்ற போது ஏற்படுத்தியது. அழகிய பூந்தோட்டங்களைக் கொண்ட நுவரேலியா சுமார் 6100 அடி உயரமானது.





ஊட்டி, கோடைக்கனல் போன்ற இடங்களின் காலநிலையைக் கொண்டது. 1885 இல் பான்வ் என்ற இப்பகுதியில் கனேடியன் பசுபிக் புகையிரதப் பாதை அமைத்தவர்கள் சிலர் இங்கே முதற்குடி மக்களால் பாவிக்கப்பட்ட ஒரு சுடுநீர்க் குட்டை இருப்பதைக் கண்டு பிடித்தார்கள். சல்பர் மவுண்டன் என்று அழைக்கப்படுகின்ற கந்தகமலை றொக்கி மலைத் தொடரின் ஓரங்கமாக பான்வ் நகரைச் சுற்றி இருக்கின்றது. 1887 இல் இந்த இடம் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டது. 1914 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை இந்த இடம் நீச்சல் தடாகமாகப் பாவிக்கப்பட்டு, 1995 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள கிண்ணியாவில் இருக்கும் சுடுநீர்க் கிணறு போல இங்கே பான்வ் பகுதியிலும் சிறிய சுடுநீர்க்குளம் ஒன்று காட்சி அளிக்கிறது. கிண்ணியாவில் சுடுநீர்க் கிணறு என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இந்த வெந்நீரூற்று இலங்கையில் உள்ள அதிசயங்களில் ஒன்றாகக் கருதப் படுகின்றது. இங்கே ஏழு ஊற்றுக்கள் இருக்கின்றன. ஏழு ஊற்றுக்களும் வெவ்வேறு வெப்பநிலைகளில் காணப்பட்டாலும் இதற்கான விளக்கங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடம் ஈழத் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்கின்ற இடமாகும். எனினும் அரசியல் காரணங்களால் இன்று அங்கிருந்த பிள்ளையார் கோயில் அகற்றப்பட்டு அங்கு புத்தர் அமர்ந்திருக்கும் நிலை உருவாகியுள்ளது. இன்றைய தலைமுறைக்கு இந்த மாற்றங்கள் எதுவும் பெரிதாகத் தெரியப் போவதில்லை, அதற்கான காரணமும் புரியப்போவதில்லை. வடக்கு கிழக்கு பாரம்பரிய காணிகள் விவகாரம் தொடர்பில் பல முறை அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியிருந்தும் இதுவரை சரியான பதில் எதுவும் கிடைக்கவில்லை. மேற்படி காணிப்பிரச்சினையானது எதிர் காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் பாதிக்கப் படப்போவது இலங்கைத் தமிழர்களே. காலப்போக்கில் இலங்கைச் சரித்திரமே மெல்ல மெல்ல மாற்றப்பட்டு விட வாய்ப்புண்டு.

பான்வ் என்ற அந்தச் சிறிய நகரத்தில் முதற்குடி மக்களோடு தொடர்புடைய மூன்று அருங்காட்சியகங்கள் இங்கே இருக்கின்றன.

ஒன்று கேவ் அன்ட் பேசின் (Cave and Basin National u Historic Site) என்ற பெயரைக் கொண்ட காட்சியகம், மற்றது பான்வ் பூங்கா அருங்காட்சியகம் (Banff Park Museum) என்ற பெயரைக் கொண்ட காட்சியகமாகும். மற்றது தனிப்பட்ட காட்சியகமாகும். கனடாவின் 150வது பிறந்த வருடத்தை முன்னிட்டு பார்க் கனடாவிற்குச் சொந்தமான அனேகமான இடங்களை எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாகப் பார்க்க அனுமதிக்கின்றார்கள். 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்பது போல, அந்த வசதிகளை நாங்களும் பயன் படுத்திக் கொண்டோம். அனேகமான இடங்களில் எங்களுக்கு இலவச அனுமதி கிடைத்தது. இதனால் அனுமதி, வாகனத் தரிப்பு போன்றவற்றால் குறிப்பிட்ட அளவு பணம் மிச்சம் பிடிக்கவும் உதவியது.


LOANS & MORTGAGES.... that meets your needs

$5,000...$35,000...$50,000...$100,000...1Million...

MORTGAGE ALLIANCE

Office: 1585 Markham Road, Unit 110
Scarborough ON. M1B 2W1
Tel: 647.350.7050

Corporate Office: 2005 Sheppard Ave E. Suite 200, Toronto ON M2J 5B4 Toll Free: 1-877-366-3487

- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.

SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages






# நல்லூர் துப்பாக்கிச் சூடு ஓர் சதித்திட்டமா?

- ஆதித்தன் -

கடந்த 22ஆம் திகதி யாழ்ப்பாணம் - நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் யாழ் குடாநாட்டை மட்டுமல்லாது முழு இலங்கையையும் பரபரப்பிலாழ்த்தியுள்ளது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாக வெளியாகும் தகவல்கள் காரணமாகவே இந்தச் சம்பவம் தீவிர அவதானிப்பைப் பெற்றுள்ளது. சம்பவம் நடைபெற்றவுடனேயே ஊகங்களாகப் பல கதைகள் பரவத்தொடங்கின. இத் தாக்குதல் நீதிபதி இளஞ்செழியனைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட முயற்சி எனவும், புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை வழக்கு ட்ரயல் அட்பார் முறையில் துரிதமாக நடைபெற்று வருகின்ற நிலையில், அந்தத் தீர்ப்பாயத்தில் உள்ள மூன்று நீதிபதிகளில் இளஞ்செழியனும் ஒருவர் என்பதால் அவரைக் கொலை செய்வதற்கு வித்தியா கொலையாளிகள் தீட்டிய சதித் திட்டத்தின் மூலம் இது நடந்திருக்கலாம் எனவும் சொல்லப்படுகின்றது.

ஆனால், பொலிஸ் தரப்பில் இது நீதிபதியைக் கொலை செய்யத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அல்ல எனவும், தற்செயலாக நடைபெற்ற சம்பவம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. நல்லூரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்டவில்லை எனவும், யாழ்ப்பாணத்தில் நீதிபதிக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்துள்ளார். நீதிபதியின் மெய்பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகஸ்தர் மதுபோதையில் இருந்தவரைக் கண்டிப்பதற்காக எடுத்த நடவடிக்கை காரணமாகவே இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தால், நிச்சயமாக அவரது வாகனத்திற்கு சூடு பட்டிருக்க வேண்டும். அப்படி எதுவும் நடைபெறவில்லை. நீதிபதியும் வாகனத்தை விட்டுக் கீழே இறங்கி தனது மெய்ப்பாதுகாவலரும், மதுபோதையில் நின்ற நபரும் முரண்பட்டுக்கொண்டதை பார்த்துள்ளார். இந்நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் இலக்கு நீதிபதியாக இருந்திருந்தால் நேராகச் சுட்டிருக்கலாம். ஆனால், அவ்வாறு அவர் சுடவில்லை. எனவே, இது நிச்சயமாக அந்த சந்தர்ப்ப சூழலில் நடந்த விடயமே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரான ருவான் குணசேகரவும் இதே போன்ற கருத்தை வெளியிட்டுள்ளார். "துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகில், முச்சக்கர வண்டிகளை நிறுத்துமிடம் உள்ளது. அங்குள்ள முச்சக்கரவண்டிகளின் உரிமையாளர்களிடத்தில் நீண்ட காலமாகவே கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன. சம்பவ தினத்தன்று அந்த முச்சக்கரவண்டிகள் நிறுத்துமிடத்திற்குப் பின்னால் சிலர் மது அருந்திக்கொண்டிருந்துள்ளனர். அவர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வீதிக்கு வந்தமையால் அவ்விடத்தில் வாகன நெரிசல் ஏற்பட்டது. அப்போது போதையிலிருந்த ஒருவர் மெய்ப்பாதுகாவலரின் இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுட்டுள்ளார். இதேவேளை நீதிபதியும் வாகனத்திலிருந்து இறங்கிவிட்டார். எனினும், மற்றுமொரு கான்ஸ்டபிள் நீதிபதியை வாகனத்தினுள்ளே தள்ளிவிட்டு துப்பாக்கிதாரியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். இதன் போது துப்பாக்கிதாரி ஓடிவிட்டார். நீதிபதியைக் கொல்வதற்கு துப்பாக்கிதாரி முயல வில்லை" என்று அவர் கூறியுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக முதலில் தகவல்கள் வெளியாகின. பின்னர் ஒருவர் கடந்த 25ம் திகதி காலை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததாகப் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. சரணடைந்த நபர், புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் எனவும், 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டிருந்த நிலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சரணடைந்த நபர் தெரிவித்த வாக்குமூலமும் தற்போது வெளியாகியுள்ளது. யாழ். நல்லூர் வீதியில் வைத்து நீதிபதி இளஞ்செழியன் மீதோ அல்லது அவரது மெய்பாதுகாவலர் மீதோ திட்டமிட்டுச் சுடவில்லை எனச் சரணடைந்த சந்தேக நபர் யாழ். பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வாழங்கியுள்ளார். தான் மதுபோதையில் இருந்ததாகவும் அப்போது, ஏற்கனவே கைதாகிய இருவரில் ஒருவரான தனது மச்சான் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலரை சுட்டிக்காட்டி "உந்தப் பொலிஸை உன்னால் சுட முடியுமா?" என்று சவால் விட்டதாகவும் இதன் போதே மது போதையில் குறித்த சூட்டுச் சம்பவம் இடம் பெற்றது எனவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. "நான் சும்மா அவரது பிஸ்டலை எடுத்தேன். சுடுபட்டு விட்டது". எனவும் அவர் கூறியிருக்கின்றார்.

பொலிஸ் தரப்பினர் இச்சம்பவம் திட்டமிட்டு நடத்தப்படவில்லை எனக் கூறுவதற்கும், சரணடைந்த நபரின் வாக்குமூலத்திற்கும் இங்கு ஒற்றுமை காணப்படுகின்றது. இந்த நபர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெறுகின்றன. சம்பவத்தின் போது மதுபோதையில் வீதிப் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவிருந்தவர்களுடன் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் முரண்பட்ட போது மின்னல் வேகத்தில் அவரது இடுப்பிலிருந்த பிஸ்டலைப் பறித்து மெய்ப்பாதுகாவலரை சுட்டிருக்கின்றார். அடுத்த மெய்ப்பாதுகாவலரை நோக்கியும் சுட்டிருக்கின்றார். (இதில் காயமடைந்த மற்றைய மெய்ப்பாதுகாவலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்). பின்னர் சட்டென்று வீதியில் வந்த ஸ்கூட்டர் ஒன்றை மறித்து வந்தவர்களை இறங்குமாறு அச்சுறுத்தி விட்டு அதில் தப்பிச் சென்றிருக்கின்றார். இவ்வாறான செயற்பாடு நன்கு ஆயுதப் பயிற்சி பெற்ற ஒருவராலேயே மேற்கொள்ள முடியும். இவர் ஏதோவொரு ஆயுதக் குழுவில் செயற்பட்டவராக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

இதே வேளை, குறித்த நபர் பொலிஸ் நிலையத்தில் வழங்கியுள்ள வாக்குமூலமும் பொருத்தமற்றதாகவே இருக்கின்றது. 'நான் சும்மா அவரது பிஸ்டலை எடுத்தேன். சுடுபட்டு விட்டது' என அவர் கூறுவது நம்பக் கூடியதல்ல. "உந்தப் பொலிஸை உன்னால் சுட முடியுமா?" என்று சவால் விட்டதாகவும் இதன் போதே மது போதையில் குறித்த சூட்டுச் சம்பவம் இடம் பெற்றது என்றும் அவர் கூறியிருப்பதும் நம்ப முடியாதது. மது போதையில் தன்னிலை மறந்து, தடுமாறிய நிலையில் இத்துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பியோடுவது என்பது சாத்தியமற்றது. இவை ஒருபுறமிருக்க, இச்சம்பவத்தை கண்டித்து வடக்கு கிழக்கில் கடையடைப்பு, கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் என்பன நடத்தப்பட்டுள்ளன. நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசியல்வாதிகளும் பௌத்த பீடங் களைச் சேர்ந்தவர்களும், சம்பவத்தைக் கண்டித்துள்ளனர். அத்துடன், ஜனாதிபதி யின் பணிப்பின் பேரில் நீதிபதி இளஞ் செழியனுக்கான பாதுகாப்பும் அதிகரிப் பட்டுள்ளது.

இதே வேளை, இந்த சம்பவத்தினால் உயிரிழந்த மெய்ப்பாதுகாவலருக்காக நீதிபதி இளஞ்செழியன் கதறியழுத காட்சிகள் பலரது மனங்களையும் உருக்கியுள்ளது. குற்றவாளிகள் பலருக்கு மரணதண்டனை வழங்கிய ஒரு நீதிபதி தனது பாதுகாப்பிற்காக தன்னுடன் நீண்ட காலமாக துணையிருந்த சிங்களவரான மெய்ப்பாதுகாவலரின் இழப்பை தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் மெய்ப்பாதுகாவலரது உறவினரின் கால்களில் விழுந்து அவர் அழுத காட்சி தென்னிலங்கையிலுள்ள சிங்களவர்களையும் வியப்பிலாழ்த்தியதோடு, நீதிபதி மீதான மதிப்பையும் உயர்த்தியிருக்கின்றது. அவரது மனிதாபிமானத்தையும், மிருதுவான உள்ளப்பாங்கையும் இது வெளிப்படுத்தியிருக்கின்றது.

எவ்வாறெனினும், ஊகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும், சந்தர்ப்பவாத பொய்களுக்கு இடமளிக்காமலிருக்கவும் குறித்த துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மை நிலை வெளிப்படுத்தப் படல் வேண்டும்.

27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் VLAMBARAM™

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| பத்திரிகை முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | தாரணி இந்திரராஜ் |
| | பிரசாந்தி அருள்தாசன் |

பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



# Sell your home faster and more money






**Very Profitable Store With Good Margin Own A Business With Little Investment**




**3 Bedrooms, 3 W Room**

Newly Built Family Home! Impressive 2-Storey In New Neighbourhood In Orillia




**4 Bedrooms, 3 W Room**

Ski & Swim! Spacious & Bright Family Home In Beautiful Waterfront Community




**4 Bedrooms, 3 W Room**

Beautifully Built Mancini Home "Etna" Model Features: Four Great Size Bedrooms




**2+1 Bedrooms, 3 W Room**

No Neighbours Behind! Beautiful Bungaloft, Terrific Layout W/ Hardwood Flooring,




**3+1 Bedrooms, 3 W Room**

Stunning 3 Bedroom Fully Detached Home In Fernbrook's Sought Out Stone Castle Neighbourhood




**4 Bedrooms, 3 W Room**

Minutes To The 401 And Up The Street From The Arena Stunning Dining Room, This One Cannot Be Missed!




**4 Bedrooms, 3 W Room**

Newly Finished Basement With 3Pc Bath Granite Counters In Kitchen & Both 2nd Flr Bathrooms,




**3+1 Bedrooms, 4 W Room**

Beautiful Dream Home In High Demand Area. Professionally Landscaped Front And Bk Yard




**3 Bedrooms, 3 W Room**

The Cozy Home Is In The Heart Of The Lakefront Community Of Newcastle Full Camera System Around




**4 Bedrooms, 3 W Room**

Fantastic Brand New,Never Lived 4 Bedrooms,4 Washrooms +Office/Library On Ground Floor




**4+2 Bedrooms, 5 W Room**

The Best Homes In Bradford, Rosehaven Hazel ModelMany Upgrades Including Exterior Stone, Exterior Pot Lights,




**4+1 Bedrooms, 3 W Room**

Live A Prestigious Lifestyle On Just Under 1 Acre In The Highly Sought-After Snow Valley Estates,




**Canada Gas Station**

Totally Renovated In 2007.New Fiberglass Double Wall Tanks, 125,000 Litres Vol 2.5 Million Litres.+ Cross Lease ,Store Sales $ 360K.




**Esso Gas Station**

Convenience, Lotto, Atm And Auto Garage, New Roof Take Keys And Start Making Money

RE/MAX Platinum Club Award

## ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC

Email: esrinathan@trebnet.com

Sales Representative

## Direct 416 - 276-1225

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770



KZG 647-200-5833

**Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent**

# எங்கள் நிர்வாணப் போராட்டத்தால் இந்திய அரசுதான் அவமானப்பட்டுள்ளது!

## தமிழக விவசாயி அய்யாக்கண்ணு

**நேர்காணல்: சிவதாணு**

இந்தியாவில் 1970ஆம் ஆண்டு ஒரு டன் கரும்பு 90 ரூபாய் அப்போது வாத்தியார் சம்பளமும் 90 ரூபாய்தான். இப்போது ஆசிரியர்கள் சம்பளம் குறைந்தது 36,000 ரூபாய் 400 மடங்குக்கும் மேல் உயர்ந் துள்ளது. ஆனால், டன் கரும்பு விலை இன்று 2500 ரூபாய்தான் 25 மடங்குதான் உயர்ந்துள் ளது. அன்று எங்கள் நெல் 40 ரூபாய், வங்கி ஊழியர் சம்பளம் 150 ரூபாய் இன்று நெல் 900ரூபாய், ஆனால், வங்கி அதிகாரி சம்பளம் 60,000 ரூபாய். இதுபோல் இந்தியாவில் எல்லாத் தரப்பினர் வருமானமும் பல மடங்குகள் உயர்ந்துள் ளது. அதுபோல விவசாயிகள் விளை பொருட்களுக்கும் கட்டுப்படியாகக்கூடிய விலையைக் கொடுங்கள் "எங்களுக்குத் தயாரிப்புக்கு உரிய விலையைக் கொடுத்தால் நாங்கள் ஏன் கடனாளியாகப் போகிறோம் கடனைத் தள்ளுபடி செய்யும்படி கேட்கப்போகிறோம் ஏன் கையேந்தப் போகிறோம்?" ஆவேசமாகப் பேசுகிறார், தென்னிந்திய நதிகள் இணைப்புச் சங்கத்தின் தலைவர் அய்யாக்கண்ணு. இந்தியத் தலைநகர் டெல்லியில் வெறும் நூறு விவசாயிகளோடு நாட்டையே அதிர வைத்த நீண்ட நாள் தொடர் போராட்டத்தை நடத்தி யவர். தற்போது மீண்டும் டெல்லியில் போராட்டத்தைத் தொடங்கியுள்ளார்கள் தமிழக விவசாயிகள். இந்நிலையில் அய்யாக்கண்ணுவைச் சந்தித்தோம்.

உங்களது போராட்ட வடிவங்கள் குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. குறிப்பாகக் கோமணத்துடன் போராடியது, சிறுநீர் குடித்தது, எலியைக் கடித்துக் கொண்டிருந்தது ஆகியவற்றை தவிர்த்திருக்க முடியாதா?

நாங்கள் இதே கோலத்தில்தானே வயலில் வேலை செய்கிறோம். அதனால், அதே கோலத்தில் போராடினோம். எங்களுக்குத் தரவேண்டிய தண்ணீரைத் தரவில்லை என்பதால் சிறுநீர் குடித்தோம். எங்களின் நிலை மிகவும் ஏளனமாகத்தான் உள்ளது. அதனால், அதனை அடையாளப்படுத்தும் விதமாக எங்கள் போராட்ட வடிவங்களும் அமைந்திருந்தன.

ஏன் நிர்வாணப் போராட்டம்?

போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது டெல்லி காவல்துறை பலவிதங்களில் மிரட்டியது. அதற்கெல்லாம் நாங்கள் அசராத நிலையில், டெல்லி டெபுடி கமிசனர் எங்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். அவரைப் பார்க்கச் சட்டை போட்டுக் கொண்டு வரச் சொன்னார்கள். ஆனால், நாங்கள் கோவணத்துடன்தான் சென்றோம். "போராட்டத்தைக் கைவிடவில்லையென்றால், உங்களைத் திகார் ஜெயிலில் அடைப்போம்" என்று மிரட்டினார். நான் சொன்னேன்: "இப்போது நாங்கள் கடும் வெயிலில் ரோட்டில்தான் சாப்பிடுகிறோம், தூங்குகிறோம், குளிக்கிறோம். அதைவிட எங்களுக்குத் திகார் ஜெயில் மேல்தான். அதனால் உடனடியாக எங்களை ஜெயிலில் அடையுங்கள்" என்றேன்.

பிறகு, பிரதமர் மோடியைச் சந்திக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். வேனில் அழைத்துச் சென்றார்கள். ஆனால், பிரதமரின் உதவியாளரைக்கூடச் சந்திக்க முடியவில்லை. மனுவை மட்டும் கொடுத்து விட்டுச் செல்லச் சொன்னார்கள். இதனால் மனமுடைந்து, விரக்தியில் வேனில் இருந்து கீழே விழுந்து, நிர்வாண மாக ஜனாதிபதி மாளிகை நோக்கிச் சில விவசாயிகள் ஓடினார்கள். மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுகிறோம் என்ற விரக்தி யில்தான் அப்படி செய்தார்கள். இது எங்களுக்கான அவமானம் இல்லை, இந்திய அரசுக்கான அவமானம்.

இந்திய ரிசர்வ் வங்கி கவர்னர், விவசாயக் கடன் தள்ளுபடி தனிமனித நேர்மையைப் பாதிக்கும் என்றும் சொல்லியுள்ளாரே? கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு 3 இலட்சம் கோடிக் கடன்களைத் தள்ளுபடி செய்யும் போது, அது தனிமனித நேர்மையைப் பாதிக்கும் என்று தெரியவில்லையா? விவசாயிகளின் 72 ஆயிரம் கோடிக் கடனைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்கும் போது மட்டும்தான் அவருக்கு இது தோன்றுகிறது. இதுதான் தனிமனித நேர்மையா?

ஆடி கார் வைத்திருக்கிறார், அப்சல் குருவுடன் தொடர்பு என அடுக்கடுக்காக உங்கள் மீது பாஜககாரர்கள் குற்றச்சாட்டுக்களை வைக்கிறார்களே?

இவை மட்டுமல்ல என்னை பிராடு என்றும் கூட எச். ராசா சொல்கிறார். அவர் என் மீது சொல்லிய எந்தக் குற்றச்சாட்டையும் நிருபிக்கவில்லை நிருபிக்க முடியவில்லை என்றால் என்ன செய்ய வேண்டும் என்று நான் அவருக்குச் சொன்னதையும் செய்யவில்லை.



எச். ராசா மட்டுமன்றி பாஜக தலைவர்கள் அனைவருமே உங்கள் மீது குற்றச்சாட்டு வைக்கிறார்களே?

டெல்லியில் நடைபெற்ற எங்கள் போராட்டத்தால் அனைத்து மாநில விவசாயிகள் மத்தியிலும் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அவர்கள் மத்திய அரசுக்கு எதிராகப் போராட முன்வருகிறார்கள். எங்கள் போராட்டக் களத்திற்கே 28 மாநில விவசாயிகள் நேரில் வந்து ஆதரவு அளித்துள்ளனர். அதுதான் பாஜககாரர்களின் கோபத்துக்குக் காரணம். தேர்தல் வரும்போது விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்கிறார்கள். தேர்தல் முடிந்தவுடன் இந்த நாட்டின் அடிமையாக எங்களை நடத்துகிறார்கள். நியாத்தைப் பேசக்கூடாது, எதிர்த்துப் போராடக்கூடாது என எங்கள் மீது கடுமையாகத் தாக்குதல்களை நடத்துகிறார்கள். சர்வாதிகார ஆட்சி நடப்பதுபோல இருக்கிறது.

நீங்கள் விவசாயியே இல்லை என்று தமிழிசையின் குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில்?

நான் 2000இல் இருந்து சமீப காலம் வரை பாரதிய கிசான் சங்கத்தில் இருந்தேன். மாநிலப் பொதுச் செயலாளர், துணைத் தலைவர், செய்தித் தொடர்பாளர் எனப் பல பதவிகளை அதில் வகித்துள்ளேன். அந்தச் சங்கம் பாஜகவின் தாய்க் கழகமான ஆர்.எஸ்.எஸ்ஸின் துணைச் சங்கம். தமிழிசையே நான் நடத்திய பல கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார். அப்பொழுது விவசாயியாகத் தெரிந்த நான் இப்போது மட்டும் எப்படி விவசாயியாக இல்லாமல் ஆனேன். அவர்களுக்கு ஆதரவாக இருந்தால் விவசாயி, இல்லை என்றால் நான் பிராடு இதுதான் அவர்களின் கொள்கை.

தமிழக மாநில அரசின் தூண்டுதலின் பேரில்தான் நீங்கள் மத்திய அரசுக்கு எதிராகப் போராடுவதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு குறித்து?

நாங்கள் மாநில அரசுக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தியுள்ளோம். அவற்றைப் பற்றித் தெரிந்தவர்கள் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லமாட்டார்கள்.

சரி, ஏன் மத்திய அரசுக்கு எதிராகப் போராடினீர்கள்?

தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவுகிறது. இந்நிலையில், தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுத்துப் பல போராட்டங்களை நடத்தியதன் விளைவாகத் தமிழக அரசு தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்தது. அதன்பின்னர் மூன்று மாதங்களுக்கு மேலாகியும் மத்திய அரசு எந்த நிவாரணமும் தமிழ்நாட்டுக்குக் கொடுக்கவில்லை. இதனையடுத்துத்தான் வறட்சி நிவாரணம் வேண்டி டெல்லி சென்று போராட முடிவெடுத்தோம். மேலும், விவசாயிகளுக்கு லாபகரமான விலை வேண்டும் என்றால் மத்திய அரசிடம்தான் கேட்க வேண்டும். வறட்சி நிவாரண த்திற்காக தேசிய பேரிடர் நிதியை வழங்கக் கூடிய இடத்தில் மத்திய அரசுதான் இருக் கிறது. நதிகள் இணைப்பிலும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவும் மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி எங்கள் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டிய அதிகாரம் மத்திய அரசு கையில் இருக்கும்போது, மாநில அரசிடம் எப்படி எங்கள் கோரிக்கையை முன்வைக்க முடியும். விவசாயிகளையும் பொது மக்களையும் ஒன்றும் தெரியாத முட்டாள்கள் என்று நினைத்து இதுபோன்ற கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும் மோடி நடைமுறைப்படுத்தவில்லை. இப்போது திடீரென ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்கிறார். காவிரி மேலாண்மை வாரியத்தில் தீர்ப்பு வாங்கவே 27 வருடங்கள் போராடினோம். இந்நிலையில் மேலும் காலத்தை ஓட்ட ஒற்றை தீர்ப்பாயம் என்று சொல்கிறார்கள். இதில் நீதி கிடைக்க மேலும் பல வருடங்கள் ஆகும். இடைப்பட்ட நாட்களில் தமிழகம் பாலைவன மாகும். பின்னர் இங்கு மீத்தேன், ஹைட்ரோ கார்பன் போன்ற அழிவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம் என்பதே அவர்களின் எண்ணம்.

முதலில் 41 நாட்கள் டெல்லியில் போராடியபோது நீங்கள் முன்வைத்த கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில், மீண்டும் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தால் என்ன பயன்?

எங்கள் போராட்டத்தால் இந்தியா முழுவதிலுமுள்ள விவசாயிகள் இணைந்துள்ளனர். விவசாயிகளின் விளைபொருளுக்கு உரிய விலை வேண்டும் என்று அனைத்து விவசாயிகளுக்கும் உணர்வு வந்துள்ளது. நதிநீர் இணைப்பு, நீர் மேலாண்மை உள்ளிட்டவற்றின் முக்கியத்துவம் இந்தியா முழுவதிலுமுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தெரிய வந்திருக்கிறது. விவசாயிகளின் உண்மை நிலையை உலகறியச் செய்துள்ளோம். இதுவே எங்களுக்குப் பெரிய வெற்றிதான்.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# நாமும் நமது இல்லமும் - 492

## வீடு வாங்கியவர் தமது வீட்டை விற்கமுடியாமல் இழுபட்டால்

**ராஜா மகேந்திரன்**, P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



ஏப்ரல் 21, 2017 இற்கு பின்னர் ஆதன விற்பனையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இதுவரை நிலைமை சாதகமாக இல்லை. எனினும் ஏற்கனவே ஆதனம் வாங்கியவர் தான் வாழும் ஆதனத்தை சந்தைப்படுத்திய போதும், இதுவரை ஆதனம் விற்கப்பட வில்லை. அவரின் நிலைமை என்ன?

இதுவே இப்பொழுதுபொதுவாகக் காணப் படும் நிலைமை. அத்துடன் ஏற்கனவே ஒப்ப மிட்டவரின் Closing date வரும்போது ஆதனத்தின் பெறுமதி, வாங்கிய விலையை விடக் குறைவாகக் காணப்படுகின்றது. இந் நிலைமை சர்வசாதாரணமாக் காணப்படு கின்றது. இந்நிலைமையை எவ்வாறு சமாளிப்பது?

இந்நிலைமையினை தகுந்த முறையில் கையாளுவதற்கு நியாயமான அனுபவமான அறிவுறுத்தல்கள் தகுந்த நேரத்தில் பெறுதல் வேண்டும்.

(Q1) வாங்கியவர் ஆதனத்தை குறிப்பிட்ட தேதியில் Close பண்ணாமல் விட்டால் என்ன நிகழும்?



பொதுவாக வாங்கியவர் தமது கடமையி லிருந்து தவறுகின்றார். இதற்குரிய எதிர் விளைவுகளை நிச்சயமாக சந்திக்க வேண்டி வரும்.(?). முதலாவதாக, ஏற்கனவே கொடு க்கப்பட்டிருக்கும் ஆரம்ப முதலீட்டை இழக் கக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாக காணப் படும். அத்துடன் வீட்டு உரிமையாளர் அந்த வீட்டை குறைந்த விலைக்கு விற்றால், புதி தாக விற்ற விலைக்கும், ஆரம்பத்தில் விற்ற விலை வித்தியாசம் இதனால் ஏற்பட்ட மேலதிக செலவிற்கும் ஆரம்ப வாங்குனர் பொறுப்பாளராக வேண்டிய சந்தர்ப்பமே அதிகமாகும்.

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் வீடு வாங்கியவரிற்கு ஏதாவது வழிமுறைகள் இருக்கிறதா?

நிச்சயமாக இருக்கின்றது. குறிப்பிட்ட விற்பனை முகவரை அணுகி Closing காலத்தை நீடிக்க அனுமதி கேட்டல். Approval பெறுமதி வாங்கிய விலையை விட குறைவாக வந்தால், விற்பவரிற்கு நிலைமையை விளங்கப்படுத்தி விலையின் குறைப்பை கேட்கலாம். இதற்கு இரு பகுதியும் சம்மதிக்க வேண்டும். அல்லது, மூன்றாவது வாங்குபவரை கண்டுபிடித்து, நியாயமான முறையில் இந்த நிலைமையை தீர்க்கப் பார்த்தல்.

என்னுடைய அண்மைக்கால அனுபவத்தில் விற்பவரும், நிலைமையை தீர்க்கவே விரும்புவதை காணக்கூடியதாக உள்ளது.

(Q) குறிப்பிட்ட Purchase sale agreement ஐ வேறு ஒருவருக்கு மாற்றமுடியுமா?

பொதுவான சந்தர்ப்பங்களில் விற்றவரின் அனுசரணையுடன் இதனை செய்யலாம்.

(Q) மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நில மாற்றுவரியை (land transfer tax) யார் செலுத்துவது?

புதிதாக ஆதனம் வாங்குபவரே நிலமாற்று வரியை செலுத்தவேண்டும்.

மேற்குறிப்பிடும் நிலைமைகள் இன்றைய காலத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது. இந்நிலைமை வாங்குபவர், விற்பவர் இரு வரிற்கும் மன உளைச்சல் கொடுப்பதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

இதனால் ஆதனத்தின் Closing Date வரும்வரை காத்திரமாய் முன்கூட்டியே அனு பவமிக்க சட்ட ஆலோசகருடன் அல்லது திறமையான அனுபவமிக்க ஆதன முகவர் களுடன் தொடர்புகொள்வது சிறந்தது.

NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**
**Cell: 416.816.7994**   **Email:neel900@hotmail.com**

La Capitale Financial Group    INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.    Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA



# அத்தனைக்கும் ஆசைப்படு

சத்குரு வாசுதேவ்

பல திறமையானவர்களை நீங்கள் கவனித்திருக்கலாம். கிடு கிடுவென்று உயர்ந்து வருவார்கள். சடாரென்று ஒரு கட்டத்தில் நிலைகுத்தி நின்று விடுவார்கள். அதன்பின், அவர்களிடம் புதிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது.

ஏன்? அதற்குப் பிறகும் வளர வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு இருக்காதா என்ன? இருக்கும். ஆனாலும், கிடைத் திருப்பதை விட்டுவிடக் கூடாது என்று, அச்சத்துடன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடுவார்கள். அதற்கு அப்புறம் எப்படி வளர்ச்சி இருக்கும்?

குட்டி மண் தொட்டியில் வேரோடு வைத்து விற்கப்பட்ட ஒரு செடியை வாங்குகிறீர்கள். பத்திரமாக நிழலில் வைத்துப் பார்த்துக் கொண்டால், தொட்டியில் செடி வேகமாக ஓரளவுக்கு வளரும். பிறகு ஒரு கட்டத்தில் போதிய இடமின்றி, அது தன் வளர்ச்சியைக் குறுக்கிக்கொள்ளும். அதே செடியை பூமியில் எடுத்து நட்டிருந்தால், அது பெரிய விருட்சமாக வளர்ந்திருக்கும். கடைசிவரை புதிது புதிதாகக் கிளைகளை எல்லாத் திசைகளிலும் அனுப்பிக் கொண்டு இருக்கும். உங்கள் வாழ்க்கையும் அப்படித்தான்!

வளர வேண்டும் என்ற முனைப்பு உங்களுக்குள் தகதகத்துக் கொண்டு இருக்கிறது. இப்போதிருக்கும் மண் தொட்டியை உடைத்துப்போட நீங்கள் தயங்குவதால் வளர முடியாமல் தவிக்கிறது. உங்களைச் சுற்றி நீங்களே பின்னிக்கொண்டு இருக்கும் வலைகளிலிருந்து விடுபட்டால் தான் வளர்ச்சி என்பது சாத்தியம்!

அரசனைத் தேடி ஓர் இளைஞன் அவ்வப்போது அரண்மனைக்கு வருவான். அவனுக்கு ராஜமரியாதை தந்து நிறைய செல்வங்கள் கொடுத்து அனுப்புவான் அரசன். அத்தனையையும் தொலைத்து விட்டு அவன் மீண்டும் வந்து நிற்பான். அரசனும் முகம் கோணாமல் மறுபடி அவனுக்கு வாரி வழங்குவான்.

ஒருமுறை தலைமை அமைச்சர் அரசனிடம் மெதுவாகக் கேட்டார். 'மன்னா, நீங்கள் கொடுக்கும் செல்வத்தை இவன் பொறுப்பில்லாமல் தவறான நண்பர்களோடு சேர்ந்து வீணடித்து விட்டு வருகிறான். எதற்காக மீண்டும் மீண்டும் அவனுக்கு வழங்குகிறீர்கள்?'

'அமைச்சரே! நான் பிறந்தபோதே என் தாய் இறந்து போனாள். அரண்மனைப் பணியில் இருந்த இவன் தாய்தான் இவனுடன் சேர்ந்து எனக்கும் தாய்பால் கொடுத்து வளர்த்தாள். அதனால், இவனை என் சகோதரனாகவே நினைக்கிறேன்' என்றான் அரசன்.

'அடுத்த முறை அந்த முட்டாள் பையன் வந்தபோது, வேறொரு விபரீத கோரிக்கையை முன் வைத்தான். 'உன்னைச் சுற்றி புத்திசாலிகள் இருப்பதால் தான் என்னை விட மேன்மையாக இருக்கிறாய். உன் அமைச்சர் என்னுடன் இருந்தால், என்னாலும் ராஜ்யத்தை ஆள முடியும். அவரை என்னுடன் அனுப்பு! என்று மன்னனிடம் கேட்டான் அவன். என்ன செய்வது என்று புரியாமல் அரசன் திணறினான்.

'மன்னா... உங்களுடன் பால் குடித்து வளர்ந்த சகோதரனுக்கு உதவ, என்னுடன் பால் குடித்து வளர்ந்த என் சகோதரனை அனுப்புகிறேனே! என்றார் அமைச்சர்.

மறுநாள் அரசவைக்கு அமைச்சர் வந்தபோது ஒரு எருமைக் கடாவைக் கயிற்றில் கட்டி இழுத்து வந்தார். 'ஏன் சிரிக்கிறீர்கள்? இவனும் நானும் ஒரே எருமைத் தாயின் பாலைத்தான் குடித்தோம். மன்னனின் சகோதரனுக்கு அமைச்சராக இருக்க இந்தச் சகோதரனை அனுப்புகிறேன்' என்றார்.

நாம் ஒரே தாயிடம் பால் குடித்து வளர்ந்திருக்கலாம். ஆனால் நம் உடலை, மனதை, உணர்ச்சிகளை, சக்தியை எப்படித் திறம்படப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துத்தானே நம் வளர்ச்சி அமையும்.

பொதுவாக உங்கள் நண்பர்களைச் சந்திக்கும்போது என்னவெல்லாம் பேசுவீர்கள்? பட்ஜெட்டில் வரிகளை எப்படி விதிக்க வேண்டும். எந்தெந்தக் கட்சிகள் கூட்டணி வைத்துக்கொண்டால் தேர்தலில் வெற்றி பெற முடியும். அரசாங்கம் எப்படி நடக்க வேண்டும் என்றெல்லாம் விவாதிப்பீர்கள்.

முஷ்ரப் பற்றியும், பில்லாடன் பற்றியும், ஜோர்ஜ் புஷ் பற்றியும் எல்லா விபரங்களும் வைத்திருப்பீர்கள். இப்படி உலக நடப்புகள் எல்லாவற்றையும் விரல் நுனியில் வைத்திருப்பீர்களே, உங்களைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? உங்களுடைய திறமையின் வீச்சுப் பற்றி உங்களுக்கு முழுமையாகத் தெரியுமா?

கண்ணாடி அணிபவர்களுக்கு முதன் முதலாக அதை அணியும் போது, வேண்டாத பாரமாக இருக்கும். பழக்கமான பின் அதைப் பற்றிய கவனமே இருக்காது. கவனிக்கப்படாவிட்டாலும், அது தன் வேலையைத் திறம்படச் செய்துகொண்டு இருக்கும். அதேபோல்தான் உங்கள் திறமையும்!

இருபத்து நான்கு மணி நேரமும் அதனைக் கூர்மையாக வைத்திருக்க, முதலில் கவனத்துடன் பயிற்சி செய்யுங்கள். பழக்க வசத்தால், அது உங்கள் இயல்பான குணமாகி விடும். பிறகு, எந்தச் சந்தர்ப்பத்திலும் அது பயன்படத் தயாராக இருக்கும். சாலையில் வண்டி ஓட்டிப் பழகும்போது உங்கள் மொத்தக் கவனமும் அதிலேயே இருக்கும். நல்ல பயிற்சி பெற்ற பிறகு, அதுபற்றிய பயமோ, பதற்றமோ இல்லாமல் மிக இயல்பாக வண்டியில் பயணம் செல்ல ஆரம்பிப்பீர்களே. அது போல! மோட்டார் வாகனத் தொழிலில் பெரும் சாதனை புரிந்த ஹென்றி...போர்டு பற்றித் தெரியும்தானே! 'நீங்கள் பெரிய ஜீனியஸ்' என்று புகழப்பட்டபோது, அவர் என்ன சொன்னார் தெரியுமா?

'அதிமேதாவித்தனமாவது, மண்ணாங் கட்டியாவது! உங்களிடம் இருக்கும் அதே புத்திசாலித் தனம்தான் என்னிடமும் இருக்கிறது. விடாமுயற்சியுடன் உழைத்து நான் அதைப் பயன்படுத்தினேன். அவ்வளவுதான்!' என்றார்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

கிடங்கில் குவித்துவைக்கப்பட்டு இருக்கும் தானியம் விநியோகம் செய்யப்படாத வரை, யாருக்கும் உபயோகம் இல்லை. வீணாக மக்கி குப்பைக்குத்தான் போய்ச் சேரும். திறமைகளையும் தேக்கிவைத்திருக்காதீர்கள். அவற்றைப் பயன்படுத்திக் கொண்டே இருந்தால்தான் பலன்!.

புதிய வாய்ப்புக்களைத் துணிச்சலோடு எதிர்கொள்ளப் பழக்கினால்தான், உங்கள் திறமையும் முழுமையாகப் பரிமளிக்கும். அது உங்களை அடுத்தடுத்த தளங்களுக்கு உயர்த்திக் கொண்டே இருக்கும்.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'வாழ்க்கையில் அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்?

'தொழிலில் இருந்தாலும் சரி, ஆன்மீகப் பாதையில் இருந்தாலும் சரி, நீங்கள் புதிதாக எந்த வேலையைச் செய்ய முனைந்தாலும் சரி, அதில் தீவிரமான கவனமும், முழுமையான ஈடுபாடும் செலுத்திச் செயலாற்றுங்கள். எடுத்துக்கொண்ட காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க, உங்களுடைய முழுத்திறனையும் பயன்படுத்துங்கள். பழகிய வேலையாக இருந்தாலும் அசிரத்தையாகவோ, கடனே என்றோ செய்யாமல், ஒவ்வொரு கணமும் புதிய வேலையை ஏற்றிருப்பதாகவே நினைத்துச் செய்யுங்கள். உங்கள் முழுத் திறனையும் வெளிக் கொணர்ந்து, புதிய ஆர்வத்தோடு இதயபூர்வமான ஈடுபாட்டையும் செலுத்தி, முழு விருப்பத்தோடு செய்து பாருங்கள்.

அடுத்தடுத்த புதிய கட்டங்களைச் சுலபமாகச் சென்றடைவீர்கள்!







**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

**தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்**
**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

**விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்**

***Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480***

**3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough**

# ரஜனி, கமல் இருவரில் அரசியலில் முந்துவது யார்?



## தமிழ்நாடு அரசியல்

**சிவதாணு**



"அரசியலுக்கு வருவேன்" எனச் சூசகமாகத் தெரிவித்த நடிகர் ரஜினிகாந்த் இன்னும் தயங்கிக் கொண்டிருக்கிறார் ஆனால், "அரசியலுக்கு வரமாட்டேன்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்து வந்த நடிகர் கமல்ஹாசனோ, "அரசியலுக்கு ஏற்கெனவே வந்துவிட்டேன்" என்கிறார். தமிழக அமைச்சர்களுக்கு எதிராக அவர் தொடுத்திருக்கும் அறிக்கைப் போரால் கமல்ஹாசன் ரசிகர்களும் உற்சாகமாக களம் இறங்கிவிட்டார்கள். அதேநேரம் நம் தலைவர் எப்போதுதான் வருவாரோ என ரஜினி ரசிகர்களோ உற்சாகம் இழந்திருக்கிறார்கள். யார் முந்துவார்?

பொதுவாக, நடிகர் கமல்ஹாசன் செய்தியாளர்கள் சந்திப்பில் எதைப் பற்றி வேண்டுமானாலும் கேள்விகள் கேட்கலாம் எத்தனை கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம் தமிழ், ஆங்கிலம், மலையாளம், இந்தி என அவருக்குத் தெரிந்த எந்த மொழியிலும் கேட்கலாம். எல்லாவற்றுக்கும் நிதானமாகப் பதில் சொல்வார். அவரது பதில்களில் அநாகரிகச் சொற்கள் இருக்காது கோபம் எட்டிப் பார்க்காது. அவ்வளவு பக்குவம். ஆனால், சில தினங்களுக்கு முன் நடந்த ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், வழக்கத்தை மீறிய மாற்றம் கமலின் பதிலில் வெளிப்பட்டது.

"தமிழ்நாட்டில் லஞ்சம் ஊழல் தலைவிரித்தாடுகிறது" என்று ஒரு கேள்விக்குக் கமல் பதிலளித்தபோது, "குறிப்பாக எந்தத் துறையில் என்று சொல்லமுடியுமா?" என்று ஒரு நிருபர் கேள்வி எழுப்பினார். "ரோடு சரியில்லை என்கிறேன். எந்த இடத்தில் சரியில்லை என்று கேட்பதுபோல் இருக்கிறது. நான் சொல்கிறேன், எல்லாத் துறைகளிலும் தான்" என்று கமல் குரல் உயர்த்தியபோது, அவரிடம் முன்னெப்போதும் கண்டிராத பெருங்கோபமும் ஆத்திரமும் வெளிப்பட்டது.

கமலின் இந்த குற்றச்சாட்டுக்கு அமைச்சர்கள் மத்தியில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது. "ஜெயலலிதா உயிரோடு இருந்தபோது வாயைப் பொத்திக் கொண்டிருந்த கமல்ஹாசன், இன்றைக்கு வாய் திறப்பது வேடிக்கையாக இருக்கிறது. அவருக்கு தைரியம் இருந்தால் அரசியலுக்கு வந்து இந்தக் கருத்தைச் சொல்லட்டும்.

அரசியலுக்கு வருவதற்குத் தைரியம் இல்லாமல் போகிறபோக்கில் பொத்தம் பொதுவாகச் சேற்றை வாரி வீசினால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று நிதி அமைச்சர் டி. ஜெயகுமார், கமலுக்கு எதிராக சீறியதும், "கருத்துச் சொல்ல அனைவருக்கும் உரிமை உண்டு. விமர்சனங்களுக்குப் பதில் சொல்வது ஆட்சியாளர்களின் கடமை" என்று கமலுக்கு ஆதரவாக மு.க.ஸ்டாலின், ஓ. பன்னீர்செல்வம், திருமாவளவன் உட்பட மற்ற கட்சியினர் குரல் கொடுத்ததும், தமிழ்நாட்டு அரசியலின் கடந்த சில வாரப் பரபரப்பு.

சமீபகாலமாகவே அரசியல் பற்றியும் அரசு பற்றியும் அடிக்கடி தனது கருத்துக்களை வெளிப்படையாக பேசி வருகிறார் கமல். சசிகலா முதல்வராக முயற்சித்தபோது, ஓ.பன்னீர்செல்வமா, சசிகலாவா என அரசியல் களம் அதகளப்பட்டபோது, முதல் முறையாக யார் முதல்வராக இருக்கலாம் என்று தனது கருத்தை அறிக்கை ஒன்றில் அப்பட்டமாக வெளிப்படுத்தினார் கமல். அவர் வெளியிட்டிருந்த அந்த அறிக்கையில், "ஓ.பன்னீர்செல்வம் இப்போது பதவியில் இருக்கிறார். அவரது ஆட்சி நிர்வாகத்தில் சேதம், திறமையின்மை என்று எந்த அறிகுறியும் இதுவரை இல்லை. அவர் ஏன் சிலகாலம் முதல்வராக நீடிக்கக்கூடாது. எனக்கென்று அரசியல் சித்தாந்தங்கள் இருக்கின்றன. மக்களுக்கு எது நல்லதோ அதை ஆதரிக்கிறேன். சசிகலா முதலமைச்சர் ஆவதை நான் விரும்பவில்லை" என்றார். கமல் இவ்வளவு வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்தது யாரும் எதிர்பாராதது. அன்று தொடங்கிய அறிக்கைப் போர்தான் வளர்ந்து இன்று பூதாகரமாக வெடிக்கத் தொடங்கியுள்ளது. ரஜினியின் அரசியல் பிரவேசம் பற்றிய கருத்து பரிமாற்றங்களும் விவாதங்களும் சற்று அமைதியாகியிருக்கும் இந்தத் தருணத்தில் கமலின் அரசியல் மற்றும் ஆட்சி குறித்த அதிரடிக் குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள், அவருக்கு ஆதரவாக பொங்கும் கருத்துக்கள் கூர்ந்து கவனிக்க வைக்கிறது.

கமல்ஹாசன், தமிழக அரசியலில் ஜெயலலிதா மறைவால் உருவாகியிருக்கும் வெற்றிடத்தைப் பயன்படுத்தி அரசியலுக்கு வர நினைக்கிறாரா அல்லது பலரும் சொல்வதுபோல் தற்போது விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிவரும் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியின் டிஆர்பி ரேட்டிங்கை ஏற்றுவதற்கான முஸ்தீபுதானா இது.

கடந்த மே மாதம் தனது ரசிகர்களைச் சந்தித்த நடிகர் ரஜினிகாந்த், "தமிழக அரசியல் நிர்வாகம் சீர்கெட்டுள்ளது. இங்கு சிஸ்டம் சரியில்லை. மொத்தத்தையும் சரி செய்தால்தான் தமிழகம் உருப்படும்" என்று தடாலடியாகப் பேசிப் பரபரப்பை ஏற்படுத்தினார். இதனையடுத்து, புதுக் கட்சி அறிவிப்பு எப்போது இருக்கும் என்று ரஜினி ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். ஆனால், ரஜினி காந்தோ அமைதி காக்கிறார். படப்பிடிப்பு, அமெரிக்கா பயணம், மீண்டும் படப்பிடிப்பு என்று நடிப்புப் பணிகளிலேயே பரபரப்பாக இருக்கிறார்.

இந்நிலையில், "சட்டசபைக்கு மறுதேர்தல் வரவேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். சிஸ்டம் சரியில்லை என்று ரஜினி சொல்லியிருக்கிறாரே?" என்று ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் கமலிடம் கேட்டபோது, "இரண்டும் ஒரே கருத்துதான். ஒரே திசையை நோக்கிச் செல்லும் வெவ்வேறு கருத்துகள். இன்னொன்று, சிஸ்டம் சரியில்லை என்று முதன்முதலில் கருத்துச் சொன்னதே நான்தான்" என்று பதிலளித்தார். எனில், ரஜினிக்கு முன்பே நான் அரசியலுக்கு வந்துவிட்டேன் என்கிறாரா கமல்.

பல சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களின்போதும் தனது ஆதரவு எந்தக் கட்சிக்கு என்று ரஜினி வெளிப்படையாகவே கருத்து தெரிவித்திருக்கிறார். "நான் எப்ப வருவேன், எப்படி வருவேன்னு தெரியாது ஆனால், வரவேண்டிய நேரத்தில் கரெக்டா வருவேன்" என்று தனது அரசியல் பிரவேசம் பற்றிப் பூடகமாக சினிமா வசனம் பேசியிருக்கிறார். 1996-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், "ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் இனித் தமிழ்நாட்டை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது" என்று பகிரங்கமாக அறிவித்ததுடன் திமுக, தமாகா கூட்டணி உருவாகவும் காரணமாக இருந்தார். 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், "இந்தத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சிக்கே எனது ஓட்டு" என்று வெளிப்படையாக அறிவித்து அதிர்வை ஏற்படுத்தினார்.

ஆனால், கமல்ஹாசன் இதற்கு முன் அரசியல் மற்றும் ஆட்சி பற்றி அதிகமாகப் பேசியதில்லை. மேலும், "அரசியலுக்கு வரமாட்டேன்" என்று பல பேட்டிகளில் திட்டவட்டமாகவே சொல்லி வந்திருக்கிறார்.

(தொடர்ச்சி 35 ஆம் பக்கம்...)


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM /NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# தாழ்வு மனப்பான்மை

- ஞானா உருத்திரன் -

பிள்ளைகளை குறைத்து மதிப்பிடும் பெற்றோர்களும் அவர்களை அளவுக் கதிகமாக கட்டுப்படுத்தும் பெற்றோர்களும் பிள்ளைகளுடைய உண்மையான வளர்ச் சியை தடுக்கின்றார்கள். அதனால் அந்தக் குழந்தைகள் தன்னம்பிக்கை அற்றவர் களாக்க உருவாகின்றார்கள் எனப் பல ஆராய்ச்சிகள் மூலம் அறியப்படுகின்றது. பொதுவாக தமக்குள்ளே சண்டைபிடிக்கும் பெற்றோரும் பிள்ளைகளை தன்னம்பிக்கை அற்றவர்களாக்க உதவுகின்றனர். முதலில் நாம் குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை யையே ஊட்ட வேண்டும். தன்னம்பிக்கை இருந்தால் மட்டுமே அவர்களால் அவர் களுடைய சக்திகளைப் பயன்படுத்தி வளர்ச்சியடைய முடியும். எவ்வாறு அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தலாம் எனப் பார்ப்போம்.

அவர்களுடைய தவறுகளை சுட்டிக் காட்டுவதில் தவறில்லை. ஆனால் அவர் களை எல்லாவற்றிலும் கட்டுப்படுத்தி வைக்கக்கூடாது. அவர்களை வைத்துக் கொண்டு பெற்றோர் தமக்குள்ளே ஒருவரை ஒருவர் குறை சொல்லக்கூடாது. அவர்கள் விடும் தவறுகளை பெரிய விடயமாக்கி விடாமல் அவற்றை அமைதியாக அவர் களுடன் அமர்ந்து அவர்களைப் பார்த்து நயமாக சுட்டிக்காட்ட வேண்டும். எம்மை சமநிலையில் வைத்துக்கொண்டே நாம் குழந்தைகளுடன் பேச வேண்டும். நாம் கோபத்துடனோ, பயத்துடனோ இருந்து அவர்களுக்கு ஒன்றைச் சொன்னால் அவர் களும் அந்த உணர்வுக்கு மாறிவிடுவார் கள். அவர்களால் நாம் சொல்லும் விடயங் களை சரிவரக் கிரகிக்க முடியாது.



பெற்றோர் சமநிலையின்றி கவலையுடனோ கோபத்துடனோ இருந்து அதை மறைத்துக் கொண்டு பிள்ளைகளுடன் ஏதாவது ஒன் றைச் செய்யும்பொழுது (உதாரணமாக நாம் கவலையுடன் இருந்துகொண்டு பிள்ளை களுக்குப் பாடம் சொல்லித்தரும் போது) அவர்களால் எமது இதயத்தினுடைய அந்த உண்மையான உணர்வை அந்தக் கவலையை, கோபத்தை உணர்ந்து விட முடியும் என்பது நவீன ஆராய்ச்சிகளின் முடிவு. எங்களை நம்பி அன்பாக உணர்ந்து தன்னம்பிக்கையோடு நாங்கள் பிள்ளைகளை அணுகினால் மட்டுமே அவர் களும் அவற்றை உணர்வார்கள். அவர்க ளும் தன்னம்பிக்கை அடைவார்கள். தமது வாழ்க்கையை சரிவரக்கொண்டு செல்லாத பெற்றோரால் பிள்ளைகளின் வாழ்க்கையை மாற்றமுடியாது. பெற்றோர் சொல்வதை பிள் ளைகள் கேட்பதில்லை. அவர்கள் செய் வதைக் குழந்தைகள் பார்க்கின்றார்கள். அவர்கள் உணர்வதைக் குழந்தைகள் உணர்கின்றார்கள். ஆக, சிறு வயதிலேயே தன்னம்பிக்கை கொண்ட பிள்ளை வளர்ந்த பின்னும் அப்படியே வாழும்.

பெரியவர்கள் எவ்வாறு தன்னம்பிக்கையை அடைவது என்பதும் மிக முக்கியமான-தாகும். முதலில் எந்த விடயங்களில் நாம் நம்பிக்கை இழக்கின்றோம் எனப் பார்க்க வேண்டும். அதற்கும் கடந்த காலங்களில் நிகழ்ந்த சந்தர்ப்பங்களுக்கும் தொடர் புள்ளதா எனப் பார்க்க வேண்டும். உதார ணமாக ஒருவர் மேடையில் பேசத் தயங்கு கின்றார் எனில் சிலவேளைகளில் சிறுவய-தில் அவர் மேடையேறியிருந்தும் சரிவரப் பேச முடியாத சம்பவம் ஒன்று நடந் திருக்கலாம். அது அவருக்கு நினைவிருக்க லாம் அல்லது மறக்கப்பட்டிருக்கலாம். இப் படியான சில விடயங்கள் சிறு வயதுகளில் நடப்பது கூடப் பெரியவர்களான பின் தன்னம்பிக்கையை குறைத்து விடும். இப்படியாக ஒவ்வொருவருக்கும் சிறுவயதில்

> ஞானா உருத்திரன். மருத்துவ துறை யில் கல்வி கற்று உயிரியல் மருத்துவ (Bio Medicine) துறையில் முது நிலை பட்டப் படிப்பை முடித்து இருக்கிறார். Healing மற்றும் energy work போன்ற வற்றை முழுமையாகப் படித்து இத்துறை களில் மக்களுக்காக சேவை செய்து வருகிறார். தகவல்களை இணையத் தளத்தில் காணலாம்.
> http://gnanaruthiren.com/tamil/

இந்த அனுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம். பெற்றோரால், சகோதரர்களால் பாதிக்கப் பட்டிருக்கலாம். அப்படியான விடயங்கள் இருந்தால் அவற்றை உணரவேண்டும். உணர்வதுதான் முதலாவது படி அந்தப் பதிவுகளை நீக்குவதற்கு. அவர்கள் என் னைப் போன்ற மருத்துவத்துறையில் கல்வி பயின்று பயிற்சி அளிப்பவர்களிடம் ஹீலிங் (healing) பெறுவதன் மூலமும் அவற்றை நீக்கலாம். ஹீலிங் முறை அவர் களுடைய பழைய பதிவுகளால் ஏற்பட்ட சக்திகளை நீக்கி புதிய சக்திகளை வழங்குவது ஆகும்.

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)


பிரியாஸ்

புதிய முகவரியில் புதுப் பொலிவுடன்

1661 Denison Street (Kennedy & Denison) இல்

அமைந்திருந்த எமது நிறுவனம் தற்பொழுது வாடிக்கையாளரின்

நலன் கருதி புதிய முகவரியில் (Denison & Mccowan)

7380 MCcowan Road, Unit #3, MARKHAM, ON L3S 3H8

அனைத்து வகையான இலங்கை இந்திய குறோசறி மற்றும்

மரக்கறி வகைகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

905.944.1229

# வயிற்றுக் கோளாறு

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**




C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

மனிதனின் ஆயுளும் ஆரோக்கியமும் அவனுடைய உடலின் உறுப்புக்களின் செயல்பாட்டைப் பொறுத்தே அமைகிறது. பொதுவாக மனித உடலில் பல உறுப்புக்கள் மிகவும் இன்றியமையாத பணிகளைச் செய்து வருகின்றன. அப்பணிகளைத் திறம்பட செய்ய மூலகாரணமாக இருப்பது வயிறுதான்.

மனிதனுக்கு உணவில்லாமல் உறுப்புகள் செயல்படாது. உண்ணும் உணவானது பற்களால் அரைக்கப்பட்டு உணவுக்குழல் வழியே இரைப்பையை அடைகிறது. அங்கு பித்த நீரில் அவை செரிக்கப்பட்டு உணவில் உள்ள சத்துக்களைக் குடல் உறிஞ்சி இரத்தத்திற்கு அனுப்புகின்றன. மீதமுள்ளவற்றை சிறுகுடல் வழியாகப் பெருங்குடலுக்குத் தள்ளி வெளியேற்றுகிறது.

இந்தச் செயல்பாடு முறையாகவும் சீராகவும் நடந்தால்தான் அவனுக்குத் தேவையான சத்துக்களோடு, நீண்ட ஆரோக்கியமும் கிடைக்கும்.

இதனால்தான் முன்னோர்கள் உயிரே பிரதானம் என்றார்கள். இரைப்பை செரிமானமின்மையால் பாதிக்கப்படும்போது உடல் முழுவதும் பாதிப்படைகிறது.



வயிற்றுக்கோளாறுகள் ஏற்பட முக்கிய காரணமாக அமைவது உணவும் மனமும்தான். இவை இரண்டிலும் மாறுபாடு காணும்போது அது வயிற்றுக்கோளாறாக மாறுகிறது.

அதிகம் உணர்ச்சி வசப்படுதல், கோபம், மன எரிச்சல், இரவு அதிக நேரம் கண் விழித்தல், தூக்கமின்மை, உடற்சூடு, மலச்சிக்கல், நேரம் கடந்த உணவு இவற்றாலும், எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுகள், மது, புகை, போதைப்பழக்கங்கள், மாவுப்பண்டங்கள், வாயுவை அதிகரிக்கும் உணவுகள், வயிற்றில் கிருமிகள்போன்ற காரணங்களால் வயிற்றுக்கோளாறுகள் உண்டாகின்றன. முக்குற்றத்தில் பித்தத்தின் செயல்பாடுகள் அதிகரிக்கும் போதும் வயிற்றுக்கோளாறுகள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

வயிற்றுப் பாதிப்புக்களின் அறிகுறிகள்.
அஜீரணம்
பசியின்மை
வயிற்றுப் பொருமல்
வயிற்றுப்போக்கு
மலச்சிக்கல்
நெஞ்செரிச்சல்
வாய்ப்புண்
வயிற்றுவலி
போன்ற அறிகுறிகள் ஆரம்பிக்கும்.

வயிற்றுப்புண்

வயிற்றில் புண் உண்டானால் வயிற்றுவலி உண்டாகும். சற்றுக் காரம் கூடுதலாகச் சாப்பிட்டால், வலியுடன் எரிச்சல் உண்டாகும். வயிற்றுப்புண் இருந்தால் அதன் வெளிப்பாடு வாயிலும் புண்ணாகக் காணப்படும். இவர்களுக்கு மனதளவிலும் பாதிப்பு உண்டாகும். இவர்கள் அதிகளவு காரம், புளிப்பு, எண்ணெய் கலந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

வயிற்றுப்புண் ஆற

மாங்கொட்டையை மேல் தோலினை நீக்கி, நன்றாகக் காயவைத்து 100 கிராம் அளவு எடுத்து நன்கு தூள் செய்து, மணத்தக்காளி இலையின் சாறு விட்டு குழைத்து மோர் அல்லது வெந்நீரில் கலந்து அருந்தி வந்தால் வயிற்றுப்புண் விரைவில் ஆறும்.

வயிறு இரைச்சலுக்கு

வயிறு இரைச்சலாகவும், பொருமிக்கொண்டும் இருக்கும். இதற்கு முக்கியக் காரணம் உண்ட உணவு சரியாக சீரணமாகாமல் இருத்தல், அல்லது உடலுக்கு ஒவ்வாத உணவு உண்டாதல் இருக்கும். இதற்கு
இஞ்சி - 10 கிராம்
சீரகம் - 10 கிராம்
இலவங்கப்பட்டை - 10 கிராம்
பெருங்காயம் -5 கிராம்
இவற்றை எடுத்து எலுமிச்சை சாற்றில் ஊறவைத்து வெயிலில் நன்கு காயவைத்து தூளாக்கி 1 ஸ்பூன் அளவு சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் பொருமல் நீங்கும்.

வயிற்றுப்போக்கு

வெந்தயத்தைக் கறுப்பாக வறுத்து நன்கு பொடியாக்கி, வயிற்றுப்போக்கு உண்டாகும் நேரத்தில் சாப்பிட்டு வந்தால் உடனே பலன் கிடைக்கும். வயிறு குமட்டலும் நீங்கும்.

வயிறு பொருமல்

சுக்கு, ஓமம், இந்துப்பு இவை மூன்றையும் வகைக்கு 50 கிராம், கிராம்பு 10 கிராம் எடுத்து லேசாக வறுத்துப் பொடியாக்கிக் காலை மாலை இருவேளையும் 2 ஸ்பூன் அளவு வெந்நீரில் சாப்பிட்டு வந்தால் வயிறு மந்தம், வயிறு பொருமல், செரியாமை, ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

வயிற்றுத் தொந்தரவுகளை நீக்கினாலே மனிதன் நீண்ட ஆராக்கித்துடன் வாழலாம்.

---



## Math tutorial 347

Answers to tutorial346

1)This may be cutting ten 16 unit poles in half, thus creating 20 ,8 unit poles and then cutting 2 , 6 unit poles from each of the ten other 16 unit poles or by cutting a 6 unit pole and an 8 unit pole from each 16 unit pole.There is of course, some wastage.The least number of 16 unit required is 30.

2)A possible answer sheet is T T F F F T F T T T

b)Since each question can be true or false, there will be $2^{10}=1024$ different answer sheets

3)The 8 tallest can be arranged in 8! *ways* in the last row .For each of these , the remaining 16 people can be arranged in the 16 remaining positions in 16! Ways .Hence there will be 8! X16! Different arrangements

4)Two directions are $\overline{BA}=(5,5,-1)$ and $\overline{AC}=(4,-8,7)$.Choosing any of the 3 points, a vector eqation is

$\bar{r}=(2,6,-5)+s(5,5,-1)+t(4,-8,7)$

5)In order to have a multiple of (x+5), there must be no remainder, so instead of remaider x+3 , there must be x+5,so the 1st multiple greater than f(x) is f(x) +2

Tutorial 347(Questions)

1)Factorize $x^4+5x^2+9$

2)a)Show that x-y is a factor of $x^5-y^5$

b)Factor $x^5-32$

3)Find the Cartesian equation of the line that passes through the point(-1 ,-2) and is parallel to the line 3x-4y+5=0

4)Acomputer password must have8 symbols.These symbols can be either upper orlower case, and anydigits from 0 to 9 9 (a) any symbols can be repeated ,how many passwords are possible?

b)How many passwords can be formed with no repeated symbols?

c)How many passwords with at least one 9?

By Mr S.F.Xavier (Teacher)tel 6473409490/4167322228

# யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)


- கனி -
416.261.1348
ptons@hotmail.ca




5. பெருவீக்கக் காலம் (தொடர்ச்சி)

சென்ற தடவையில் பெருவீக்கம் பற்றிய அறிமுகத்தைப் பார்த்தீர்கள். தொடர்ந்து அந்த அதிசய நிகழ்வின் பின்னனியில் உள்ள தார்ப்பரியங்களைத் தெரிந்து கொள்வோம்.

பேரிணைக் காலத்தின் சின்னவெளிப் பேரண்டத்துள் குவாண்ரம் இயல்புகளும் ஈர்ப்பின் இயல்புகளும் வந்து விட்டன. இவற்றின் விளைவுகள்தான் பேரண்டத்தை உண்மையிற் செப்பனிட்டிருக்க வேண்டும், செப்பனிட்டன. ஈர்ப்பின் விளைவுகளைப் பார்ப்பதென்றால், இப்போது இருக்கும் அறிவியல் நிலையின்படி, பொதுச்சார்ப்புக் கொள்கையைத்தான் நம்பவேண்டும். பொதுச்சார்புக் கொள்கை முடிவுகளோ அதன் சமன்பாட்டின் தீர்வுகளின் வழியில் பெறப்படுகின்றது. இச்சமன்பாடு, பல காரணிகளைக் கொண்டுள்ளது. அக்கார ணிகளின் அடிப்படையில்தான் பொதுச் சார்புக்கொள்கை தெளிவுபடுத்தப்பகின்றது. அதனையும் மென்மையாகத் தெரிந்து கொள்வோம்.

ஈர்ப்பின் விளைவு, அது கருதப்படும் பகுதி யினுள் உள்ள சடங்கள், சக்தியடர்த்தி என்பவற்றுடன் வெளியின் அமுக்கத்திலும் தங்கியுள்ளது. அப்போதிருந்த குட்டிப் புடவியினுள் சடம் ஏதும் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். அத்துடன் இயல் பின் அடிப்படையில் அதனது மொத்த சக்தியும் கிட்டத்தட்ட பூச்சியம் எனக் கணித்துள்ளார்கள். (இது மிகவும் சிக்க லான கணிதக் காட்டுதல் என்பதால் அத னைக் கருதாது முடிவினை மட்டும் கருத்தினிற் கொள்ளுவோம்) இந்நிலையில் அமுக்கம் அங்கு அதிக செல்வாக்கினைக் காட்டக் கூடியதாக அமைந்து விடுகின்றது. அத்துடன் அதன் தன்மையும் எதிர்பாங் காக (மறையாக) அமைந்து விடுகின்றது. என்ன நிகழும் எனப் பாருங்கள். பொது வாக, ஈர்ப்புச் செயற்படும் பகுதி ஈர்ப்பி னால் சுருங்க முயலும் என்பது எங்களுக் குத் தெரியும். ஆனால் பேரிணைக் காலத் தில் சுருங்குதலுக்குப் பதிலாக அதன் மறை அமுக்கத் தன்மையினால் விரிவடை யும் நிலையில் புடவி அமைந்து விடுகின் றது. இதனை முரண் ஈர்ப்பு இயல்பு என்கிறார்கள்.

முரண் ஈர்ப்பு விளைவினையும் மெதுவாகப் பார்த்துக் கொண்டு செல்வோம். பொது வாகவே இரண்டு வகைச் சக்திகளைப் பொருட்கள் கொண்டிருக்கும் ஒன்று அதனது நிலையின் காரணமாகக் கொண் டுள்ள சக்தி. அதனை நிலைப்பண்புச்சக்தி என்போம். மற்றது அதனது இயக்கத்திற் குக் காரணமாக இருக்கும் சக்தி. இதனை இயக்கசக்தி என்போம். இவ்விரண்டு சக்தி களின் மொத்த சக்தியையே நானாயினும் சரி, நீங்களாயினும் சரி, அல்லது பேரண்ட த்துள் உள்ள எந்தப் பொருளாயினும் சரி கொண்டிருக்கும். ஆனால், இவ்விரண்டு சக்திகளும் தன்மையில் ஒன்றுக்கொன்று முரணானவையாகக் காணப்படும். இத னைத் தெளிந்து கொண்டு, இந்நாளின் பேரண்டத்தின் மொத்த சக்தியைப் பற்றியும் பார்த்துக் கொள்வோம்.

எனது கையில் ஒரு சிறிய கல்லினை வைத்திருக்கிறேன் என்போம். எனது கையில் அது ஓய்வில் இருப்பதால் அதற்கு இயக்கச்சக்தி இல்லை. புவியின் ஈர்ப்புக்கு எதிராக எனது கையில் தங்கியி ருப்பதால், அதனது நிலை காரணமாக, அது நிலைப் பண்பு சக்தியை மட்டுமே கொண்டிருக்கும். எனது கையிலிருந்து அக்கல்லை விடு வித்தால், உடனேயே அது புவியினை நோக்கி விழும். விழுகையில் அது இயங்கு வதால் அதற்கு இயக்கச் சக்தியும் சேர்ந்து விடும். எப்படி இந்த இயக்கசக்தி அக்கல்- லிற்கு வருகின்றது எனவும் தெரிந்து கொள்ளுங்கள். ஈர்ப்பின் காரணமாக விழுகையில், அது கொண்டிருந்த நிலைப் பண்புச் சக்தியில் இருந்து சக்தியை எடுத்து, தனக்குத் தேவையான இயக்க சக்தியைப் பெற்றுக் கொள்ளுகிறது. அவ்வளவுதான் அங்கே மறைந்துள்ள இரகசியம்.

இனி, அப்பொருள் இயங்கத் தொடங்கிய தும் அதன் நிலைப்பண்புச்சக்தியானது குறைந்து கொண்டு வர அதன் இயக்கச் சக்தியானது கூடிக் கொண்டு வருகிறது. ஈற்றில் அப்பொருள் புவியின் மேற்பரப் பினை அடைந்ததும் புவியின் மேற்பரப் பில் தங்கிவிடும். இப்பொழுது இயக்க சக்தியும் இல்லை நிலைப்பண்புச் சக்தியும் இல்லை. அதன் மொத்தச் சக்தி பூச்சியமா கிவிடுகின்றது. ஆயின், அப்பொருள் கொண்டிருந்த சக்தியிற்கு இப்பொழுது என்னவாயிற்று? சக்தியை ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்று சக்திக்காப்பு கூறுகிறதே, என்ற கேள்வி ஒன்று எழலாம். விழுகின்ற பொருள் தரையில் மோதுகைக ளில் ஒலி எழுமல்லவா! அந்த ஒலியிற் கான சக்தியாகவும் வெப்பச்சக்தியாகவும் வேறு சக்திகளாகவும் அது கொண்டிருந்த சக்தியானது மாற்றப்பட்டு, இப்போது அக் கல் சக்தி இல்லாது ஓய்வில் இருக்கும்.



இங்கு நாம் ஈர்ப்பினால் பொருள் விழு வதை கவனிக்கக் கூடியதாக உள்ளது. பொதுவாகவே புவியின் ஈர்ப்பு இருக்கக் கூடிய இடங்களில் எல்லாம் புவியினா லான நிலைப்பண்புச் சக்தியிருக்கும். இன் னொரு விடயம், புவியின் ஈர்ப்புப் புலத்தி னுள் விடப்படும் பொருட்கள் எல்லாம் புவி யினை நோக்கித்தான் விழுகின்றன. மாறாக புவியினை விலத்தச் செல்வதில்லை. இத ற்கு ஈர்ப்புவிசையினைக் காரணமாகக் நாம் கூறினும் இன்னொரு விதமாகவும் விளங் கிக் கொள்ளலாம். விடப்படும் இடத்தில் புவியின் ஈர்ப்பினால் கொண்டுள்ள நிலைப் பண்புச்சக்தி மறை (-) கணியமாக இருப்ப தனால்தான் அது கீழ் நோக்கி விழுகின் றது எனலாம். ஏனெனில் பேரண்டத்தின் பொருட்களின் சிறப்பான இயல்புகளில் ஒன்று சக்தியை இழந்து பூச்சிய சக்தி நிலையை எய்துவதே. இப்படியாக பொருள் விழுகையில் குறைகின்ற நிலைப் பண்பு சக்தி, அதில் இயக்க சக்தியாக அப்பொருளுக்கு வழங்கப்படும். இயக்க சக்தி எப்பொழுதும் நேர்ப் பெறுமானமான சக்தியாகும்.

இந்த நிலையானது பேரண்டத்துள் உள்ள பொருட்கள் எல்லாவற்றிலும் காணப்படும். கதிரவனாக இருப்பினும் சரி, கலக்சியாக இருப்பினும் சரி, வேறு என்ன பொருளாக இருப்பினும் சரி, அவற்றினைச் சுற்றியுள்ள அவற்றின் ஈர்ப்புப் புலத்தினுள் இருக்கும் பொருட்களில் அப்பொருளின் நிலைப் பண்புச்சக்தி இருக்கும். அதாவது ஈர்ப்புப் புலம் உள்ள இடங்களில் எல்லாம் உள்ள பொருட்களில் இந்த மறைப் பெறுமான- மான நிலைப்பண்புசக்தி இருக்கும். பேரண் டம் முழுவதும் ஈர்ப்புப் புலம் இருப்பத னால், எங்கிலுமே நிலைப்பண்பு சக்தியின் பெறுமானம் மறையாக இருக்கும்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்பு பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பேரண்டத்தில் உள்ள பொருட்கள் எல்லாம் ஏதோ ஒருவித இயக்கத்தில் உள்ளன என்பது தெரியும். அத்துடன் பொருட்கள் சக்தியின் உறைவினால் ஆனவை என்ப தால், அவற்றிலும் அயன்ரைனின் காட்டிய படி $mC^2$ அளவான சக்தி தேங்கிக் கிடக் கும் என்பதும் எமக்குத் தெரியும். எல்லாப் பொருட்களினதும் இயக்கசக்தியும் எல்லாப் பொருட்களினதும் $mC^2$களினால் ஆன சக்தி அளவுகளினதும் கூட்டுத்தொகை யானது மொத்த நேர் சக்தியாகும். இந்த நேர்சக்தியின் அளவினை விடவும் சற்றுக் கூடவாகவே ஈர்பினால் ஆன மொத்த (மறை) நிலப்பண்புச்சக்தி காணப்படுகிறது. அதனால்தான் முன்னர் கூறியது போல, பேரண்டத்தின் மொத்த சக்தியானது கிட்டத் தட்ட பூச்சியம் என விஞ்ஞானிகள் கூறிக் கொள்ளுகிறார்கள். சக்திக் காப்புத் தத்து வத்தின்படி, பேரண்டத்துள் மொத்த சக்தி யானது எப்பொழுதும் மாறாது இருக்கும். எனவே, ஆரம்பப் புடவியிலும், மொத்தச் சக்தியானது கிட்டத்தட்ட பூச்சியம் என்ற நிலையிற்றான் இருந்திருக்கும் என்பது முடிவாகும்.

இவ்விதமாகத்தான் ஆரம்பப் புடவியின் சக்தியை கிட்டத்தட்டப் பூச்சியமாகக் கணித்திருந்தார்கள். இதுதான் முரண் ஈர்ப்பு விளைவினைக் காட்டுவதற்கு வித் திட்டது. இதனுடன் சேர்ந்து இன்னமும் சில சிக்கல் நிகழ்வுகள் நிகழ்கின்றன.

அடுத்த தடவை சந்திக்கையில் அச்சிக்கல் களை விடுவிக்க முயல்வோம்.






## தாழ்வு........

14 ஆம் பக்கத்தொடர்ச்சி

அனைத்துமே சக்திகளின் அடிப்படையில் இயங்குவதால் அது சாத்தியமானதேயா கும். ஆகவே தன்னம்பிக்கை என்பது ஒரு



மனிதனுக்கு மிகவும் முக்கியமானதும், அடிப்படையானதுமாகும். தன்னம்பிக்கை மற்றும் தன்னைப்பற்றிய சுயஅறிவு அவரு டைய வாழ்க்கையில் எதிரொலி போல இயங்கும்.

ஒருவருடைய வாழ்க்கை எப்படிப்பட்டதோ அல்லது எப்படி அதை அவர் உணர் கின்றாரோ அதுதான் அவருடைய வாழ் க்கை ஆகும்.

அதனால் வாழ்வின் அடிப் படையான இந்த இயல்பை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

# அச்ச உணர்வுகள்... நிம்மதியைக் கெடுக்கின்றன



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

(Phobias)

ஒவ்வொருவரது வாழ்விலும் அச்ச உணர்வு இருந்தால் மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களை இழந்து கொண்டிருப்பர். குறிப்பிட்டதொரு பொருள், சூழ்நிலை, பிராணிகள் இடம் என்பவற்றிற்கு பயந்து போராட்டத்துடன் வாழ்ந்து வரும் பலர் தற்போது உளர். நாய் ஒன்றிற்கு அச்சம் கொள்பவர்களை பார்த்திருக்கிறோம். ஆனால், வீட்டுக்கு வெளியே போவதற்கும், சந்தைக்கு போவதற்கும் கூட பயம் கொண்டு முடங்கிக் கொண்டிருப்பவர்கள் பலர். ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 19.2 மில்லியன் மக்கள் இந்த ஒழுங்கீனத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றால் உலக அளவில் இதனை கணிப்பிடவே முடியாது. இதற்காக உளச் சிகிச்சையாளர்கள் புதிய மருந்துகளை அறிமுகம் செய்து இப்பிரச்சினையை தீர்க்க முயன்று கொண்டிருக்கின்றனர்.

சாதாரண பயம் (Fear) வேறு. அச்ச உணர்வு (Phobia) வேறு. அச்ச உணர்வு மூளையுடன் மிகவும் தொடர்புபட்டு சிறுவயதிலிருந்தே உருவாகி வெளிப்படுவதாக தற்போது ஆய்வாளர் கூறுகின்றனர். இது எவ்வாறு உருவாகிறது என்பதனை எவராலும் கூறமுடியவில்லை. இதற்காக சிகிச்சை வழங்கும் மருத்துவர்களும் குழப்பமான சூழ்நிலையிலேயே உள்ளனர்.

Phobia என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்ததொன்று. இது ஒரு அச்ச உணர்வுக்காக எழுந்ததொன்று. 19ஆம் நூற்றாண்டுவரை பொதுவான வழக்கிற்கு வரவில்லை. எனினும், 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இன்றுவரை பாவனையில் உள்ளது. இந்த ஒழுங்கீனம் உள்ளவர்கள் தங்களுக்கு ஏற்படும் அச்ச உணர்வினை தவிர்த்து வாழவே விரும்புவர்.

உளப்பகுப்பாய்வு (psychoanalytic the ory) ஆய்வில் நூற்றுக்கானவர்கள் வகை வகையாக பிரிக்கப்பட்டுள்ளனர். என்ன காரணத்திற்கு அச்சம் கொள்கிறாரோ அதற்கு ஏற்பவே பெயர்களும் வைக்கப்படுகின்றன. 1872இல் வெளியே செல்வதற்கு அச்சம் கொண்டவர்களும் Agoraphobia என பெயர் வைக்கப்பட்டது.




Westphal என்பவரே முதலில் பயன்படுத்தினார். Agora என்ற சொல்லுக்கு சந்தை (market) என கிரேக்கமொழியில் பொருள் உண்டு. 1895 இல் Henry Maudsley என்ற பிரித்தானிய உளச்சிகிச்சையாளர் எல்லா அச்ச உணர்வாளர்களையும் 'Melancholia' என்ற தலைப்பிற்கு கொண்டுவந்துள்ளார்.

உதாரணமாக பலர் பாம்பினை விரும்புவதில்லை. ஆனால் பாம்பு படத்தைப் பார்த்தாலே பயந்து நடுங்குபவர்களே இந்நோயாளிகள். இதயம் கூடுதலாக அடிக்கும். இரத்த அழுத்தம் கூடும். நாளமில்லா சுரப்பிகள் அதிகம் செயல்படும். இதனால் தினசரி வாழ்வே பாதிப்புறும். சாதாரண பயத்தினைவிட இது பல மடங்கு கூடும். இது போல் சிறியவயதுள்ள ஒருவரை நாய் கடித்திருந்தால் தொடர்ந்து நாய்களைக் கண்டாலே அதி தீவிர பயம் ஏற்படும். இது போன்றே பாரந்தூக்கி (Elevator) இல் செல்லும்போது அதில் அகப்பட்டு சிறிது நேரம் தடைப்பட்டாலும் பின்பு குறுகிய இடத்தில் நிற்கப் பயம் ஏற்படும். இப்படிப் பல சம்பவங்கள் சிறிய வயதிலேயே மூளையில் பதிவு ஏற்பட்டால் அது மாறாமல் போய் விடலாம். சில அச்ச உணர்வாளர் களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கோளாறுகள் ஏற்படலாம். உதாரணமாக விமானத்தில் செல்லப் பயம். மக்கள் கூட்டத்தில் இருக்கப் பயம். பலர் முன் பேசப் பயம். விருந்து களுக்கு செல்லப் பயம். இப்படி பல உள. இவர்கள் மற்றவர்களெல்லாம் மடையர்கள் என்று கூடச் சொல்வார்கள். உயரம், மூடிய இடம், பாம்புகள், சிலந்திகள் போன்றனவற்றிற்கும் கூடப் பயப்பட்டு அதனை தவிர்க்க முயல்பவர்கள் பலராவர். நூற்றுக்கணக்கான இவ் அச்ச உணர்வாளர்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றனர். பொதுவாக அச்ச உணர்வினை இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர். 1. குறிப்பிட்ட அச்ச உணர்வு. (Specific Phobia) 2. சமூக அச்ச உணர்வு. (Social Phobia) குறிப்பிட்ட அச்சம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது ஒரு நிலைமைக்கு ஏற்படுவது. ஆண்களில் 7 சதவீதத்தினரும் 16 சதவீதத்தினரும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். இதற்குள் இரத்தம், ஊசி போடுதல் விமானம், பாரந்தூக்கி, மூடிய இடங்கள், உயரம், நீர் நிலை போன்ற பல உள்ளடங்குவன. ஆனால் சிலவேளைகளில் சமூகப் பதட்டக்கோளாறு எனவும் கூறுவர். பொது இடத்தில் கதைக்க அச்சம், பொது இடத்தில் உணவருந்தப் பயம், பொதுவான கழிப்பறைகளைப் பாவிக்கப் பயம் இவ்வாறு பல. 11 சதவீத ஆண்களும் 15 சதவீத பெண்களும் இதனால் பாதிப்புற்றுள்ளனர். சிக்மன்ட் ஃபிரய்ட் என்ற உளவியல் அறிஞர் 'ஒரு கடினமான சூழ்நிலையை தவிர்ப்பதற்கு முயல்பவர்கள் முரண்பாடுகளுக்கு உட்படுகின்றனர்' என்று கூறியுள்ளார். சிலவேளைகளில் ஆபத்தான செய்திகளும் இப்படியான உணர்வாளர்களை உருவாக்குகின்றன. விமான விபத்துகள், மலையுச்சியிலிருந்து விழுபவர்கள், நீர் நிலைகளில் இறப்பவர்கள் பற்றிய செய்திகளே இவர்களை பாதிப்பன. இந்த வேளைகளில் பலர் வாய்விட்டு அலறுகின்றனர். கண்கள் பிதுங்க விழிக்கின்றனர். உடல் வியர்த்து நிற்கின்றனர். இதற்கு மரபுரீதியான பாதிப்பு 64 சதவீதமாகும். சிறியவர்கள் பாட-சாலைப் பயம் (School Phobia) கொள்கின்றனர். முன்பு தமது பிள்ளை பள்ளிக் கூடத்திற்கு 'கள்ளம் படுத்துகிறான்' என்று சொல்வதெல்லாம் இதனைத்தான்.

அச்ச உணர்வுகளை இயற்கையில் உள்ள உயிரினங்கள் இயற்கை காட்சி (Natural Phenomena) இரத்தம்-காயம்- நோய் (Blood, Injury, Illness), சமூகம் (Soc ial), கலப்பு உள்ளவை (Miscellaneous) என வகைப்படுத்தியுள்ளனர். இயற்கையில் உயிர் வாழ்வனற்றில் குளவி, சிலந்தி, தவளை, பூச்சிகள், குதிரைகள், சுண்டெலி, பாம்புகள், நாய்கள் போன்றன பல அடங் கும். இயற்கை காட்சிகளில் இரவு, உயரம், காற்று, இடிமுழக்கம், மழை, ஆறு, நட்சத்திரம் போன்றவை அடங்கும். நோய்கள் பற்றிய பிரிவில் நோவு, மருந்து ஊசி, இரத்தம், காய்ச்சல், காயம் போன்றவை அடங்கும். சமூகபிரிவில் தொடுதல், தோல்வி அந்நியர்கள் போன்றவற்றினை அடக்க முடியும். கலப்புள்ள பிரிவில் சிவப்புநிறம், கள்ளர், துப்பரவின்மை, புவியீர்ப்புப் போன்றன அடங்கும்.

Georgina என்ற அறிஞர் பிரதானமான 10 அச்ச உணர்வுகள் பற்றி எழுதியுள்ளார். அவையாவன: சிலந்திக்குப் பயம் (Arachnophobia), சமூகப்பயம் (Social phobia), விமானத்திற்கும் பயம் (Avoid Phobia), சந்தக்குச் செல்லப் பயம், மூடிய இடத்திற்குப் பயம், உயரத்திற்கு பயம், வாந்தி எடுக்கப்பயம், புற்றுநோய்க்குப் பயம், இடி,மின்னல் பயம், மரணபயம் எனபனவே அவையாகும்.

Arachnophobia என்பது குறிப்பிட்ட ஒன்றுக்கு அச்சப்படுவது. அதாவது சிலந்திக்கு ஏற்படும் அச்சம்.

(தொடர்ச்சி 35ஆம் பக்கம்...)

HOW DO I GET BITCOIN?

I would like to invite you to learn how to multiply your Bitcoin by 400% passively with a secure, lucrative and transparent Company.
According to Experts Bitcoin will hit 10,000 USD by 2018 and 1 Million USD by 5-10 years later.
To Earn Bitcoins
Please visit https://passiveincome123.usi-tech.info/

இந்த கம்பனியில் கணக்கு வைப்பதன் மூலம் உங்கள் பிட்கொனை பல மடங்காக பெருக்க முடியும் மேலே உள்ள இணயத்தளம் மூலம் உங்கள் கணக்கை திறந்து கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
நேசன்: 647.293.7686

# நாட்டைக்.........

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

முக்கியமானது ஆட்சி மாற்றத்தின் பின்னர் துளிர்விட்டுள்ள ஜனநாயகம் தற்போது துஷ்பிரயோகத்திற் குள்ளாக்கப்பட்டு வருகின்றமை. மஹிந்தவின் காலத்தில் நடத்தப்பட்ட போராட்டங்களை முடக்க பல்வேறு அச்சுறுத்தல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. ஜனநாயக வழியிலான நேர்மையான போராட்டங்களே கடுமையான அச்சுறுத்தல்களால் முடக்கப்பட்டன. குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட பொது மக்களால் மேற்கொள்ளப்படும் நியாயமான கவனயீர்ப்புப் போராட்டங்கள் கூட நேரடியாகவும், மறைமுகமாகவும் படைத் தரப்பின் மூலமாக அச்சுறுத்தப்பட்டு முடக்கப்பட்டன.



மஹிந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட காணாமலாக்கப்பட்டோருக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு பதிவுகளை மேற்கொள்ளச் சென்றவர்கள் கூட மிரட்டப்பட்டனர். தொலைபேசி மூலமாகவும், வீடுகளுக்கு நேரில் சென்றும் அவர்கள் அச்சுறுத்தப்பட்டனர்.இன்று அவ்வாறான நிலைமை இல்லை. இதனாலேயே தற்போது ஒரு ஜனநாயக வெளித்தோற்றம் பெற்றுள்ளமையினை ஏற்றுக்கொள்ள முடிகின்றது.

இந்த ஜனநாயக வெளியைப் பயன்படுத்தி பொதுமக்களை பாதிப்படையச் செய்யும் விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன அவை அரசியல்வாதிகளால் தூண்டிவிடப்படுகின்றன. மக்களை இந்த அரசாங்கத்தின் மீது வெறுப்படையச் செய்து மீண்டும் ஆட்சியைப் பிடிக்க நினைக்கும் தரப்பினரே இந்த வேலைகளைச் செய்கின்றனர்.

தற்போது தமிழ் பிரதேசங்களில், காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டம், கைதிகள் விடுதலைக்கான போராட்டம், காணிகள் விடுவிக்கப்படுவதற்கான போராட்டம் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தமிழ் அரசியல்வாதிகளின் பின்னணியில் நடைபெறுவதாகக் கூற முடியாது. ஆனால், அரச நிர்வாகத்தை முடக்கும் விதங்களில் நியாயமற்ற போராட்டங்கள் தென்னிலங்கையிலேயே நடைபெறுகின்றன. அவை அரசியல்வாதிகளின் தூண்டுதலின் மூலமாகவே நடைபெறுகின்றன. பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இந்த அரசாங்கம் காலத்தை இழுத்தடிக்கக் கூடாது.

அதே போன்று தெற்கில் இடம்பெறும் நியாயமான போராட்டங்களுக்கும் தீர்வு காண வேண்டும். ஆனால், தூண்டுதலின் மூலமாக பொதுமக்களை பாதிப்படையச் செய்து நாட்டைக் குழப்பும் போராட்டங்களுக்கு எதிராக இந்த அரசாங்கம் கடுமையான, சட்டரீதியான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமானதே.

# எங்கள்....

17 ஆம் பக்கத்தொடர்ச்சி

உண்மையில் ஆடி கார் வைத்துள்ளீர்களா, இல்லையா?

என்னிடம் காரே இல்லை. இது சத்தியம். எல்லா ஊர்களுக்கும் பேருந்து, ரயிலில் தான் போவேன். எனது மகன்கள் இருவரும் வழக்கறிஞர்கள் அவர்கள் கார் வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களிடமும் ஆடி கார் இல்லை.



உங்களுக்கு அச்சுறுத்தல் வருகிறதா? வீட்டில் என்ன சொல்கிறார்கள்?

எனக்குத் தினமும் யாராவது போன் செய்து மிரட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனது வயலில் இருந்த 25 தென்னை மரங்களை அடியோடு வெட்டிவிட்டனர். இதுபோல தொடர்ந்து எனது சொத்துகளுக்கு சேதம் விளைவிப்போம் என மிரட்டுகிறார்கள். சமூக வலைத்தளங்களில் என்னைப் பற்றி என்னவெல்லாம் எழுதுகிறார்கள் என்று உங்களுக்கே தெரியும். எனது வீட்டில் உள்ளவர்கள் இந்த வயதில் ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறீர்கள் என என்னை ரொம்பத் திட்டுகிறார்கள்தான்.

டெல்லி போராட்டத்தின் நெகிழ்ச்சியான அனுபவங்கள்?

முதன்முறை வந்திருந்தபோது நாங்கள் கொஞ்சம்தான் பணம் கொண்டு வந்திருந்தோம். இரண்டொரு நாட்களில் அது தீர்ந்துவிட்டது. அதனால், சாப்பாட்டுக்குப் பணம் இல்லை. சாப்பிடாமல் பட்டினியாகவே கிடந்தோம். அதைப் பார்த்த ஹரியானா விவசாயி ஒருவர், எங்களுக்கு வாழைப்பழம், ஆப்பிள், ஆரஞ்ச், சப்போட்டா போன்ற பழங்களை வாங்கித் தந்தார். அதன்பிறகு டெல்லியில் பணிபுரியும் தமிழர்களும், குணா உள்ளிட்ட பல இளைஞர்களும் எங்களுக்கு உணவளிக்க ஆரம்பித்தனர். டெல்லி ராணுவத்தில் பணிபுரியும் கடலூரைச் சேர்ந்த இளங்கோ என்பவர், பனியில் நாங்கள் நடுங்கிக் கிடப்பதைப் பார்த்து 150 கம்பளிகளை கொண்டுவந்து கொடுத்தார். நந்தகுமார் என்ற உச்ச நீதிமன்ற தமிழ் நீதிபதி, தினமும் 300 தண்ணீர் பாட்டில்களை கொண்டுவந்து தருவார். டெல்லியில் நர்சாகப் பணிபுரியும் மல்லிகா என்னும் திருச்சிப்பெண், தினமும் எங்களை வந்து கவனித்துக் கொள்வார். எங்களுக்கு அங்குள்ள தமிழர்களிடம் மருந்து மாத்திரைகள் வாங்கிக் கொண்டுவந்து தருவார். எய்ம்ஸ் மருத்துவ மனையில் பணிபுரியும் தமிழ் மருத்து வர்கள், நர்சுகள் சனி, ஞாயிறு கிழமைகளில் வந்து மருத்துவம் பார்ப்பார்கள். இப்படி நிறைய இருக்கிறது. இவர்கள் எல்லாம்தான் எங்களுக்கு தொடர்ந்து போராடுவதற்கான நம்பிக்கையை அளித்தார்கள்.


RSC

SPEECH COMPETITION



OPEN EVENT
Grade 1 - 12 Students

#Igniteyourpassion



Aparna B. Srikanthan, Director

Neethan Shan, Chief Guest

• Register for your chance to build your **confidence** in public speaking and for your chance to participate in community events for **self-growth**

• Four Divisions: Primary, Juniors, Intermediate, and Seniors

• **Cash prizes** for the top 3 winners of each division

• **Closing Date** for Registration: **August 25, 2017**

• Preliminary Selection: August 26 - September 3, 2017
University of Toronto (OISE) Certified Teachers, Panel of Judges

Organized by Aparna B. Srikanthan, Hons BSc., MEd.
Director of Rising Scholars of Canada

1st Place: $250
2nd Place: $150
3rd Place: $100

1585 Markham Road, Unit 213, Scarborough, ON. M1B 2W1

**Tel 416 827 2681**

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



## “முரசில் இருந்து இரத்தம் வடிகின்றதா’?’

### ‘ஆரோக்கியமான பல்லும் முரசும்’

பற்களில் தலை, கழுத்து, வேர் என மூன்று பகுதிகள் உண்டு. வாயினுள்ளே வெளிப் படையாகத் தெரிவது பல்லின் தலைப் பகுதியாகும். எலும்பினுள், புதையுண்டபகுதி வேர் எனப்படுகின்றது. இவை இரண்டும் சேரும் பகுதி கழுத்தாகும். மேலும் கழுத்துப் பகுதியை முரசு இறுக்கமாகச் சூழ்ந்துள்ளது.

எனவே முரசு கரைவதற்குப் பல காரணங்கள் உண்டு. இதிலும் மிகவும் பொதுவான காரணம் பற்களிலும் முரசிலும் காரை (Tartar) படிவதாகும். காரை என்பது மெல்லிய மஞ்சள் நிறமான கடினப் படிவது எனக் கூறுவதுண்டு. எனவே இக்காரை எப்படிப் படிகின்றது எனப் பார்ப்போம். நாம் தினமும் உணவு உண்ணும்போது எமது பல்லின் இடைவெளிகளிலும், முரசிலும் மென்மையான களித்தன்மையான பொருள் படிந்து கொள்ளுகின்றது. இப்படிவை பிளாக் (Piaque) எனப் பல் வைத்தியர்கள் கூறிக் கொள்ளுகின்றார்கள். மென்மையான பிளாக்கை 48 கூறிக்கொள்ளுகின்றார்கள். மென்மையான பிளாக்யை 48 மணி நேரத்துக்குள் சுத்திகரிக்கப்படாவிடில் அது கடினமான காரையாகப் படிந்து விடும். இதுநிறத்தில் கறுப்பு நிறமாகவோ, மண்நிறமாகவோ பாசிப்பச்சை நிறமாகவோ காணப்படும்.

இக்காரை முரசுகளின் உள் காணப்படும். வெளியேயும் படிந்து ஈறுகளை உறுத்துகின்றன. இதனால் ஈறுகள் அழற்சியடைந்து வீக்கம் அடைகின்றன. இப்படியான காரையை நாம் சுத்தம் செய்யமுடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உடனடியாக தகுந்த பல்வைத்தியர்களிடம் சென்று பரீட்சித்துக் கொள்ளுங்கள்.

படிவு மென்மையான பிளாக் ஆக இருந்தால் சரியான முறையில் பிரஷ் பண்ணுவதின் மூலம் நாங்கள் அகற்றி விடலாம். இதற்கு சரியான பல்துலக்கும் முறையை பல் வைத்தியர்கள் கூறிக்கொள்வர்.

மென்மையான ‘பிளாக்’ காரையாக மாறுவதற்கு 48 மணித்தியாலங்கள் எடுப்பதினால் அதற்கு முன்னரே சரியான முறையில் பல்துலக்கினால் பிரச்சினையில்லை போதுமானது எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. எனவே தினமும் ஒருமுறையாவது 24 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை சரியான முறைப்படி பிரஷ் பண்ணிக்கொள்வது நன்றாகும். சரியான முறைப்படி நல்ல பிரஷ் மூலம் பிரஸ்பண்ணிக் கொள்வது நன்றாகும்.

பொதுவாக நடுத்தர ‘Medium’ பிரஷ்சையே உபயோகிப்பது நன்று. குழந்தைகளுக்கு மென்மையான soft பிரஷ் நன்மை பயக்கும். கடினமான hoard பிரஸ்களை வைத்தியர்களின் ஆலோசனையின்றி எவரும் கைக்கொள்வது நன்றல்ல.



பொதுவாக ஒவ்வொரு நாட்களும் உணவு உண்டபின்பு வாயை நன்கு சுத்தம் செய்து கொள்வது சாலச்சிறந்தது.

ஒன்றை முக்கியமாக கவனிக்க வேண்டியது. நம்மவரில் எவராவது நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டிருப்பின் அவர் முக்கியம் காரை படிந்தும் முரசில் இருந்து இரத்தம் வடிவதற்கும் வாய்பபுண்டு. எப்படியாக வாயை வைத்திருக்க வேண்டும் என்பதை ஓரளவு அறிவது நன்று. காரை படிந்தால் ஏன் இரத்தம் கசிகின்றது. காரையில் அதிக நுண்கிருமிகள் பக்ரீரியாக்கள் சிதறிக் கிடக்கின்றன. இதனால் முரசு தாக்கப்பட்டு முரசில் அழற்சி உருவாகி வீக்கம் ஏற்படுகின்றது. இதனால் ஈறுகளுக்கும் பற்களுக்கும் இடையேயான நெருக்கமான தொடர்பு பாதிக்கப்படுகின்றன. சிதைந்த உணவுகளும் நுண்ணுயிர்களும் ஈறுகளுக்கு இடையே தங்கி ஈறுகள் சிதைவடைந்து பல் எலும்புகளையும் தாக்கும். பல் தனது இணைப்புக்களை இழக்க நேரிடும். முரசு வீக்கம் அடையும்போது இரத்தம் வழமையைவிட அதிகரிக்கும். இதனால் முரசு மென்மையடைகின்றது. சிலவேளையில் பல் லினை பிரஷ் பண்ணும்போது இரத்தம் வடிந்து கொள்ளும். இந்நிலை தொடர்ந்து காணப்படின் தங்களின் ‘பற்கள்’ சில ஆடத் தொடங்கும்.

மேலும் கடினமான காரையை அகற்றினால் பற்கள் ஆட்டம் காணுமோ என சிலர் பயப்படுவதுண்டு. அப்படி எதுவும் நிகழாது என்பதை ஞாபத்தில் வைத்துக் கொள்ளுங்கள். பற்களின் காரைதான் பற்களின் உறுதியை கொடுக்கின்றன எனப் புரிந்து கொள்ளுங்கள்.

எனவே எதற்கும் கடுமையாகச் சிந்திக்காதீர்கள். எல்லாம் சாதாரணம். தங்களுக்கு நன்கு தெரிந்த பல் வைத்தியர்களிடம் சென்றால் அவர் யாவற்றையும் விரிவாகக் கூறிப் பயத்தென்பை நீக்கிக் கொள்வார்.

IB MATHEMATICS
CLASSES
CALL :
416.738.8824

# பசுபிக் தீ வளையமும், குமுறிக் கனல் கொப்பளிக்கும் புள்ளிகளும் ஆழமான மரியானா அகழியும்



சுந்தரம் இந்திரராஜா

## Pacific "Ring of Fire" , Hot Spots & The Deepest Mariana Trench

200 மில்லியன் வருடங்களுக்கு முன்பு பூமி ஒரு தனி நிலப்பரப்பாக இருந்ததாக ஆராய்ச்சி காட்டுகின்றது. பின்னர் மேல் பரப்பு பல புவித் தட்டுகளாக (டெக்டானிக்ஸ் தட்டுகளாக) உடைந்து பிரிந்திருக்கின்றது. பசுபிக் தட்டு, வட அமெரிக்கத் தட்டு, தென்அமெரிக்கத் தட்டு, யூரேசியத் தட்டு, அண்டார்ட்டித் தட்டு, அவுஸ்திரேலியத் தட்டு மற்றும் ஆபிரிக்கத் தட்டு என்று ஏழு பெரிய தட்டுகளாலும் மற்றும் சிறிய தட்டுகளாலும் ஆனது தான் இன்றைய பூமியின் மேலோடு. பூமியின் மேலோடு புதிர் துண்டுகளை (pieces of a puzzle) போன்று டெக்டோனிக்ஸ் தட்டுகள் ஒட்டவைக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் பசுபிக் தட்டுத்தான் மிகப் பெரியதாகும். இது ஏறக்குறைய 103 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது.

தட்டுக்கள் அசையும் தன்மை கொண்டவை. வருடம் ஒன்றிற்கு சராசரியாக ஒரு அங்குலம் என்ற வீதத்தில் அசைகின்றன. பசுபிக் தட்டு வருடம் ஒன்றிற்கு 3 - 4 அங்குலம் அசைகின்றது. தட்டுக்களில் அசைவுகள் நடைபெறும் போது ஏற்படும் உராய்வினால் (Friction) முதலில் வெளியேறுவது தீப்பாறை குழம்பு (Magma/Lava) உருவாகின்றன. எரிமலைக்குழம்பு அல்லது உருகிய பாறை பூமிக்குள் இருக்கும்போது மாக்மா (magma) என்றும் அது வெளியே எரிமலையை விட்டுப் பாய்கின்ற போது லாவா (lava) என்றும் அழைப்போம். அதன் சக்திக் (Power) கேற்ப பூகம்பங்கள் (Earthquakes), எரிமலைகள் (Volcanoes), வெடிப்புகள் (Eruptions) உருவாகின்றன.

மேலும் எரிமலைகள் பொங்கிப் புதிய மலைகள் ஆக்கப்படும். கண்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ சுமார் 1500 துடிப்பான எரிமலைகள் பூகோளத்தில் புகைந்து கொண்டுள்ளதாக அறியப்படுகின்றன. அவற்றில் 30சதவீதம், மேற் தளத்தில் இல்லாமல், கடலடியில் குமிழியிட்டுக் கொண்டுள்ளன. குறிப்பாக, பசிபிக் பெருங் கடலில் தீ வளையம் (Pacific Ring of Fire) எனப்படும் சங்கிலி வளையத்தொடர்ப் பகுதியில் வருடத்திற்கு 50 எரிமலைகள் வீதம் தோன்றுகின்றன.

பசிபிக் தீ வளையம் என்றால் என்ன? பசிபிக் பெருங்கடலில் படுகையைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் அல்லது பசுபிக் தட்டின் விளிம்புகளில் அடிக்கடி நில அதிர்ச்சிகள், எரிமலைக் குமுறல்கள், பீறுதல்கள், உராய்வுகள் கொண்டுள்ளதால் பசிபிக் தீ வளையம் (Pacific Ring of Fire) என்று அழைக்கப்படுகிறது.

உலக எரிமலை எண்ணிக்கையில் 62 சதவீதம், பசிபிக் பெருங்கடலின் படுகையில் (ocean floor) (45 சதவீதம், பசிபிக் தீவுகள், அவற்றின் நிலத்தொடர்வுகளில், 17 வீதம், வட, மத்திய, தென் அமெரிக்காவின் மேற்கு மலைத்தொடர்களில்) எரிமலைகள் கிளம்புகின்றன. எரிமலைகளால் சீரழித்த பிறகு குழியான பல எரிமலைத் தழும்புகள் அலாஸ்கா, மேற்கு வட அமெரிக்கப் பகுதிகள், தென்னமெரிக்காவின் சிலி நாட்டில் காணப்படுகின்றன. உலக எரிமலை எண்ணிக்கையில் 14 சதவீதம், இந்தோனேஷியா தீவுத் தொடர்களில், 17 சதவீதம், பசிபிக் மையத் தீவுகளிலும், ஹவாயி தீவுகள், இந்தியக் கடல் தீவுகளிலும் எழுபவை. மீதி 7 சதவீதம், மத்திய தரைக் கடல் பிரதேச நாடுகளிலும், கிழக்கு ஆஃபிரிக்காவின் மலைப் பீட பூமிகளில் ஏற்படுபவை. இவற்றுள் பசுபிக் தட்டின் விழும்புகளில் 'பசிபிக் தீ வளையம்' எனும் பகுதி மிக உயிர்ப்புள்ளதும், பிரபல்ய மானதுமாகும்.





நீங்கள் பசிபிக் பெருங்கடலிலுள்ள கடல் நீரை வெளியேற்றி விட்டுக் கடல் படுகையையும் சூழ்ந்துள்ள பகுதிகளைப் பார்போமானால், நீங்கள் ஒரு தொடர் ஆழமான கடல் அகழிகளையும் ஒரு தொடர் எரிமலைகளையும் தொடர்ச்சியாக பசிபிக் தீ வளையம் என்று அழைக்கப்படும் பகுதி முழுவதும் பார்க்க முடியும்.

தட்டுக்களின் அசைவுகள் மூன்று வகை:

1.எல்லைகளில் தட்டுக்கள் ஒன்றையொன்று தள்ளிக் கொண்டு இருத்தல்.

இங்கு புவி மேற்பரப்பு சீர்குலைக்கப்பட்டு இரண்டு தட்டுகள் ஒன்றை நோக்கி மற்றொன்று நகரும்போது அசைய இடமின்றி ஒரு தட்டு மறு தட்டுக்குக் கீழாக மறுசீரமைக்கப்படுகின்றது. கீழாக செல்லும் தட்டு புவியின் உட்பகுதி வெப்பத்தாலே உருக்கப்பட்டு எரிமலைக் குழம்பாக வெளிவருகிறது. இதன்போது பெரும்பாலும் மலைகள், எரிமலைகள் தோன்றுகின்றன.

உதாரணங்கள்: 1. தென் அமெரிக்காவின் மேற்கு பகுதியில் இருக்கும், உலகின் மிக நீளமான மலைத்தொடர் ஆண்டிஸ் மலைத் தொடர் (Andes Mountain range) இந்தத் தீ வளையத்தில் அமைந்திருக்கிறது. தென் அமெரிக்க தட்டும் நாஸ்கா தட்டும் ஒன்றன் மேல் ஒன்று நகரும் காரணமாக உருவாயின என்று அறிகிறோம்.

2. இதேபோன்ற நிகழ்வு இந்திய தட்டும் மத்திய ஆசிய தட்டும் ஒன்றை நோக்கி மற்றொன்று நகரும்போது கடலின் அடிப் பகுதி உயர்ந்து இமயமலை தோன்றியது என்று அறிகிறோம்.

3. கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பேட்டா மாகாண எல்லையிலுள்ள ரொக்கி மலைத்தொடர் கனடாவில் தொடங்கி ஐக்கிய அமெரிக்காவின் நியூ மெக்சிகோ மாநிலம் வரை நீண்டுள்ளது. வட அமெரிக்கத் தட்டும் பசிபிக் தட்டும் ஒன்றன்மேல் ஒன்று நகரும் காரணமாக உருவாயின என்று அறிகிறோம்.

4. வட அமெரிக்கா தட்டும் யுவான் டி பூகா தட்டும் ஒன்றன் மேல் ஒன்று நகரும் காரணமாக மவுண்ட் செயிண்ட் ஹெலன்ஸ் மலை Mount St. Helens (தென்மேற்கு வாஷிங்டன்) உருவாயின என்று அறிகிறோம்.

5. யுரேசிய தட்டினதும், பசிபிக் தட்டினதும், வட அமெரிக்க தட்டினதும் மற்றும் பிலிப்பைன் கடல் தட்டினதும் விளிம்புகள் அனைத்தும் ஜப்பான் நாட்டில் சந்திக்கின்றன. சந்திக்கும் புள்ளியில் இவை ஒன்றின் மேல் ஒன்று நகரும் காரணமாக மவுண்ட் ஃபுஜி (Mount Fuji - ஜப்பான்) உருவாயின என்று அறிகிறோம்.

2. தட்டுக்கள் ஒன்றிலிருந்து விலகிச் செல்லுதல்.

விலகும் தட்டு எல்லைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தட்டுக்கள் ஒன்றையொன்று இழுப்பதுபோல் புதிய புவி மேற்பரப்பு உருவாக்கப்படும். சமுத்திரங்கள் விசாலமாவதற்கான காரணம் தட்டுக்கள் விலகுதலேயாகும். பெரிய நிலப்பரப்பு பிளவாகி வேறுபட்டு அதனை சுற்றியுள்ள இடைவெளி நீரால் நிரப்பப்படும்.

உதாரணம்: பசிபிக் தட்டின் கிழக்கு எல்லையில் கோகோஸ் தட்டும் (மத்திய அமெரிக்காவின் மேற்கு எல்லையில்) மற்றும் நாஸ்கா தட்டும் (தென் அமெரிக்காவின் மேற்கு எல்லையில்) அமைந்துள்ளது. பசிபிக் தட்டும் நாஸ்கா தட்டும் (Nazca Plate) கோகோஸ் தட்டும் (Cocos Plate) ஒன்றை ஒன்று விட்டு விலகுவதாலே பசிபிக் பெருங் கடல் படுகையில் ஏற்படும் பிளவுகள் தான் சிலி நாட்டின் வடக்கு மற்றும் பெரு நாட்டின் தென்பகுதி எல்லைகளில் இடையே நீருக்கடியில் கூடுதலான எரிமலைகள் உண்டாவதற்க்குக் காரணமாகும்.

3.இரண்டு தட்டுக்கள் பக்கவாட்டில் உரசிச் செல்லுதல்

இரண்டு தட்டுகள் ஒன்றோடு ஒன்று பக்கவாட்டில் உரசிச் செல்வது பெரும் பாலான உருமாறும் தட்டு எல்லைகள் கடற் தளங்களிலேயே காணப்படுகின்றன. சிறிய பூகம்பங்களை ஏற்படுத்தக்கூடியன.

உதாரணம்: வடக்கே நகரும் வட அமெரிக்கத் தட்டும், தெற்கு நகரும் பசிபிக் தட்டும் ஒன்றோடு ஒன்று பக்கவாட்டில் உரசிச்செல்லுகிறது. இது வட அமெரிக்கா கடற்கரை பகுதி பட்டினங்களான சான் பிரான்சிஸ்கோ, லாஸ் ஏஞ்சல்ஸ் ஊடாக சென்று மெக்சிக்கோ எல்லையையும் தாண்டிச் செல்கிறது. இந்த பிளவுக்கோட்டினை சான் அன்றியாஸ் பிளவுப் பெயர்ச்சி (The San Andreas Fault) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இம் மூன்று வித அசைவுகளாலும் நிலநடுக்கம், எரிமலை நிகழ்வுகள், மலைகள் உருவாக்கம், கடற் பள்ளங்கள் என்பன தட்டுக்களின் எல்லைகளை அண்டியே ஏற்படுகின்றன. இந்தோனேஷியாவின் மிகத் தீவிரமான எரிமலைகள் பசிபிக் தீ வளையத்தில் உள்ளன. எக்குவடோர் (Ecuador) மற்றும் ஜப்பான் (Japan) ஆகிய இரண்டு நாடுகளும் இந்த பசிபிக் தீ வளையத்தில் அமைந்திருப்பதால் துடிப்பான எரிமலைகள் மற்றும் நிலநடுக்கங்கள் அடிக்கடி நிகழ்வதாக அறிகிறோம்.

### எரிமலைகள்: எரிமலைகள் பலவிதம்!

எத்தனை வித எரிமலைகள் இதுவரை உலகில் எழும்பியுள்ளன? ஐந்து விதமான எரிமலை பூமியில் இதுவரைக் காணப்பட்டுள்ளன.

1. ஹவாயி தீவுகளில் எழுவது போன்று உயரமற்ற தீக்குழம்பைக் கக்குவது.

2. பெலீயன் மாதிரி (Peleean Model) தடிப்பான ஒட்டிக் கொள்ளும் தீக்குழம்பை வெளியேற்றி, வாயுவும், சாம்பலும் பின் தொடரும்.

3. ஸ்டிராம்பொலின் மாதிரி (Strombolian Model) சிறிது சிறிதாகக் கக்கும் ஒட்டுத் தீக்குழம்புடன் மின்னும் தீப்பொறிகள், வாயுக்கள், சாம்பல் வீச்சுக்கள் ஆகியவற்றைக் கொண்டது.

4. வல்கேனியன் மாதிரி (Vulcanian Model) இந்தோனேஷியாவின் கிரகடவோவா போன்று தீவிர வெடிப்பும், தடிப்பான தீக்குழம்பு மற்றும் பாறைகளை வெளியேற்றுவது.

5. பிளினியன் மாதிரி (Plinian Model) இத்தாலியிலுள்ள வெஸ்சூவியஸ் மலை

தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)


இப்பொழுது கிடைக்கிறது
கோடை கால தாகத்துக்கோர் இளநீர்..!
Niru BRAND®
Natural Ingredients!
Coconut Water
Made with
Real pieces of Coconut
40 Minuk Acres, Scarborough ON M1E 4Y6
Tel: 416 750 1976 | Fax: 416 750 8779 | info@niru.com | www.niru.com
AVAILABLE AT YOUR LOCAL COMMUNITY GROCERY STORE.




| | | | | |
|---|---|---|---|---|
| #101 Rising Beauty Parlour<br>Spa & Salon<br>416-727-0927 | #113 M.J.S Fashion<br>Gold House & Money Transfer<br>416-299-1630 | #153 Modern Tailors<br>Saree Stitching & Alterations<br>647-965-0193 | #201 Vlambaram<br>Tamil Newspaper<br>416-282-8059 | #217 Canam V Financial Services<br>Financial Advisor<br>416-261-0070 |
| #102 Lovely Fancy House<br>Fancy Jewellery<br>647-802-5884 | #115 Western Jewellery's<br>Jewellery & Money Transfer<br>416-335-9500 | #154 A1 Ink Ranbow Inc<br>Computer,Toner,Copying<br>416-286-0333 | #203 Homelife/GTA Realty Inc<br>Realtors Brokerage<br>416-321-6969 | #219 Raphael Maharaja Professionals<br>Law Office<br>416-847-7077 |
| #102 Trendy Tailoring<br>Saree & Blouse Stitching<br>647-389-7667 | #117 BenHo (Ambika)<br>Gold House & Fix<br>416-754-3100 | #156 Nathan Traders<br>Religious Fancy, Utensils & Textile<br>416-299-8231 | #205 Fashion & Fashion House<br>Silk, Bridal & Ceremonial Saree<br>416-492-9416 | #220 Aum Wellness Clinic<br>647-340-6046 |
| #103 A1 Studio<br>Photo & Videos<br>416-587-5583 | #118 Jai Sai Florist<br>Florist for all Occasions<br>416-396-9888 | #157 Ragi Tailors<br>Custom Design Saree & Blouse<br>647-712-4652 | #206 GTA ChiroPractic<br>Medical Centre<br>416-321-0482 | #221 Kannan Ramnath<br>Law Office<br>416-609-1300 |
| #104 Gift Plus<br>Unique Gifts for all Occasions<br>416-804-8999 | #120 Ahsiya Beauty Salon<br>Unisex Hair Salon<br>416-412-3330 | #158 Imma Trading Company<br>Fancy Jewellery<br>416-291-6336 | #207 Sai Tailoring<br>Saree Stitching & Classes<br>647-858-5143 | #228 Aarusha Cake House<br>Cakes for all Occassions<br>416-292-7347 |
| #105 Lovely Gold House<br>Gold Workshop<br>647-874-2266 | #122 Ambiha Silk<br>Sarees, Costumes & Cosmestics<br>416-297-5261 | #159 GTA Square Lotto & Video Centre<br>South Asean Movies & Lotto<br>416-298-0505 | #207 Yoga Health Centre<br>Instructor & Therapist<br>647-780-7699 | #232 Heroes Catering<br>Takecout & Catering<br>416-286-9334 |
| #106 Sai Ram Fashion<br>All kinds of Textiles<br>647-874-1501 | #123 Murgan Book Store<br>Indian Newspaper & Books<br>416-321-0285 | #160 Ideal Escape Vacation<br>Travel & Vacations Package<br>416-841-1833 | #210 MiddleFinch Medical Office<br>Family Practice<br>416-412-7350 | #250 Eye Quality Optical<br>Eye examiner<br>416-401-6377 |
| #107 AirCom Plus<br>Telephone & Internet<br>416-266-6328 | #124 Millenium Sarees<br>Unique Textile Store<br>416-322-2242 | #161 Sabari Tailoring<br>Tailoring & Alterations<br>647-546-1320 | #212 Value Plus Pharmacy<br>Medical Drug Needs<br>416-754-4442 | #263 Building Experts Canada<br>Professional Engineers<br>416-332-1743 |
| #108 Tides Drycleaners & Alterations<br>Dry Cleaners & Steam Cleaning<br>416-291-9777 | #125 Ineeka Jewellry & Gifts<br>Stones & Gold House<br>416-293-0440 | #163 Pavithra Fancy & Gift<br>Fancy Jewellery & Watch Service<br>647-331-3131 | #213 Tharani Law Office<br>Law Office<br>416-291-4900 | #264 Athishta Dollar N Gifts<br>Gifts, Hellium Balloons & More<br>416-754-4438 |
| #109 Back to the Beauty<br>Spa & Salon<br>416-298-8091 | #126 Shakthi Gurukirpa Store<br>Churidars, Salwars, Sherwanis<br>416-297-1670 | #164 LR Tailoring<br>Saree , Salwar Stitching<br>647-687-8218 | #214 Experts Educational Centre<br>Tution Centre<br>647-709-1298 | **GTA Square**<br>Tel: 416-292-4400<br>FREE Underground & Outdoor Parking |
| #111 Everest Travel<br>Travel & Tours<br>416-321-2311 | #150 Nimmi's Silks<br>Handmade Saree Collections<br>416-619-7831 | #165 SriDevi Tailoring<br>Saree Pleating & Stitching<br>647-761-9193 | #215 Vijay Marrimapilai<br>416-566-0621 | |
| #112 Galaxy Mobile<br>Chatr & Mobile Accessories<br>416-899-0222 | #152 SNS Selections<br>Fancy Jewellery & Textile<br>416-825-2283 | | | |

**Welcome to GTA Square Indoor Mall. Over 50 Stores, Offices & Restaurant**

5215 Finch Ave East, Toronto. Middlefield & Finch. Open 7 Days A Week. 9:00 AM - 10:00 PM

HOMELIFE HIGHER STANDARDS

# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Experienced and New Sales reps. are welcome to join our successful , energetic and high standard team.*

*FREE Real Estate classes starts every week. Teaching by over 25 years experienced Manager.*

- Office open 6 days • 9:00 am - 9:00 pm
- Over 5,000 Sqft. office
- Conveniently Located in GTA Square Mall



*To Join our successful & energetic Team- Please Call :*

**416.315.9397 / 416.321.6969**



**Eddie Woo**
Broker of Record/Owner

**Raja Mahendran**
Broker/ Owner

5215 Finch Ave East. Unit#203 Toronto ON M1C 0C2

*Independently Owned & Operated

# Tamil VANAKKAM

தமிழ் வணக்கம் உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்

கனேடிய
இலங்கை
இந்தியா
சர்வதேச
விளையாட்டு

உடனுக்குடன்
செய்திகளைப்
பார்வையிட

24/7

www.tamilvanakkam.com

CELEBRATING
CANADA'S 150TH



எமது இணையத்தளத்தில்
விளம்பரம் செய்ய.... 416.282.8059
ads@tamilvanakkam.com

Serving Community over 27 years




விளம்பரம்
VLAMBARAM

For your advertising and feedback... 416.282.8059

அம்மனிதனின் கதையானது மனிதர்கள் தொடர்பான ஒரு நீதிக் கதையைப் போன்றதாகும். ஒவ்வொருவருக்கும் கனவுகளும் நம் பிக்கைகளும் உள்ளன. இந்த வித்தியாச மான ஆர்வங்கள் எல்லாவற்றிற்கும் அடிப் படையில் ஆனந்தமாக இருப்பதற்கானதும் நிறைவடைவதற்கானதுமான அந்த ஒரே ஆவலே அங்குள்ளது.

“விடயங்கள் எப்படி இருக்கவேண்டும் என்ற எங்கள் எண்ணக் கருத்துக்களுள் நாம் அகப்பட்டுக் கொள்கின்றோம்.” என மஹ ராஜி கூறுகின்றார். எப்படி நிறைவடைய லாம் என்னும் எண்ணக் கருத்துக்களில் நாம் மும்முரமாக முயற்சி செய்து கொண்டி ருப்பதால் நாம் மிகவும் இயல்பானதும் மிகவும் எளிமையானதும் மிகவும் அழகான துமான இந்த உயிர் வாழ்வின் உண்மை நிலையை ஏற்றுக் கொள்வதில்லை. உங்கள் ஆனந்தம் உங்கள் உள்ளேதான் உள்ளது. உங்கள் நிறைவு உங்கள் உள்ளே தான் உள்ளது. அது அந்தளவிற்கு எளிமையா னது.

மஹராஜி அவர்கள் மிகச் சிறிய வயதினராக இருந்த காலத்தில் இருந்தே உள்ளத்தின் உள்ளே உள்ள ஆனந்தத்தைப் பற்றி இந்தியாவில் உரையாற்ற ஆரம்பித்து விட் டார். அவர் தனது கட்டிளம் பருவத்தை அடைந்தபோது மேற்கு நாடுகளில் உரை யாற்றுவதற்காகக் கிடைத்த அழைப்பிதழ் களை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அந் தப் பிரயாணங்கள் வாழ்நாள் முழுவதற்கு மான பிரயாணமாக மாறியதுடன் ஒவ்வொரு கணமும் இருந்துவருவதாக மஹராஜி கூறும் அந்த ஆனந்தத்தின் ஆற்றலுக்கான சாத்தி

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்...)

# நாட்டுப்பாடல்கள்



நா. க. சிவராமலிங்கம்

நாட்டுப்பாடல்கள் ஏட்டில் எழுதப்படாதவை. அவற்றைப் பாடியவர்கள் இலக்கணத்தைப் படித்ததில்லை. ஆனால் அவர்களின் உணர்ச்சி துடித்தது. உயிர்ப்பு விளையாடியது, இதயம் விரிந்தது, இன்பம் பெருகியது, கவலை கரைந்தது, களிப்பேருவகை ஏற்பட்டது. வெள்ளை நெஞ்சங்களின் உள்ளக் கிடக்கைகளான இப்பாடல்கள் அனைவரையும் கொள்ளை கொண்டது. எதுகையும் மோனையும் இனிமையும் எளிமையும் உடைய இப்பாடல்கள் நெடுங்காலமாகவே கொள்ளை கொண்டன.

இப்பாடல்கள் கொச்சையானவை, பாமரமானவை என்று முதலில் புறக்கணித்தார்கள். ஆனால் நாளாக ஆக இப்பாடல்களின் அருமை தெரிந்தது. இவற்றின் உள்ளே துடிக்கின்ற தமிழ் உள்ளங்களின் ஆர்வமும், ஆசைகளும், கனவுகளும் அனைவருக்கும் வெளியாயின. எனவே நாட்டுப்புறத்தைக் கடந்து நகர்களிலும் இவை ஒலிக்க முடிந்ததால் நாட்டார் இலக்கியம் என்பதும் ஏற்படலாயிற்று.

இளங்கோஅடிகள், அம்மானைவரி, கந்த கவரி, பாடுவதற்கும் மணிவாசகர் தேணோக்கம். திருச்சாழல், திருவுந்தியார் பாடுவதற்கும் நாடோடிப்பாடல்கள் தாம் காரணமாகும். புலந்திரன்மாலை, பவளக்கொடிமாலை போன்ற நூல்களும் நாடோடிப் பாடல் வகையினைச் சேர்ந்தவையேயாகும். தொல்காப்பியனார் பண்ணாத்தி என்று குறிப்பிடுவதில் நாடோடிப் பாடல்கள் அடங்கும். எனவே இப்பாடல்கள் நெடுங்காலமாய் பழமை உடையன. இதனால் இப்பாடல்கள் இயற்றிய ஆசிரியர்களைத் தான் அறிய முடியாது உள்ளது.

நாட்டுப்பாடல்கள் ஒரு நாட்டின் தனி உடமையாகும். அங்கு வாழ்கின்ற பொதுமக்களின் பண்பையும் உளப்பாங்கையும் ஆர்வம் சோகம் முதலிய உணர்ச்சிகளையும் அவை நன்கு வெளிப்படுத்துகின்றன. அவற்றின் இயல்பான சந்தமும் இசையும் கேட்டு ஈர்க்காத உள்ளங்களே இல்லை எனலாம். இதனால் அவை காலங்காலமாக நிலைத்து நிற்கின்றன. உழைப்பே இன்பம் என்ற உயரிய குறிக்கோளோடு வாழ்ந்த மக்கள் உழைப்பின் களைப்பைப் போக்கி மகிழ்ச்சி பொங்க இனிமையான பாடல்களைப் பாடினர். விழாக்காலங்களிலும் மக்கள் ஒன்றுகூடிப்பாடினர். குழந்தைகள் ஓடி ஆடி விளையாடும் போது இன்னிசைப்பாடல்களை இசைத்தனர். குழந்தைகளைத் தாலாட்டும் தாய்மார்கள் கவிதைகளைப் பொழிந்தனர்.



தாயின் தாலாட்டிலே குழந்தைக்கு காவியம் புலப்படுகின்றதோ இல்லையோ அந்த இனிய இசைப்பாடலிலே அன்பும் உள்ளத்தின் பரிவும் பாசமும் தென்பட்டு அபூர்வ அமைதி கிடைக்கின்றது. இறப்பு வீட்டிலும் பெண்கள் இசையோடு இணைந்து அழுதனர்.

வேலையின் கடுமை தெரியாமல் இருக்கும் பொருட்டு, நாற்று நடுகின்ற பெண்கள், சாந்து அரைக்கும் மகளிர், கல் உடைக்கும் ஆண்கள், ஏற்றம் இறைப்போர், வண்டி தள்ளுவோர், சலவைத் தொழிலாளர்கள், சூடு மிதிப்போர், இரவில் வண்டிகளில் பயணம் செய்வோர் ஒரு சேர ஒலிகளை எழுப்பி களைப்பினைப் போக்கிக்கொள்வதுண்டு.

இயற்கை நிகழ்வின் வரலாற்றுச் சிறப்பு நிகழ்ச்சிகள், காதலர் உரையாடல்கள் இவை நாட்டு பாடல்களாக உருப்பெற்றுள்ளன. தொழில்பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், வேதாந்தப்பாடல்கள், குழந்தைப்பாடல்கள், கும்மிப்பாடல்கள், விவசாயப்பாடல்கள், வேடிக்கைப்பாடல்கள், பல்சுவைப்பாடல்கள் என்பன நாட்டுப் பாடல் வகைகளாகும். பலவிதமான நாட்டுப் பாடல்களைப் பார்ப்போம்

ஆண் பனையின் நுங்கே
அணில் கோதா மாம்பழமே
அண்ணன் அடித்த துண்டோ
அம்மான் மார் வைத்துண்டோ
கூப்பிட்டு நான் கேட்பேன்
குஞ்சரமே கண்வளராய்

இது தாலாட்டுபாட்டு.

நிலா நிலா வா வா
நில்லாமலே ஓடிவா
மலை மீது ஏறி வா
மல்லிகைப் பூ கொண்டு வா

இது குழந்தைப்பாடல்.

---

# பசுபிக்......

20 ஆம் பக்கத்தொடர்ச்சி

மிக அதிக உயரத்தில் எழுந்து பொழியும் விஷ வாயுக்கள், கருஞ்சாம்பல் மற்றும் பாறைகளை வெளியேற்றுவது.

பூமியின் மேற்பரப்பிற்குக் கீழேயுள்ள உருகிய பாறை குளத்தை அல்லது எரிமலைக் குழம்பு குளத்தை நோக்கி பூமி கீழ்நோக்கி வெடிப்பு திறக்கும் போது எரிமலை ஏற்படும். அழுத்தம் அதிகமாகும் போது, குமுறல்கள் மற்றும் வாயுக்கள் எரிமலைக் குழம்பு மற்றும் பாறைகள் திறந்த பாதையூடாக வீசப்பட்டு காற்றில் கலக்கின்றன. எரிமலை குமுறல்களால் பக்கவாட்டு வெடிப்புக்கள், எரிமலைக்குழம்பு வெளியேற்றம், சூடான சாம்பல் வெளியேற்றம், நிலச்சரிவுகள், பாறை சரிவுகள், சாம்பல் விழுதல், வெள்ளப் பெருக்குகள் போன்ற வற்றை ஏற்படுத்தும். வாயுக்கள், எரிமலைக்குழம்பு மற்றும் பாறைகள் திறந்த பாதையூடாக வீசப்பட்டு காற்றில் கலக்கின்றன. வெளியேறும் முக்கிய வாயுக்களின் கூறுகள்: நீராவி ($H_2O$), கார்பன் டையாக்ஸைடு ($CO_2$), சல்பர் அல்லது சல்பர் டை ஆக்சைடு ($SO_2$) (உயர் வெப்ப நிலை எரிமலை வாயுக்கள்) அல்லது ஹைட்ரஜன் சல்பைட் ($H_2S$) (குறைந்த வெப்பநிலை எரிமலை வாயுக்கள்), நைட்ரஜன் போன்ற, ஆர்கான், ஹீலியம், நியான், மீத்தேன், கார்பன் மோனாக்சைடு மற்றும் ஐதரசன் போன்றவை.

## பசிபிக் தீ வளையத்தில் முதன்மையான நாடுகள்:

சிலி (Chile), மெக்ஸிக்கோ, அமெரிக்கா, அண்டார்டிகா (Antarctica), ரஷ்யா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், நியூசிலாந்து, பபுவா நியூ கினி (Papa New Guinea), இந்தோனேஷியா, கனடா, பெரு (Peru) தைவான், குவாத்தமாலா (Gautemala) அவையாகும்.




குமுறிக் கனல் கொப்பளிக்கும் சூடான புள்ளிகள் (Hot Spots):

தீ வளையத்தினுள் சூடான புள்ளிகளும் (hot spots) இருக்கின்றது. புவியின் மேலோடுக்குக் கீழேயுள்ள மென்மூடியின் (Earth's mantle) ஆழ்ந்த பகுதிகளில் இருந்து எழும் வெப்ப உயர்வினால் இந்த மென்மூடியின் மேற்பரப்பில் பிளவுகள் ஏற்பட்டு அதனூடாக மாக்மா என அழைக்கப்படும் தீப்பாறை குழம்பு தள்ளப்படுவதினால் அடிக்கடி எரிமலைகள் உருவாகின்றன. சில எரிமலைகள் சேர்ந்து ஹவாய் தீவுக் கூட்டம் (Hawaii Islands) உருவானது. உலகிலேயே மிக பெரிய எரிமலையான மோன லோவா எரிமலையும், உலகில் உள்ள மிகவும் துடிப்பு உள்ள எரிமலைகளாகிய மோன லோவா மற்றும் கிளோவியா எரிமலைகளும் ஹவாய் தீவுக் கூட்டத்தில் ஒன்றான பெருந்தீவில் உள்ளது. இன்றும் சில ஹவாய் தீவுகளில் எரிமலை நிகழ்வுகள் சூடான புள்ளிகள் புவியின் ஆழ்ந்த பகுதிகளில் இருப்பதற்கு இதுதான் காரணம். ஹவாய் பெருந்தீவு தனது பரப்பளவில் விரிந்து வருகிறது. அதற்கு காரணம் அங்கு உள்ள எரிமலை வெடித்து வெளியாகும் குழம்பு கடலில் கலந்து நிலபரப்பை அதிகரிக்கிறது.

தீ வளையத்தினுள் இருக்கும் நாடுகள் மற்றும் சூடான புள்ளிகளுள் இருக்கும் ஹவாய் தீவுகள் நிலையான பதற்றத்துடன் தான் இருந்து வருகின்றன. பூகம்பங்கள், நிலநடுக்கங்கள், வெடிப்புகள் எப்போது நிகழும் என்று நிச்சயமாக சொல்ல முடியாததால் இங்கு வாழும் மக்களுக்குப் பதற்றம் ஏற்படுவதும் பின்னர் தற்காலிக மான நிம்மதி ஏற்படுவதும் அவர்களது வாழ்க்கையில் ஓர் அங்கமாகி விட்டது. ஆபத்து குறித்து விழிப் புடனும் பாதுகாப்பானதான பகுதிகளில் பூகம்பத்தை எதிர்க்கும் சக்தி வீடுகள் அமைத்து வாழ்க்கையை மேம்படுத்துவதனால் ஆபத்துக்களைக் குறைக்க உதவுகிறது. எங்கு அடைக்கலம் புகலாம் என்ற திட்டங்கள் கொண்ட விபரங்கள், கெடாத உணவு, தண்ணீர் போத்தல்கள், ஒரு பேட்டரியில் இயங்கும் அல்லது கைசுழற்சி வானொலி, பிளாஷ்லைட் மற்றும் பேட்டரிகள், கன்னை பாதுகாக்க, சுவாசத்தை பாதுகாக்க முகமூடிகள் அவசர வழங்கல் பைக்குள் (Emergency Supply Kit) போட்டு ஓடித்தப்புவதற்கு வீட்டு வாசல் கதவருகே எப்போதும் வைத்திருக்கிறார்கள்.

## உலகிலேயே மிக ஆழமான மரியானா அகழி:

180 மில்லியன் வருடங்களுக்கு முன்பு, பசிபிக் தட்டும் சிறிய மரியானா தட்டும் ஒன்றையொன்று மோதிக் கொண்டபோது, பசிபிக் நிலத்தகடானது மரியானாவின் அடியில் சென்றது. இதனால் உலகிலேயே மிக ஆழமான மரியானா அகழி பசிபிக் பெருங்கடலில் உள்ள ஆரம் போன்ற வளைவான மரியானா தீவுகளுக்குக் கிழக்கே தோன்றியது. இது 2550 கிலோ மீட்டர் நீளமும், 69 கிலோ மீட்டர் அகலமும் 11 கிலோ மீட்டர் ஆழமும் கொண்டது.

நம்மால் சுவாசக்கருவி அணிந்து கொண்டு 1 கிலோ மீட்டர் ஆழம் வரை இறங்க முடியும். ஆனால் நீண்ட நேரம் கடலின் ஆழத்தில் இருந்தால், கொப்புளங்கள், மூட்டுவலி போன்ற சில உடல் உபாதைகள் வரும் அபாயம் உண்டு. ஆழம் கூடக்கூட நீரில் ஏற்படும் அழுத்தம் கூடும், நீரின் வெப்ப நிலை குறைந்து செல்லும். உலகில் அதி உயரமான (8.8 கிலோ மீட்டர் உயரம்) இமயமலையை வெற்றிகரமாக ஆயிரக் கணக்கானோர் ஏறி சாதனை படைத்துள்ள போதும், உலகில் கடலுக்குள் அதி ஆழ்ந்த புள்ளியான மரியானா அகழியை இருவர் மட்டுமே சென்று சாதனை படைத்துள்ளனர்.

# அச்ச.....

17 ஆம் பக்கத்தொடர்ச்சி

பெண்களில் அரைவாசியினரும் ஆண்களில் கால்பங்கினரும் இவ் அச்சத்திற்கு உள்ளா கின்றனர். சிலந்தியைக்கண்டால் அந்தப் பக்கமே போகமாட்டார்கள். சிறிய வயதில் ஏற்பட்டதொன்றாகலாம். ஆபத்திலிருந்து தப்புவதற்கே இம்முயற்சியாகும். அதில் நச்சுத்தன்மை உள்ளதால் தங்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என அஞ்சுவார்கள். அதேவேளையில் ஐரோப்பியரல்லாத ஆசிய மக்கள் பயப்படமாட்டார்கள். பப்புவாநியூ கினி, தென்அமெரிக்கா போன்ற நாடுகளில் இவற்றை உணவாகக்கூட எடுத்துக் கொள்வர்.

Social Phobia என்பது சமூகநிலைகளில் ஏற்படும் அச்சமாகும். அதாவது பொது இடத்தில் பேசுதல், நிகழ்ச்சி செய்தல், நேர் காணல் போன்றவற்றிற்கு அச்சம் கொள்வ தாகும். மற்றவர்கள் தங்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதே அவர்களின் பிரச் சினையாகும். இது வெட்கம் (Shyness) அல்ல. இது ஒரு வகை சமூகப் பதட்டம் ஆகும். 13.3 சதவீதமானவர்கள் இவ் அச்சத் திற்கு உள்ளாவர். இவர்களுக்கு இந்த சந்த ர்ப்பத்தில் வியர்வை, நடுக்கம், வயிற்றைப் பிரட்டுதல், நாக்குத் தடுமாற்றம் ஏற்படலாம். சிலர் மதுவை அருந்திக்கூடத் தமது பயத்தினைப் போக்குவர்.

Avoid phobia என்பது விமானத்தில் பிரயாணம் செய்யப் பயப்படுதலாகும். இதில் அச்சமடைவோர் சமூகநிகழ்வுகளுக்கும் அஞ்சுவர். இதில் உள்ளவர்கள் குறுகிய இடம், உயரம், பழைய விமானப்பயண விபத்து, பயங்கரவாதம், விமானக்கடத்தல் என்பவற்றிற்கும் பயமுறுவர். செய்திகளில் இவை பற்றிய தகவல்களும் இவர்களைப் பாதிக்கும். சிலர் விமானத்தில் ஏறியதும் மதுவை அருந்தித் தமது பயத்தினைப் போக் கிக் கொள்வர். அத்துடன் விமானத்தைத் தவிர்த்து கார், புகையிரதம், பஸ், கப்பல் என்பவற்றினைப் பாவிப்பர்.

Agora Pra phobia என்பது பொதுவான இடங்களுக்குச் செல்லப் பயப்படுவதாகும். கிரேக்க மொழியில் சந்தைக்குச் செல்ல ஏற்படும் பயம் என்பதாகும். பலர் வீடுகளை விட்டு வெளியே செல்லப் பயப்படுவர். இவர்கள் தாங்கள் எங்காவது மாட்டுப்படக் கூடும், பாதுகாப்பின்மை, தூரம் என்பதற்கு அஞ்சுவர். தனிமையாக, அமைதியாக இருக்க விரும்புவர். படிகளில் ஏறுபவர் கூட மிகவும் பீதி (Panic) கொள்வார். இதயம் படபடக்கும். மூச்சு விடுவது கடினம். வியர்க் கும், தடுமாற்றம் ஏற்படும். பார்வை கூட மாறும். இதனால் இதனை தவிர்க்க முயல் வர். 5 சதவீதத்தினர் இப்படி இருப்பர். ஆண் களை விட பெண்களுக்கு இரண்டு மடங்கு ஏற்படும்.



Claustrophobia என்பது மூடிய அல்லது சிறிய இடங்களில் ஏற்படுவது. இவர்களுக்கு பீதி (Panic) ஏற்படும். இவர்களும் விமா னம், புகையிரதம், பாரந்தூக்கி என்பன வற்றிற்கு பயப்படுவர். இவர்கள் மூடியுள்ள பார்வையாளர் பகுதியில் மூச்சுவிட கஷ்டப் படுவர். இப்படியே தியேட்டர், பாரந்தூக்கி என்பவற்றிலும் ஏற்படும்.

Acorophobia என்பது உயரத்திற்கு ஏற் படும் பயம். இது மிகவும் ஆபத்தான தொன்று. இவர்கள் உயரத்திற்குச் சென் றால் மிகவும் பீதியடைவர். தாங்கள் தவறி விழுந்துவிடுவோமோ என்பது பயம். காய மடைவோம், இறப்போம் எனவும் எண்ணுவர். சிலருக்கு ஏணி, மேசை அல்லது கதிரை யில் இருக்கப் பயப்படுவர். நரம்பியல் நிபுணர்கள் இவர்களுக்கு சமநிலை (Balan ce) தெரிவதில்லை என்பர். இந்த பிரச்சி னைக்கு உட்பட்ட பலர் உள்ளனர். குறிப் பாக Bill Engvall, Rebecca Herbst, Mihir Gandhi, April Margera போன்ற பிரபல மானவர்கள் உளர். இவர்களுக்கு பார்வை யிலும் ஒழுங்கீனம் உள்ளதால் இப்பிரச் சினை ஏற்படுகிறது.

Emetophobia என்பது வாந்தி எடுப்பது வாந்தி எடுப்பது அல்லது ஆட்கள் சுற்றியி ருக்க சத்தி எடுப்பதில் அச்சம் நிலவும். அமெரிக்க சனத்தொகையில் 6 சதவீதத் தினர் நோய் வருவதற்கும் பயந்துள்ளனர். 6வயது முதல் பத்து வயதுக்கிடையில் ஏற்படும் வாந்தியே இதற்கு காரணமாகலாம். வருத்தம் வந்தவர்களையும் சென்று பார்க்க இவர்கள் விரும்புவதில்லை. பார் (Bar) இரவு விடுதிகள் என்பனவற்றிற்கும் செல்ல மாட்டார்கள். வயிற்றை குமட்டிக்கொண்டு வந்தாலும் வாந்தி வராமல் அடக்கி கொள்வர்.

Carcinophobia என்பது புற்றுநோய் பற்றிய அச்சமாகும். இவர்கள் தங்கள் கைகளை அடிக்கடி கழுவுவார்கள். பதற்ற மடைவர். வியர்க்கும், நடுக்கம் ஏற்படும். தலையிடியும் ஏற்படலாம். மூளையில் புற்று நோய் ஏற்பட்டால் பிரச்சினைகூடும். உல கெங்கிலும் இந்நோயால் மரணம் ஏற்படுவ- தால் பலருக்கு இவ் அச்ச உணர்வு ஏற்படுகிறது.

Brontophobia என்பது இடிமுழக்கத் தினாலும் மின்னலாலும் அச்சத்திற்கு உட் படுவர். இவர்கள் உள்ளே இருந்தாலும் படுக்கை, மேசை, சோபா, உடுப்பு அறை என்பவற்றிற்குள் மறைந்து கொள்வார்கள். Bronte என்ற கிரேக்க சொல் முழக்கத் தினை குறிப்பதாகும். இதுவும் சிறுவயதி லிருந்து ஏற்பட்ட ஒரு பயமாகும்.

Necrophobia என்பது மரணபயம் அல்லது இறந்த உடல்களைக் காணப்பயம் ஏற்ப டுவதாகும். இது மிகவும் ஆபத்து நிறைந் தது. நரம்பு பாதிப்பை ஏற்படுத்தும். இந்த அச்ச உணர்வு உள்ளவர்கள். மூச்சு விடக் கஷ்டம். இதயம் விரைவாக செயற்படல் ஒழுங்கீனமான நாடித்துடிப்பு, வியர்த்தல் நாவரட்சி, உடல் சமமின்மை என்பன ஏற்படலாம்.

20ஆம், 21ஆம் நூற்றாண்டுகளில் இந்த அச்சஉணர்வுக்கெல்லாம் பல உளச்சிகிச் சைகளை ஆரம்பித்துள்ளனர். ஒவ்வொரு வகையான அச்ச உணர்வுக்கும் ஏற்றவாறு சிகிச்சையும் மாறுபடலாம். பொதுவாக உளச்சிகிச்சையாளர்கள் மிகவும் பயங்கர உணர்வுக்கும் அனுபவங்களுக்கும் உட்பட் டுள்ளாரென கூறுகின்றனர். உளப்பகுப் பாய்வு செய்வது முதன்மை பெற்றுள்ளது. அடுத்து நடத்தை சார் சிகிச்சை உள்ளது. இதன்படி இந்நோயாளர்களுடன் நேரம் செலவு செய்து கண்டறிய வேண்டும். பதற்ற உணர்வும் இதனுடன் தொடர்புபட்டுள்ளதால் அதனைப் போன்றே இதற்கும் சிகிச்சை தேவை. இடையிடையே நோயாளிகளின் எல்லா அம்சங்களையும் சோதனையிடு கின்றன. தற்போது காட்சிப்படுத்துதல் சிகிச்சை (Exposure therapy) நடை முறை யில் உள்ளது. கணினி மூலம் பயத்திற்குரிய படங்களைக் காட்டி மனமாற்றம் செய்தல் இதில் அடங்கும்.

அத்துடன் மனோவசியமுறை (Hypno ther- apy), நரம்புசார் திட்டங்கள் (Neuro linguis- tic programming), liberation technique மூலமும் சிகிச்சைகள் உள் ளன. இத- னைவிட பதற்றத்திற்கு எதிரான மருந்துகள் (Anti Anxiety Medication), உளச்சோர்வு எதிர்ப்பு மருந்துகள் (Antidepressants) பயன்படுத்தப்படுகின்றன. உடல் சிகிச்சை zen therapy உயிரியல் சிகிச்சை இதற்கு முக்கியம். எனவே விஞ்ஞானம், தொழில் நுட்பம், மிகவும் ஆய்வில் உள்ளன. சுய உதவி (Self help) மூலமும் சிகிச்சையுண்டு.

எவ்வகை சிகிச்சையிலும் உள்ளுணர்வு, புலன்கள், கோப உணர்வு, பதற்றம் என்பவை ஆய்வு செய்யப்பட வேண்டி- யுள்ளது. உலகெங்கிலும் மில்லியன் கணக் கான மக்கள் அச்ச உணர்வில் அகப்பட்டு தவித்து வருகின்றனர். மனநல வைத்தியர் கள் இரவுபகலாக இதுபற்றி ஆய்வு செய்துவருகின்றனர். எதிர்காலத்தில் இதற்கு பல்வேறு புதிய சிகிச்சை முறைகள் பாவிக் கப்படக்கூடும்.

# ரஜனி, கமல்....

13 ஆம் பக்கத்தொடர்ச்சி

அப்படிப்பட்டவர் அரசியல் பற்றி இப்போது நிறையப் பேசுவதும், அரசியலுக்கு வந்துவி டுவார் என்று எதிர்பார்க்கப்படும் ரஜனி காந்த் அமைதியாக இருப்பதும், கமல் அரசியலுக்கு முந்துகிறாரோ என்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கமல்ஹாசனின் எண்ணம் என்னவாக இருக் கும்? அவரை யாராவது பின்னிருந்து இயக் குகிறார்களா? கமல்ஹாசனின் உதவி இயக் குநராக அவருடன் சில ஆண்டுகள் பணி யாற்றியுள்ள இயக்குநர் ராசி அழகப் பனிடம் இதுபற்றிக் கேட்டோம்.



"கமல்ஹாசன் இப்போதுதான் அதிகம் அரசியல் பேசுகிறார் என்று பலர் நினைக் கிறார்கள். அப்படியெல்லாம் இல்லை. தனது மனதுக்கு எது சரியென்றுபடுகிறதோ அதை அவ்வப்போது மேடையிலோ கவிதை- தயிலோ அல்லது பேட்டியிலோ சொல்லிவி டுவது அவரது இயல்புதான். தொண்ணூ ரின் துவக்கத்திலேயே ஈரோட்டில் நடந்த நற்பணி இயக்க மாநாட்டில், "நதிகளை ஒன்றிணைப்பது அவசியம்" என்று குரல் கொடுத்துள்ளார். இலங்கைத் தமிழர் பிரச் சனையின்போது தனது கருத்தை முன் வைத்திருக்கிறார். காவிரிப் பிரச்சனையில், "நீர் என்பது தேச சொத்து அது அனைவருக்கும் தேவையானது" என்று சொன்னதோடு உண்ணாவிரதமும் இருந்தி ருக்கிறார். நான் அறிந்தவரை கமல் ஒரு நல்ல மனிதாபிமானி. உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றும் அவரிடம் இருக்காது. எதுவாக இருந்தாலும், யாராக இருந் தாலும், நேரடியாகவே பேசிவிடுவார். எவ ரும் பின்னின்று, 'இப்படிப் பேசுங்கள்' என்று யாரும் அவரை இயக்க முடியாது. அவர் அரசியல்வாதி அல்ல. அரசியலுக்கு வரும் எண்ணமும் அவருக்கு எப்போதும் இருந்ததில்லை. இனி கமல் என்ன ஆவார்? என்பதைக் கமல் மட்டுமே அறி வார். எனினும், கமல் என்ற நல்ல திரைக் கலைஞனைப் புரிந்துகொண்டால் அவரு- டைய வார்த்தைகள் மக்களுக்கான குரல் என்பதை அறிந்துகொள்ள முடியும். எந்தக் கட்சிக்கும் அவர் எதிரானவர் அல்ல. எந் தக் கட்சிக்கும் சாதகமானவரும் அல்ல. அவர் இந்தச் சமூகத்தின் குரல்" என்றார், ராசி. அழகப்பன்.

ரஜனி, கமல் _ இருவரும் அரசியலுக்கு வருவார்களா? அல்லது இருவரது ஆவேச மும் வியாபர தந்திரம்தானா? வந்தாலும் இவர்களைத் தமிழக மக்கள் ஆதரிப் பார்களா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.


யோகா சோதிடம்



● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361



# செஞ்சீனா......

## 25 ஆம் பக்கத்தொடர்ச்சி

கூடியதாகத் தாமதிக்கப்பட்டது. நீரைத் தேக்கி வைக்கும் ஒதுக்கிடம் 22 கிலோ மீற்றர் கனவளவைக் கொண்டுள்ளது.1954 இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு74,518 சதுர மைல் தூரப்பரப்பைப் பாதித்து 33,169 மக்களைக் கொன்று 18,884,000 மக்களை இடம் பெயர வைத்தது. 8 மில்லியன் மக்களைக் கெண்ட வூகான் நகரம் மூன்று மாதங்களாகத் தண்ணீரால் நிறைந்திருந்தது. இதனால் இரயில் போக்குவரத்து 100 நாட்களுக்கு நடைபெறவில்லை இவ்வாறே 1998 இலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்களுக்கும் வேளாண்மைக்கும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது. இதனால் அரசுக்குப் பல மில்லியன் டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டது.

அணை கட்டப்பட்ட பின் மேலதிக நீர் தேக்கப்பட்டு வெள்ளப்பெருக்கு தடுக்கப்படுகிறது. மழைவீழ்ச்சி குறைவானது டிசம்பர் முதல் மார்ச் காலங்களில் நீர் வெளிவிடப்படுகிறது. இதனால் வேளாண்மைக்கும் தொழிற்சாலைகளுக்கும் இது பயன்படுகிறது. அத்துடன் கப்பல் போக்குவரத்தும் பயனடைகிறது. அணைக்கட்டின் மேற்பகுதி நீர் 175 மீற்றரிலிருந்து 145 மீற்றராகக் குறைகிறது இதனால் மழை வீழ்ச்சியின் போது போதியளவு நீர் தேக்கப்படுகிறது. மேலும் இவ்வாறு வெளிவிடப் படும் நீர் கீழ் பகுதியிலுள்ள கெசுபா அணையை இயக்குவதற்கும் பயன்படுகிறது.

**கப்பல்பூட்டு:** இவ்வாறான பூட்டுக்களை அமைப்பதால் கப்பல் போக்குவரத்து அதிகரித்து பணத்தொகை 30 முதல் 37%



குறைக்கப்படுகிறது. மிகவும் பெரிய கப்பல்கள் சங்காயிலிருந்து 1500 மைல் தூரம் சொங்கிங்குச் செல்வதற்கு இப்பூட்டுக்கள் வழிவகுக்கின்றன. இதனால் இக்கப்பல் போக்குவரவு ஐந்து மடங்கு உயர்கிறது. கப்பல் பூட்டு என்பதை விளங்குவது நல்லதென நினைக்கிறேன். அதாவது ஓர் அணைக்கட்டின் மேற்பகுதியில் நீர்மட்டம் கீழ்பகுதியைக் காட்டிலும் உயர்வாக இருக்கும். எனவே கீழ்பகுதியிலிருந்து செல்லும் பெரிய கப்பல்கள் மேற்பகுதி நோக்கிச் செல்லும் போது இலகுவாக அந்நீர்மட்டத்துக்குச் செல்வதற்காக இப்பூட்டு அமைக்கப்பட்டிருக்கும். அதாவது கப்பல் தாழ்வான நீர்மட்டத்திலிருந்து அணைக்கட்டுக்கு அருகில் சென்றவுடன் இப்பூட்டின் வாயில் திறந்து கப்பலை உட்செல்ல விடும். உள்ளே சென்றவுடன் அவ்வாயில் மூடிக்கொள்ளும். பின் மேல் மட்ட நீரிலிலுள்ள வாயில் திறக்கப்படும் அப்போது மேல்மட்ட நீர் உட்புகுந்து கப்பலை அம்மட்டத்துக்குப் படிப்படியாக உயர்த்தும். எனவே திடீரென உயர்மட்டத்துக்குக் கப்பல் செல்லும் அபாயகரமான செயல் படிப்படியாக உயர்த்துவதால் இலகுவாக்கப்படுகிறது.

கப்பல் உயர்ந்து பின் அம்மட்டத்தில் பயணிக்க ஆரம்பிக்கும். நாங்கள் பிரயாணஞ் செய்த உல்லாச கப்பலின் மேல்தளத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தோம். இப்பூட்டுக்கள் இரண்டு அருகருகே அமைக்கப்பட்டிருந்தன. ஒன்று மேல்நோக்கிச் செல்லும் கப்பல்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. அணை கட்டப்படுவதற்கு முன் இப்பகுதியில் கப்பல்கள் செல்வது ஆபத்தானதாய் இருந்தது. வெள்ளப்பெருக்குக் காலங்களில் கப்பல்கள் சில பிரயாணத்தை நிறுத்தி வைத்திருந்தன. இந்தப் பூட்டு ஒவ்வொன்றும் 280 மீற்றர் நீளமும் 35 மீற்றர் அகலமும் 5 மீற்றர் ஆழமும் கொண்டவை. இதனூடாக 10,000 தொன் எடையுள்ள கப்பல்கள் செல்லலாம். அணை கட்டுவதற்கு முன் ஒரு வருடத்துக்கு18 மில்லியன் தொன் பொருட்களே எடுத்துச் செல்லப்பட்டன. 2004 முதல் 2007 வரையிலான காலப்பகுதியில் 198 மில்லியன் தொன் சரக்குகள் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டன. இதனால் பொருட்களின் நிறை ஆறு மடங்காக அதிகரிக்கப்பட்டு கப்பல் செலவு 25% குறைவடைந்தது.



**கப்பல் தூக்கி**

கப்பல் பூட்டுக்களுடன் கப்பல் தூக்கி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. கப்பல் பூட்டிலிருந்து ஒரு கப்பல் வெளிவரக் குறைந்தது நான்கு மணித்தியாலங்களாவது எடுக்கும். ஆனால் கப்பல் தூக்கி இதனை 30 முதல் 40 நிமிடத்தில் செய்துவிடும். இத்தூக்கி 3000 தொன் எடையுள்ள கப்பல்களைத் தூக்கும். இதற்கு 113 மீற்றருக்குக் கப்பல் உயர்த்தப்படுகிறது. இத்தூக்கியின் அடித்தளம் 120X18X13.5 மீற்றர். இவ்வாறு கப்பல் தூக்கப்படும் போது நீர்மட்டம் திடீரென மாற்றமடையும், அணைக்கட்டின் கீழ்பகுதி நீர்மட்டம் 12 மீற்றருக்கும், மேல்பகுதி 30 மீற்றருக்கும் மாறுபடும் போது இத்தூக்கி வேலை செய்ய வேண்டும்.

இக்கப்பல் தூக்கி சுரிக்கியர் முறையில் பற்களுள்ள பக்கச்சட்டத்தில் வேலை செய்கிறது. இப்பொறிமுறை கட்டுதல் 2007 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான கோபுரங்கள் 195 மீற்றர் உயரமானவை இக்கட்டுமானப்பணி 2012 இல் நிறைவடைந்தது. இத்தூக்கியை வடிவமைத்துக் கட்டியது லாமேயர் என்ற ஜெர்மன் கம்பனி. இதன் வெள்ளோட்டம் 2016 ஜுலையில் நடைபெற்றது. ஜுலை 15 இல் ஒரு சரக்குக் கப்பல் 8 நிமிடத்தில் உயர்த்தப்பட்டது. இந்தத் தூக்கி உத்தியோகபூர்வமாக செப்டம்பர் 2016இல் இயங்க ஆரம்பித்து. இந்த அணைக்கட்டைப் பார்த்தபோது மனிதனால் இவ்வாறான சாதனையைச் செய்ய முடிந்ததே என ஆச்சர்யப்பட்டேன். நாள்தோறும் ஏராளமானவர்கள் இந்த இடத்துக்கு வந்து கொண்டே இருக்கின்றார்கள். அங்குள்ள அழகாக கட்டப்பட்டுள்ள மண்டபத்தில் இந்த அணைக்கடடின் மாதிரி வடிவம் அமைக்கப்பட்டு பல்வேறு பகுதிகளை விபரிக்கப் பலர் அமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் அங்கு கட்டிட வேலை நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் கொண்ட நூல்களும் வீடியோவும் விற்பனைக்கிருந்தன. ஒரு வீடியோவையும் ஒரு நூலையும் ஞாபகார்த்தமாக வைத்திருக்க வாங்கி வந்தேன். இது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு சம்பவம்.

உசாத்துணை- விக்கிபீடியா

(தொடரும்....)

# மகிழ்ச்சியாக....

## 33 ஆம் பக்கத்தொடர்ச்சி

யம் பற்றி மக்களுக்கு இயலுமானவரை அறிமுகம் செய்து வைக்கவும் அது அவரை இட்டுச் சென்றுள்ளது. யார் எவர் அதைத் தேடிக் கண்டுகொள்ள ஆர்வம் காட்டுகிறார்களோ அவர்களுக்கு அவர் உதவி செய்கின்றார்.

நேற்றைய தினத்தில் எவ்வித உண்மை நிலையும் இல்லை. நாளைய தினத்திலும் எவ்வித உண்மை நிலையும் இல்லை என மஹராஜி கூறுகின்றார். உங்களிடம் இருப்பதெல்லாம் இந்தக் கணம் மட்டும்தான். இப்பொழுது எனப்படும் இத்தருணத்தில்தான் எவ்வளவோ விடயங்கள் உள்ளன. இப்பொழுது எனப்படும் இந்த ஒரு விடயத்தில்தான் உங்கள் உயிர் வாழ்விற்கான அந்த ஆனந்தம், அந்த நிறைவு, அந்தச் சந்தோசம் என்பன உள்ளன.

“கதவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அழைப்பிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. வந்து அந்த மகிழ்ச்சியை கொண்டாடுங்கள். வந்து நிறைவடையுங்கள். வந்து உங்கள் வாழ்வைச் சரியாக்கிக் கொள்ளுங்கள்.

அண்மையில் நடைபெற்ற உரையின் போது மஹராஜி அவர்கள் குறிப்பிடும் ஆனந்தத்தின் அனுபவம் பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலிறுத்தார்.

கேள்வி : எல்லோராலும் உள்ளே உள்ள ஆனந்தத்தை அனுபவிக்க முடியுமாயின் எதற்காக அநேக மக்கள் மகிழ்ச்சியாக வில்லை?

பதில்: யாராவது ஒருவர் உங்களுக்கு மகிழ்ச்சியைக் காட்டித் தருவதாகக் கூறினால் நீங்கள் என்ன கூறுவீர்கள்? ஆம் நான் அதை எடுத்துக் கொள்கின்றேன் என நீங்கள் கூறுவீர்கள். எனினும் ஒவ்வொரு அழைப்பிதழினதும் கடைசிக் கட்டத்தில் தான் நீங்கள் நிற்கின்றீர்கள். ஒவ்வொரு உண்மை நிலயினதும் இறுதிக் கட்டத்தில் தான் நீங்கள் நிற்கின்றீர்கள்.

உண்மை நிலை பற்றி எமக்குத் தெரியும் என நாம் எண்ணுகின்றோம். இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரும் உலகில் உள்ள விடயங்கள் எல்லாவற்றையும் நல்லது கெட்டது எனப் பிரிக்கின்றார்கள். நாம் இந்த உலகில் எமது ஒரு புறத்தில் நல்லது என்ற பெயர் பொறிக்கப்பட்ட ஒரு பையும் மறுபக்கத்தில் கெட்டது என்ற பெயர் பொறிக்கப்பட்ட ஒரு பையுமாக இரு பைகளைக் காவிக்கொண்டு செல்கிறோம். இந்த உலகில் உள்ள எல்லா விடயங்களும் இந்த ஏதாவது ஒரு பையினுள் சென்றடைகின்றன.

இந்த எல்லா விடயங்களிலும் உண்மையானது எது? நல்லது கெட்டது என்னும் எல்லைகளுக்கு அப்பால் சென்று நீங்கள் விடயங்களைப் பார்த்தால் விடயங்கள் எதுவோ அவற்றை அவையாகவே உங்களால் பார்க்க முடியும். அவை எப்படி உள்ளன என்பதை நீங்கள் காணும் போது அவை மிக அழகானவையாக இருக்கும்.

ஆனால் இந்த உலகின் எண்ணக் கருத்துக்களை விட்டுவிடுவது அவ்வளவு எளிதானதல்ல. நீங்கள் காவிக் கொண்டிருக்கும் அந்தப் பைகளை கீழே வைப்பது அவ்வளவு எளிதானதல்ல.

கேள்வி : ஒரு மனிதன் எவ்விதம் அந்த விடயங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட முடியும்.

பதில்: நீங்கள் சிறுவனாக இருந்தபோது, நீங்கள் ஒரு குழந்தையாக இருந்தபோது ஒரு பொருளைப் பார்த்து நல்லது கெட்டது, சரி பிழை என்னும் எல்லைகளுக்கப்பால் சென்று அது எதுவோ அதை அதுவாகவே பார்க்கும் சாத்தியம் உங்களிடம் இருந்தது. எமது வாழ்வில் எமக்கு ஆனந்தம் தேவையாயின் அப்போது நாம் அந்தக் குழந்தையின் உள்ளத்தை மீளக் கொண்டுவரப் போகின்றோம். எப்பொழுது எங்களால் மீண்டும் ஒரு முறை தூய்மையான கண்களால் பார்க்க ஆரம்பிக்க முடியுமோ அப்போது எம்மால் எமக்குத் தரப்பட்டுள்ள கொடையை, உயிர் வாழ்வு என்னும் கொடையைக் காணக்கூடியதாக இருக்கும். இதுதான் அந்தத் தேவை. குழந்தையின் உள்ளத்துடன் இருத்தல்.

குழந்தையில் உள்ள புத்தம் புதிய தன்மை என்ன? ஒரு குழந்தையின் முகத்தைப் பாருங்கள் அதில் நேற்றைய தினம் பற்றிய எந்தச் சுவடும் இல்லை. இப்பொழுது ஒரு வயது வந்தவரின் முகத்தைப் பாருங்கள். நீங்கள் எதைக் காண்கிறீர்கள்? அது நேற்றைய தினத்தின் சுவடுகளால் நிறைந்திருக்கும்.

நான் கூறுவதெல்லாம் நேற்றைய தினத்தின் சுவடுகளை எடுத்து விடுங்கள். நீங்கள் ஒரு காலத்தில் இருந்ததுபோல் மீண்டும் நீங்கள் அந்தக் குழந்தையாக மாறுங்கள். அந்தக் குழந்தை எங்கும் போய்விடவில்லை. மீள அந்தக் குழந்தையாக மாறுங்கள்.

மீண்டும் எப்பொழுது உங்களால் உங்கள் உள்ளத்தின் தூய்மையான கண்களினால் பார்க்க ஆரம்பிக்க முடியுமோ அப்பொழுது உங்களால் உங்களுக்குத் தரப்பட்டிருக்கும் அந்தப் பரிசை, உயிர் வாழ்வு என்னும் பரிசைக் காணக்கூடியதாக இருக்கும்.

கேள்வி: கடந்த காலத்தை கைவிட்டுவிடுவது என்பது கருத்தைத் தருவதாக இருந்தாலும் நான் எதிர்காலத்தைப் பற்றிக் கவனத்தில் கொள்ளத் தேவையில்லையா?

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)

# முதுமை இனிமை

**படித்ததில் பிடித்தது**

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**- ராஜதுரை -**

முதியோர்களுக்கு என்றே தனி மருத்துவ மனைகள். ரிட்டயர்மென்ட் ஆனவர்களுக்கென்றே தனி அப்பார்ட்மென்ட்கள். சென்ற தலைமுறையில் முதியோர் இல்லம் என்றால், இவை அதற்கும் கொஞ்சம் மேலே. 60 வயதை நெருங்கும்போது, அவர்களின் விருப்பப்படி வாழவிடாத பட்சத்தில், தங்களின் வாழ்க்கையை, வாழும்விதத்தை அவர்களாகவே நிர்ணயித்துக்கொள்ள, இவை உதவி புரிகின்றன. தன் வீடு, தன் சொந்தம், தன் மக்கள் என்று வாழ்ந்தவர்கள், தனிமைத் துயரில் சிக்கும்படி அவர்களை ஒதுக்கி வைத்து விடுகிறது இளைய தலைமுறை. இன்று இளமையாக இருக்கும் நமது அடுத்த பருவம் முதுமைதான் என்ற உண்மை அவ்வளவு எளிதில் நமக்கு உறைப்பது இல்லை.

30 வயதைத் தாண்டுவதற்கு உள்ளாகவே, நோய்கள் பலவும் நமக்குள் எட்டிப் பார்த்து விடுகின்றன. என்றாலும், அது குணப்படுத்துவதற்கு எளிய வயது என்பதால், தப்பித்துக் கொள்கிறோம். அதுவே, முதுமையில் வந்தால், சிகிச்சைக்கு உடல் ஒத்துழைக்க வேண்டுமே. முதுமையில் வரும் உடல் நலப் பிரச்னைகளை, போலவே மனப் பிரச்னைகளும் அதிகம். பார்வைக் குறைபாடு, தடுமாற்றம், மூச்சுத் திணறல், எலும்புத் தேய்மானம் எனப் பல நோய்கள் குறிவைப்பதும் முதியவர்களைத் தான். நோய் வந்தபின், அன்றாடம் செய்யும் சின்னஞ்சிறிய செயல்களுக்குக் கூட, மற்றவர்களை சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அது, மனதளவில் அவர்களைப் பாதிக்கும். உடல் தொடர் பான நோய்களுடன் மனம் தொடர்பான நோய்களும் ஆட்டிப்படைக்கும் வயதில் தகுந்த முன்னெச்சரிக்கையுடனும், வாழ்வியல் முறைகளில் சில மாற்றங்களைச் செய்வதாலும், முதுமையிலும் இனிமையாக வாழலாம்.

### நோய்களை வெல்லலாம்!

முதியவர்களைப் பாதிக்கும் முக்கியமான நோய் எலும்பு தொடர்பானது. வயதானால், முதலில் முந்திக்கொண்டு வருவது மூட்டுத் தேய்மானம், முழங்கால் எலும்பு அழற்சி, எலும்புகளின் இணைப்பில் ஏற்படும் வலி ஆகியவைதான். 80 சதவீதத்தினருக்கு, எலும்பு தொடர்பான பிரச்சினைகள் இருக்கின்றன என்கின்றன ஆய்வுகள். இடுப்பு எலும்பு முறிவுகள் அதிகமாக வருவதற்குச் சாத்தியக்கூறுகள் அதிகம். வயது மூப்பு காரணமாக, எலும்புகள் வலு இழக்கும். இதனை ஒஸ்டியோபொரோசிஸ் (Osteoporosis) என்பர். லேசாகத் தடுமாறி விழுந்தாலும் உடைந்துவிட வாய்ப்புகள் உண்டு.



### நடந்தால் ஆயுள் அதிகரிக்குமே...

வாரத்துக்குக் குறைந்தது ஐந்து நாட்கள் தினமும் 30 நிமிடம் வீதம் கட்டாயம் நடைப்பயிற்சி செய்தல் வேண்டும். எலும்புகளின் ஆரோக்கியத்துக்கு வைட்டமின் டி அவசியம். கல்சியம் மாத்திரை சாப்பிட்டாலும் அதைக் கிரகிக்க உடலுக்குச் சூரிய ஒளி தேவை. இளஞ்சூரிய ஒளி உடலில் படும்படி இருப்பது நல்லது. எனவே, காலை வேளையில் நடைப்பயிற்சி செய்யலாம். வீட்டில் இருக்கும் முதியோரை நடைப் பயிற்சி செய்ய ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் செல்லத் தயங்கினால், பக்கத்தில் உள்ள மார்க்கெட்டுக்கோ கடைக்கோ சென்று வரும்படியும், பள்ளியில் பேரன், பேத்தியை விட்டு வரச்செய்யலாம். அதோடு, அவர்களுக்கு சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் கட்டுக்குள் இருக்கும்படியும் கவனமாக இருக்க வேண்டும். மூட்டுத் தேய்மானத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், ஊசி, மாத்திரைகள் வழியாகவும் இடுப்பு எலும்பு முறிவு போன்றவற்றை அறுவை சிகிச்சை மூலமாகவும் சரிசெய்ய முடியும்.

### சும்மா இருத்தல் சுகம் அல்ல!

ஓய்வு எடுக்கிறேன் என எப்போதும் வீட்டில் சும்மாவே இருப்பதும் நோய்களை வரவழைக்கும். ஏதேனும் ஓர் செயலைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். 60 வயது வரையில் வேலையை மட்டுமே செய்து கொண்டிருந்த உடல், திடீரென முழு ஓய்வு எடுக்கும்போது அதன் சமநிலை பாதிக்கும். ஏதேனும், வேலையைச் செய்து கொண்டே இருப்பவர்களுக்கு, பக்கவாதம், மாரடைப்பு போன்ற நோய்கள் வருவது, 27 சதவிகிதம் தவிர்க்கப்படுவதாகச் சொல்கின்றன ஆய்வுகள். இயங்கிக் கொண்டே இருப்பதால், தோல் சுருக்கம், முதுகு வலி, முழங்கால் தேய்வு போன்ற நோய்கள் வராது.

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)



# ஆண்டு நூற்றைம்பது அன்னைக்கு



ஆண்டுநூற் றைம்பது அன்னைக்கு இன்றுமுதல்
காண்டற் கினியநற் காரிகையே _ மாண்டஉன்
மக்களும் மறறுமுள மாக்களும் உன்னாட்சி
தக்கவைத் துள்ளதுவே தான்.

நீர்நிறை நாடு நிலத்தோடு காடுகளும்
பூர்வீக மக்களின் பூர்வீகம் - சீரறவே
நாடுதேடி வந்தவர்கள் நாட்டையே சொந்தமாக்க
நீடுவாழ்ந்தோர் நீங்கினரே தான்.

வர்த்தகராய் வந்தவர்கள் வாய்ப்பிங்கு கண்டதனால்
அர்த்தமுள்ள வாழ்வை அமைத்தார்கள் - தர்க்கமிட்டோர்
வல்லமை யற்றதனால் வாழ்விடத்தை விட்டுவிட்டு
மெல்ல நகர்ந்தனரே மேற்கு.

காடுவெட்டி நாடாக்கிக் காய்வின்றி வாழ்வமைக்க
வீடுகட்டி வீழும் பனிக்கஞ்சா _ நாடிதனைச்
சொந்தமாய்க் கொண்டிதனைச் சொர்க்கமாய் ஆக்கியதால்
இந்தநா டெல்லோர்க்கும் ஏற்பு.

கற்றறிந்தோர் ஆட்சியினைக் கைப்பற்றி நன்முறையில்
தற்பெருமை அற்றவராய்த் தன்னார்வம் - உற்றவராய்
ஆழும் திறமையால் ஆற்றலோங்க மக்களின்
வாழும் சிறப்புமிங்கே வாய்ப்பு

நல்லவர்கள் ஆட்சியிலே நாடு செழிக்கிறதே
செல்வம் செழித்துச் சிறந்தோங்க _ நல்லதோர்
கட்டமைப்பும் நாட்டின் கடமை உணர்வோங்கத்
திட்டமிட்ட ஆட்சிச் சிறப்பு.

போர்விரும்பா நாயகியோ போராடும் நாடுசென்றே
ஆர்வமுடன் தொண்டாற்றும் ஆர்வலர்கள் - பார்போற்ற
நற்பணி ஆற்றுகின்ற நம்மவர்கள் செய்திறனை
உற்றுணரும் நாடுகள் ஓம்.

என்னருமைத் தாயே எழிலாள் கனடாவே
தன்மானம் மிக்கவளே தாரணியில் - உன்புகழ்
ஓங்கி ஒலித்திட ஒத்துழைப்புத் தந்திடுவோம்
ஈங்கிது உண்மையே ஏற்பு.

ஆக்கம்: முருகேசு மயில்வாகனன்

# கனடா 150



நூற்றி யைம்பது வோநின் னகவை
நுகர்வள இளமகளே!
போற்றி ஓ கனடா ஓ போற்றி
புகழுடன் வாழியவே!

செறிந்த காடு உறைந்த மேடு
சிறந்த ஆறுகுளம்
திறந்த வெளிகள் திரண்ட மலைகள்
நிறைந்த திருமகளே!

சென்லோ ரன்சும் நயாக ராவும்
சிறந்த கனிவளமும்
மன்பேர் றொக்கியும் பிரேரீ வெளியும்
வரையும் நின்புகழே!

திசைகள் மூன்றில் திரைகடல் திகழ
தெற்கினில் அமெரிக்கா
இசைவுடன் அமைந்த எல்லைகள் தமக்குள்
இணையற்ற இராச்சியமே!

ஒற்றுமை யுடனே அரசுகள் இணைய
ஒருதனி நாடாகி
பெற்றநற் பெயரைப் பீடுடன் வளர்த்துப்
பெரியவ ளாகிவிட்டாய்!



ஆங்கி லேயர் பிரான்சு மக்கள்
ஆதி இனத்தவர்கள்
தாங்கி இன்னும் பலவின மக்களை
தனித்துவம் நீ வளர்த்தாய்!

ஏற்ற கல்வி செல்வம் வீரம்
ஈடில் சுகாதாரம்
ஆற்றல் ஆர்வம் கைத்தொழில் ஆக்கம்
அனைத்தையும் கொண்டாய் நீ!

மேப்பிள் இலையால் இயற்கையின் மேன்மை
மேதினிக் கெடுத்துரைப்பாய்
காப்பு முறையால் காடுறை உயிர்கள்
கவலைகள் தீர்த்துவைப்பாய்!

பலமொழி சமயம் பண்பு வழக்கம்
பல்லினச் சமுதாயக்
கலைநகை அணிந்தே கலகலக் கின்றாய்
கற்பகக் கனடாவே!

தூய உள்ளம் தூநல மேனி
சுதந்திர நடையுடைகள்
பாயும் கருணை பரந்த கொள்கை
பாருக்கு நன்கொடைகள்!

அல்லல் பட்டே ஆற்றா தோடி
அகதிகளாய் வருவோர்
தொல்லை தீர்த்துத் துணிவும் வார்த்துச்
சுகவாழ் வளித்திடுவாய்!

தனியோர் குடியாள் தவித்தால் கலங்கித்
தாய்போற் காத்திடுவாய்!
மனிதர் உரிமை மதித்துக் கண்ணின்
மணிபோற் பேணிடுவாய்!

நலமில் வறிய நாடுகள் வாழ
நற்கரம் நீட்டிடுவாய்
உலகில் அமைதிக் குழைத்தே நின்றன்
உயர்வினை நாட்டிடுவாய்!

வாழ்க நின்றன் வல்லமை வளங்கள்
மனிதாபக் கொள்கை
வாழ்க ஒற்றுமை சுதந்திர உணர்வு
வையகம் போற்றிடவே!

ஏற்றம் மிகுந்த இணையில் நாடு
எங்கள் எழில் வீடு!
போற்றி ஓ கனடா ஓ போற்றி
புகழுடன் வாழியவே!

கவிஞர் வி. கந்தவனம்



# முதுமை.....

37 ஆம் பக்கத்தொடர்ச்சி

### வலிகளை விரட்டலாம்!

மூட்டு வலி, முதுகு வலி, கை, கால் வலியைத் தொடக்கத்திலே கண்டறிந்து, சிகிச்சை செய்துகொள்வது நல்லது. இதனால் உடல்நலமும் மனநலமும் சீராக இருக்கும். சாதாரண வலிதானே என்று கவனிக்காமல் விட்டால் வலியால், மன உளைச்சலுடன் வாழ நேரிடும். முறையான சிகிச்சை எடுத்துக்கொள்வதன் மூலம் ஆரோக்கிய மான வாழ்வைத் தொடரலாம்.

### வீட்டை நவீனமாக்கலாம்!

இருந்த இடத்தில் இருந்து மிக அத்தியாவசியமான, அந்தரங்கத் தேவைகளுக்குக் கூட பிறரை நாடுவது மனதளவில் அவர்களை வெகுவாகப் பாதிக்கும். முதியோருக்கு அத்தகைய எண்ணங்கள் வராமல் தடுக்க வேண்டியது முதற் கடமையாக வைக்க வேண்டும். வயதானவர்களுக்கு ஏற்ப, பிரத்தியேகப் பொருட்கள் தற்போது வந்துவிட்டன. படுத்தபடுக்கையாக இருப்பவர்கள் கூட, தனது படுக்கையை ரிமோட் மூலம் அட்ஜஸ்ட் செய்துகொள்ள முடியும். இயற்கை உபாதைகளைக் கழிக்க, சுலபமாக்க உதவும் வீல் சேர்கள் கிடைக்கின்றன. சௌகரியத்துக்கு ஏற்ப கழிப்பறைகளின் உயரத்தை சரிசெய்தும், கழிப்பறையில் அமர்ந்து எழுந்திருக்கப் பிடிமானங்களைப் பொருத்திக் கொள்வதற்கும் வசதிகள் வந்து விட்டன. இதனால், அவர்கள் சிரமப்படுவதைத் தடுக்கலாம்.

ஏதேனும் அவசரம் என்றால் உடனே தகவல் தெரிவிக்க, கழிப்பறையில் எமர்ஜென்ஸி பட்டனைப் பொருத்திக் கொள்ளலாம். இப்படி வீட்டில் சிறிய மாற்றங்களைச் செய்து நவீனப்படுத்துவதன் மூலம் முதியவர்கள் வசதியாய் வாழ வழி செய்து கொடுக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் தங்களைப் பிள்ளைகள் நன்றாகக் கவனித்துக் கொள்கின்றனர் என்ற சிந்தனை தோன்றும். அதுவே அவர்களை இன்னும் உற்சாகத் துடன் இருக்கச் செய்யும்.

### சீரான உணவுப் பழக்கத்துக்கு முதல் இடம்

வயதானோருக்கு செரிமானப் பிரச்சினை தவிர்க்க முடியாததாய் இருக்கும். உடல் உழைப்பு குறைவதாலும், ஒரே இடத்தில் பெரும்பாலும் இருப்பதாலும் செரிமானம் குறையும். எனவே, சரியாகப் பசிக்காது. ஆனாலும், நேரத்துக்குச் சாப்பிட்டுவிடுவர். இவர்களுக்குச் செரிமானப் பிரச்சினைகள் உண்டாகாமல் தவிர்க்க, எளிதில் செரிக்கக் கூடிய நார்ச்சத்துள்ள உணவுகளைச் சாப்பிடக் கொடுக்கலாம். புரதம் நிறைந்த உணவுகளைத் தேவையான அளவு தர வேண்டும். பால், மோர், கேழ் வரகு, தோடம் பழம், வாழை, கொய்யா, பச்சைக் காய்கறிகளை அதிகமாகச் சாப்பிடும்படி செய்யலாம். உணவில் அக்கறை கொண்டாலே வயிறு தொடர்பான பிரச்னைகள் வராது. சீரான உணவுப் பழக்கம் அவர்களைப் புத்துணர்வோடு வைத்திருக்கும்.

### காது கொடுத்துக் கேளுங்கள்!

மருந்து, உணவு, பணம் எல்லாவற்றையும் விடப் பிள்ளைகள், உறவினர்களின் நேரம் தான் அவர்களுக்குச் சிறந்த மருந்துவம். வயதானால் யாரும் அவர்களைக் கவனிக்காமல் செல்வதும், அவர்களது பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கடந்து செல்வதும் தான் இங்கே அதிகம். அவர்களுக்கு உங்கள் காதுகளை சற்று நேரம் கொடுங்கள். நல்லதோ, கெட்டதோ அவர்கள் சொல்வதைச் சற்று நேரம் பொறுமையாகக் கேளுங்கள். ஏனெனில், தன் பேச்சுக்கு மரியாதை இல்லை, தான் சொல்வதைக் கேட்பது இல்லை என்ற எண்ணமும் ஏக்கமும் தான் அவர்களின் பிரச்சினை.

ஆறுதலாக இருங்கள். ரி.வி, செல்போன் போன்ற சாதனங்களைவிட நேரடியாக அவர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள். நாம் செலுத்தும் அன்பையே வயதானவர்கள் அதிகம் விரும்புகின்றனர். அவர்கள் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்டால் போதும். அவர்களின் மனம் ஆறுதல் அடைந்து விடும்.



### முதியோர் பேச்சு குறை அல்ல!

முதியவர்களுக்கு, வீட்டில் யாரும் தான் பேசுவதை காது கொடுத்து கேட்பது இல்லை என்கிற நிலை வருகிறபோது, அதற்கு வடிகாலாக மற்றவரிடம் பகிர்ந்து கொள்கின்றனர். நல்லதை தன் அனுபவத்தில் இருந்து சொன்னால், நீங்கள் கேட்காதபட்சத்தில் அதை வேறெங்காவது கொட்டித்தீர்க்க வேண்டும் என்கிற மன நிலை இயல்பாகவே வந்து விடும். அதைக் குறை கூறுவதாக எடுத்துக் கொள்ளாமல், ஆலோசனைகளாகவே கருத வேண்டும். அவர்கள் சொல்வதைக் கேட்கும்பட்சத்தில் வெளியில் சொல்வதை அவர்களாகவே தவிர்த்துவிடுவர்.



### விருப்பத்துக்கு மரியாதை கொடுங்கள்!

பெரியவர் என்றாலே வீட்டில்தான் அடைந்திருக்க வேண்டும் என்கிற எண்ணம் பலருக்கும் வந்துவிடுகிறது. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பதால், மன அழுத்தம் தான் அதிகரிக்கும். காலாற வெளியில் நடைப் பயிற்சி செய்யலாம். பீச், பார்க் செல்ல முடியாதவர்கள், வாகன நடமாட்டம் குறைவாக உள்ள சாலையைக்கூட நடைபயிற்சி செய்யப் பாவிக்கலாம். அடிக்கடி நடக்கும் பாதையை மாற்றிக்கொள்ள வேண்டும். புதிதுபுதிதாக வழியில் காணும் காட்சிகள், சந்திக்கும் நபர்களால் மனதளவில் மாற்றம் ஏற்படும். அவர்களிடம் மனம்விட்டுப் பேசும் போது, புத்துணர்ச்சி அடைந்ததைப் போல உணருவர்.

### தனிமையை இனிமையாக்கலாம்!

பேரக் குழந்தைகளை தாத்தா, பாட்டியிடம் விடும் பழக்கம் இன்று வெகுவாகக் குறைந்திருக்கிறது. கவனமாகப் பார்த்துக்கொள்ள மாட்டார்கள் என்ற மனநிலை அவர்களை குழந்தைகளிடம் இருந்து தனிமைப்படுத்தி விடுகிறது. மகனுக்கோ மகளுக்கோ கண்டிப்பான அப்பாவாக இருந்தவர், பேரப் பிள்ளைகளிடம் விளையாட்டுப் பொம்மைகளாக மாறிப்போகின்றனர் என்ற உளவியல் உண்மையைப் புரிந்துகொண்டால் போதும். குழந்தைகளே அவர்களைச் சரிப்படுத்தும் மாமருந்து என்ற உண்மையை உணர வேண்டும். சின்னக் குழந்தைகளையும் பெரிய குழந்தைகளான முதியவர்களையும் பழகவிட்டால், மனதளவில் ஏற்படும் பாதிப் பிரச்னைகள் தீர்ந்துவிடும். தனிமையும் வெறுமையும் நீங்கி, கலகலப்புடனும் உற்சாகத்துடனும் இருப்பர்.

மனதை அமைதியடையச்செய்யும் செய்யும் தியானம், எளிய யோகா பயிற்சிகள், மியூசிக் தெரப்பி போன்றவற்றில் பெரியவர்களை ஈடுபடுத்தலாம். இது அவர்களை உற்சாகத்துடனும், தன்னம்பிக்கையுடன் வாழச் செய்யும்.

ஹோம் கேர் சிஸ்டம் மூலம் செவிலியர்கள் வீட்டுக்கே வந்து, பெரியவர்களைப் பராமரிக்கும் வசதியும் தற்போது வந்துள்ளது. வயதானவர்கள் மருத்துவமனைக்கு செல்ல வேண்டியது இல்லை. முதியவர்களுக்கான பிரத்யேகப் பொருட்களை பயன்படுத்தி வேலைகளைச் சுலபமாக்கிக் கொள்ளலாம். சமச்சீரான உணவுப் பழக்கத்தை பின்பற்றுவதால், உடலுக்குத் தேவையான ஆற்றல் கிடைக்கும்.

குளிர்ந்த காற்றில் கிடைக்கும் ஓசோன் முதியவர்களுக்குப் புத்துணர்வும் மனஅமைதியும் தரும். காலை வேளையில் சின்னச் சின்னப் பயிற்சிகளைச் செய்வது, கண்களை மூடி மூச்சைக் கவனிப்பது போன்ற எளிய பயிற்சிகளைச் செய்யலாம்.

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# மகிழ்ச்சியாக....

36 ஆம் பக்கத்தொடர்ச்சி

பதில்: அநேக மக்கள் ஒவ்வொருநாளும் தாம் அதிகளவிலான விடயங்களைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுந்திருப்பது எனக்குத் தெரியும். பின் பொருநாள் அவர்களிடம் அவருடைய டாக்டர் அவர் உயிர் வாழ்வதற்கு இன்னும் இரண்டு மாதங்களே இருப்பதாகக் கூறினால் திடீர் என ஒவ்வொரு நாளும் முக்கியத்துவம் பெறுகின்றது. அவர்கள் செய்து வந்த சகல விடயங்களையும் திடீர் என நிறுத்திவிட்டு தமது முழு வாழ் நாளையும் மாற்றி விடுவார்கள். நான் அதைக் கண்டிருக்கிறேன். ஏன் அப்படி நடைபெறுகிறது?

நான் கூற விரும்புவது மிகவும் எளிமையானதும் அதேநேரம் மிகவும் ஆழமானது மாகும். இது எம் ஒவ்வொரு வருடனும் தனிப்பட்ட ரீதியில் தொடர்புடையது. மனிதர்கள் என்ற ரீதியில் இது எண்ணக் கருத்துக்களுடனோ அல்லது தத்துவங்களுடனோ தொடர்புபட்டதல்ல. இது ஒரு எளிமையான விடயத்துடன் தொடர்புபடுகின்றது. இந்த வாழ்வுடன், இந்த உயிர் வாழ்வுடன் தொடர்புபடுகின்றது. நாம் செய்யவேண்டியதெல்லாம் இப்பொழுது நமது பொறுப்புக்களாக இருக்கும் விடயங்களுக்கு மேலால் மேலும் ஒரு பொறுப்பை எடுத்துக் கொள்வதாகும். அந்தவொரு மேலதிகப் பொறுப்பானது இந்தப் பரிசை, இந்த ஆனந்தத்தை, இந்த அழகை, இனங் காணுவது. அந்த ஒரு விடயம் தான் உண்மையிலேயே எம்மை நிறைவு செய்யும்.

அந்தக்கதை உங்களைப் பற்றியது. நீங்கள் இந்த உலகில் வந்திருக்கின்றீர்கள். உங்களுக்கு மூச்சுத் தரப்பட்டுள்ளது. உங்களுக்கு அந்தப் பரிசு தரப்பட்டுள்ளது. உங்கள் வாழ்வில் அதை நீங்கள் ஏற்றுக் கொண்டு ள்ளீர்களா? நீங்கள் அந்த உணர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் வாழ்வில் அதை ஏற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் அதுதான் நடைபெறுகின்றது. எமக்கு அந்தப் பரிசு அபரிதமாகக் கிடைத்துள்ளது. எனினும் நாம் அதன் முக்கியத்துவத்தை, அல்லது அது எதைக் கருதுகின்றதோ அதைக் கண்டு கொள்வதில்லை.

ஆகவே யார் அந்தப் புத்திசாலி? அந்தப் புத்திசாலி யார் எனில் யார் நாளை என்று ஒன்றில்லை என எண்ணுகின்றானோ அவனே அந்தப் புத்திசாலி. அது ஏனென்று உங்களுக்குத் தெரியும் ஏனெனில் நாளை என்று ஒன்று அங்கே இல்லை. உங்களுக்கு மனிதர்கள் என்ற ரீதியில் நாளை என்று ஒன்று இல்லை. அங்கு இன்று மட்டுமே உள்ளது.



நகைச்சுவைத் தொடர் 356

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



காட்டுத்தீபோல் செய்திகள் பரவின எனப் படித்திருக்கிறோம்



இன்று உலகில் பல பாகங்களில் காட்டுத்தீ அழிவை
ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது கனடா, லண்டன், பிரான்ஸ், இத்தாலி
பல ஐரோப்பிய நாடுகள் மற்றும் உலகின் பல பகுதிகளில்

மண் சுடுகிறது மரங்கள் எரிந்து சாம்பலாகின்றன.
வன விலங்குகள் பல இறந்துள்ளன



மக்கள் இடம் பெயர்ந்தவண்ணம் இருக்கின்றனர்

ராமதூதன் அனுமானால் இலங்காபுரி எரிந்தது

பட்டினத்தாரின் சாபத்தால் சகோதரியின் வீடு எரிந்தது
முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென் லங்கையிலே
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே



சிவன் நெற்றிக்கண் திறந்தார் அகோர தீப்பிழம்பு நக்கீரனை எரித்தது
தமிழன் படித்து முன்னேறாமல் இருக்க வேண்டுமென்று நினைத்த
அரசால் யாழ் பொதுநூலம் 1983 மே 31 ல் எரிக்கப்பட்டது
காடுகளில் தீ பற்றிக்கொள்வது வேறு திட்டமிட்டு தீ வைப்பது வேறு

இலக்கியம் சமயம் சரித்திரம் சம்பவம்
ஆனால் இன்று நடப்பது இயற்கை அழிவு யார் பொறுப்பு?
மலை சாய்ந்துபோனால் சிலையாகலாம்.....
மண் சரிந்துபோனால்?



மக்கள் மண்ணோடு மண்ணாகப்போகிறார்கள் வீடுகள் கிராமங்கள்
அழிந்துவிடுகின்றன
அன்றைய காலத்தில் சரித்திர கதைகளிலுள்ள
பல இடங்கள் இன்றில்லை
பல ஊர்கள் நகரங்கள் இயற்கை அழிவால் இல்லாமல் போயின
இன்னொரு வகையில் அரசு அத்துமீறி சுவீகரித்து தமதென்று
பத்திரங்களை (களவாக) உருவாக்கியுள்ளது



ஆலயங்கள் மசூதிகள் தேவாலயங்கள்கூட இராணுவத்தினரின் கைகளில்
..பூசைகள் இல்லை வழிபாடு இல்லை மசூதிகளில் தொழுகை குரலின்றி
அழுகைதான் கேட்கிறது



உலகர்குளாம் வீட்டில் நிற்பதில்லை திருவிழா கொண்டாட்டம் அங்குமிங்கும்
திரிவதுதான்
கோவிலில் ஒரு பெண் ..அதிலை ,இவர் செருப்பு கழட்டி விட்டவர் ஒரு
செருப்பை காணேல்லை என



சத்தம்போட்டுக்கொண்டிருக்க ஐ பொட் அகிலா .....ண்டேஸ்வரி
செக்கண்ட்புளோர் செல்லம்மாவிடம் அந்த என் ஆளோட
செருப்பைக்காணோம் படம் பாத்தனீங்களோ என கேட்க செருப்பை
தேடியவர் பாகு பலயில் ரம்யா கிருஸ்னன் ஸ்ரைலிலில் பார்வை
பார்க்க செக்கண்ட்புளோர் செல்லம்மா... அரேகரா... அரோகரா என்று
சொல்லிக்கொண்டு விலக ஐபொட் அகிலா அதிகம் அரோகரா சொல்லி
பழக்கமில்லை .....அரோரா...அரோரா...என்று சொல்லிக்கொண்டு போக....சுற்றி
நின்றவர்கள் திரும்பிப்பார்க்க



பிக் பொஸ் கமெறாவைவிட வேகமாக உலகர் எல்லாவற்றையும்
கவனித்துக்கொண்டிருந்தார்
ரூபன் பிக் பொஸ்சில் வெளியேற்றப்பட்ட கஞ்சா கறுப்புபோல
சோர்ந்துபோய் வந்தான் ..அரிச்சனை 5டொலரோ 10 டொலரோ என

கணக்கு பார்க்கும் ரூபனுக்கு பார்க்கிங் ரிக்கற் வைத்து விடுவார்கள்
பொது இடங்களில் பொது நிகழ்ச்சிகளில் காரை உரிய இடங்களில்
பார்க் பண்ணாவிட்டால் காரை ரோ பண்ணிக்கொண்டுவிடுவார்கள்
தணிப்பட்டவரின் கட்டடம் வியாபார நிலையங்களில் அவர்கள்
அனுமதியின்றி வாகனத்தை விட்டுச்செல்வது பலவிதமான சட்டம்
எமது கவனயீனத்தால் வீணாக தண்டப்பணம் செலுத்தவேண்டி வருகிறது.




ஞாபகம் இருக்கிறதா ஓகஸ்ற் 1..15

2.உலக நட்பு தினம்



2.அலெக்சாண்டர் கிரகாம் பெல் நினைவுதினம்
(ரெலிபோனைக் கண்டுபிடித்தவர்)(மார்ச் 3 1847- -ஒகஸ்ட் 2 1922



4.பொன் கணேசமூர்த்தி (நினைவு தினம்) (ஒகஸ்ட் 4 2006)
எழுத்தாளர் வானொலி கலைஞர்



5.வீரகேசரி நாளிதழ் ஆவணிப்பட்டி பெ.பெரி. சுப்பிரமணியம் என்பவரால் 1930
ல் கொழும்பில் தொடங்கப்பட்டது

7..சிவிக் விடுமுறை




10. 610 முகமது நபி குர்ஆனைப் பெற்றநாள் இது இஸ்லாமில் "லாய்லாட்ஜ_
காதர்" 'நாள் எனப்படும்.



12.சர்வதேச இளையோர் நாள்.



13.1961 - ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு பேர்லினின் கிழக்கு மற்றும் மேற்கு
எல்லைகளை மூடி கிழக்கு ஜேர்மனியினர் தப்பிச் செல்லாவண்ணம் பேர்லின்
சுவரைக் கட்ட ஆரம்பித்தது (1961..1989)



13. பன்னாட்டு இடதுகைப் பழக்கமுடையோர் நாள்




## வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா வருடாந்த ஒன்று கூடல் - 2017

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 22ஆவது வருடாந்த
ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டிகளும்

காலம் : ஆகஸ்ட்மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10:30 மணி - மாலை 8:30 மணி
இடம் : Milliken Park, Area "C" (McCowan Rd & Steeles Ave. E)

அனைவரும் வருகைதந்து பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு சங்கத்தின் சார்பில்
அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செழியன் (416-949-7795) சிவா (416-562-4141) சிறீதரன் (416-661-3494)

## பாரத மாதாவின் எழுச்சி மகன்

தாயின் கருவில் தாயகம் காக்க..
உதித்து எழுந்த தலைமகனே!
தொப்புள் கொடி அறுத்து
தேசியக்கொடி உன்னை இணைக்கும்
என்று
தாயின் கண்ணீர் சொன்னது
புனித பூமியில் உதித்து மேலும்
புனிதம் சேர்த்த புனிதன் .. நீ!

அன்னை கொதிவிட்ட நேர்வாக்கு
அப்துல்கலாமின் தலைஎழுத்தை மட்டும்
அல்ல
இந்தியாவின் தலையெழுத்தை அன்றே
நிருபித்தவள்.. இந்தியா உச்சம் தொடும்
என..

விட்ட படிப்பை தொடரவிட்டது அக்காவின்
கை வளையல்
அடகுகடையில் தத்தளித்தது
உந்தன் மனதையும் அடகு வைத்தாய்..
இந்தியா வல்லரசாக வேண்டும்-என

கடைக்கோடி குடிமகன்
அரசு பள்ளியில்-தன்
அசுர உழைப்பால்
உச்சம் தொடலாம் என உச்சம்
தொட்டுக்காட்டிய முதல் குடிமகன் நீ!

விஞ்ஞானத்தை நாட்டிற்கும்
மெய்ஞானத்தை இளைஞர்களுக்கும்
விதைத்த பாரத மாதாவின் எழுச்சி மகன்..நீ

இன்பம் எதுவரை எதுவரை
துன்பம் எதுவரை எதுவரை
இன்பம் துன்பம்
இரண்டையும் ஓட ஓட விரட்டிய மனிதன் நீ..
இல்லை இல்லை மா மனிதன் நீ!



அன்னைத் தமிழ் மெய் ஞானம்
அசுரவளர்ச்சி விஞ்ஞானம்
அன்னை பாதம் தொட்டு...
உச்சம் தொட்ட எழுச்சி மகன் .. நீ!

உன்னைவிட உயர்ந்த கடவுள்
உலகில் இல்லை - இனி
எந்த மனிதனும் உன்னை போன்று
பிறக்கப் போவதும் இல்லை - இனி
தனக்கு நிகர் தானே - என்று
மதங்கள் யாவும் இணைந்து
வணங்கிடும் முதற்கடவுள்
பாரத மாதாவின் எழுச்சி மகன்!
எங்கள் அப்துல் கலாமே!
எங்கள் அப்துல் கலாமே!

ரா.நா.ஜெயராமன் ஆனந்தி



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
$5 Free Lycachat credit when you download
Lycachat
ஒருவருட இணைப்புச் சந்தா
$99
மட்டுமே
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
$99
மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
பன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள்
INDIA
CANADA
USA
INCLUDED
TENTKOTTA
EROSNOW
கடம்பன்
மாநகரம்
BAJIRAO MASTANI
SANAM TERI KASAM
DISHOOM
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
iPhone & iPad
Tablet & Mobile
Download on the App Store
GET IT ON Google Play
உங்கள் MOBILE DEVICE இல்
TENTKOTTA மற்றும் EROSNOW Apps ஐ
download செய்து திரைப்படங்களை
பார்த்து மகிழுங்கள்
Google play
Download on the App Store
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
SALES
647 968 1087
CUSTOMER SERVICE
647 931 1745
www.lycatv.tv
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCA MEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCA MEDIA LTD. THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

Ajax

CREMATORIUM & VISITATION CENTRE INC.

Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax

## New Crematorium / Visitation Centre



**Serving our Community at:**

384 Finley Avenue Ajax, ON L1S 2E3

Tel: 289-372-3300 / *info@acvc.info*

## பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.




FOR ALL YOUR MORTGAGE NEEDS
Access over 30 lenders with one application
Best Rates & Advice You Can Trust!
Purchase
Refinance
Renewal
PRE-QUALIFIED
PRE-APPROVED
Dedicated and knowledgable team...
Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...
Our commitment to you is to provide with the very best...
Pradeepraj Mani
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com
Gaya Kathir
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca
MORTGAGE ALLIANCE
































**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
www.vlambaram.com
www.tamilvanakkam.com


